புதிய சமுதாயம்

KDN 10657

ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன்



பல முனை

'எல்லோன்'

தூக்கமும் தொய்வும் துவளுறப் பிளவும்
தொடருவ தோஇவண் ஞாயம்? -இழி
மாக்களை நிகர்த்த தாக்குத லும்வீண்
வஞ்சமு மாஇன நேயம்? - இன்று
போக்கிட மற்றுப் புகலிடங் கெட்டுப்
போனவர் உளமுறு காயம் - ஆண்டு
நீக்கிட முனைந்து நிகழ்த்துவ ரிலையேல்
நிலைபெறு மாசமு தாயம்?

கூக்குர லும்அரை குறைமொழி யும்இவண்
கூடுவ தாலென்ன மாற்றம்? - பழம்
பாக்குர லாய்முனர் இடித்ததைப் புடைத்துப்
பார்த்திடல் பட்டுபோ ஏற்றம்? - கடை
மீக்குற மண்டி மிடைந்திடும் போழ்தில்
வேதனை உள்ளெழுஞ் சீற்றம்! - தமிழ்
மாக்குற ளும்அதன் மணிமொழி யும்இவர்
வாய்வழி போய்வந்து காட்டும்!

ஒருதடை யாஇலை இருதடை யாநம்முன்
ஒவ்வொரு தலைக்குமே தடையா? -இவண்
தறுதலை யாயொரு தமிழ்மகன் உலவின்
தலைகுனி வேஅறு வடையா? -இனம்
ஒருதலை யாகியே ஓங்குவ தெக்கால்
உணர்வுக ளேதடை மடையா? -இலை
நெருநலின் துவர்ப்பும் இன்றைய கசப்பும்
நீளுவ தேவரும் விடையா?

பூத்தன; உலகினில் புதுமைக ளாயிரம்
பொழுதொறும் வளர்ச்சியில் நின்று! - அணி
கோத்தன; கட்டுக் கோப்பினில் ஒன்றிக்
கூனிய இனங்களும் இன்று!- தம்முன்
தூர்த்தன; வேண்டாத் தொடர்புகள், இறும்பூ
தோங்கிடக் கண்டன வென்று! - ஆயின்
வேர்த்தனம்! வேர்த்தனம்! வெளிறிய நம்மினம்
விழிப்பினை அடைவதும் என்று?



அட்டைப்படம்: மாயன்

வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனையது உயர்வு — குறள்

புதிய சமுதாயம்

திருவள்ளுவர் ஆண்டு 2008 புரட்டாசி 24
கம்பம் 1 ∴ (10-10-1977) ∴ குடும்பம் 14

உயிர் கொடுத்த தொண்டர்கள்

கோலாலம்பூருக்கு அருகே எல்மினா தோட்டத்தில் அண்மையில் நேர்ந்த ஜப்பான் ஏர்லைன்ஸ் விமான விபத்து, மலேசிய மக்களுக்குக் குலைநடுங்க வைக்கும் பயங்கர அதிர்ச்சி அனுபவமாகும். மொத்தம் 33 பிரயாணிகளின் உயிரைக் குடித்த இந்த விமான விபத்து மலேசியா இதுவரை கண்டறியாத, படுமோசமான விமான விபத்தாகும். கொட்டும் மழையிலும், இடியிலும் நேரிட்ட இந்த விபத்தில் 46 பிரயாணிகள் உயிர் தப்பியது பெரிய அதிசயம் என்றே சொல்லவேண்டும்.

விபத்து நேரிட்டு ஏறத்தாழ 5 மணி நேரம் வரை விமானம் எங்கே விழுந்து நொறுங்கியது என்பதே புலப்படாமல், கடைசியாக எல்மினா தோட்டத்தில் ஒரு குன்றின் மீது இருகூறுகச் சிதறுண்டு, தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கக் கண்டு பிடிக்கப்பட்டது. இந்த ஐந்து மணி நேரத்திற்குள் விமானத்திலிருந்து குதித்து உயிர் தப்பிய ஒரு சில பிரயாணிகள்கூட திசை தெரியாது தங்களைக் காப்பாற்றிக் கூட்டிச் செல்வதற்கு யாரும் வரமாட்டார்களா என்று ஆவலோடு எதிர்பார்த்து ஏங்கி நின்றனர். நல்லவேளையாக அன்று நள்ளிரவுக்கு முன்பு போலீஸ் படையினரும், தீயணைப்புப் படையினரும், செம்பிறைச் சங்கத் தொண்டர்களும், மருத்துவ உதவியாளர்களும் அங்கு விரைந்து சென்று, விபத்தில் சிக்கிக் கொண்டவர்களை மீட்பதில் தீவிர முனைப்போடு ஈடுபட்டனர். ஒரே கும்மிருட்டு, அத்துடன் ஏற்கனவே பெய்த மழையினால் சேறும் சகதியும் நிறைந்த பாதைகள், இதற்கிடையே உதவிக்கரங்களை ஈனக்குரலில் எதிர்பார்த்துத் துடிதுடித்து, வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே போராடிக் கொண்டிருந்த 46 உயிர்களை உடனடியாக மருத்துவமனைகளுக்குக் கொண்டுவந்து சேர்ப்பதில் நமது மீட்புத் தொண்டர்கள் மேற்கொண்ட பரிவுமிக்க உதவிப்பணி மலேசிய மக்களால் எப்பொழுதும் நினைவுகூரத்தக்கதாகும். இந்த மீட்புப் பணிக்கு முன்னோடியாக உதவிக் கரம் வழங்கிய எல்மினா தோட்ட மக்களையும் மறப்பதற்கில்லை. விமான விபத்தில் உயிர்பிழைத்த எல்லாப் பிரயாணிகளும், இந்த நற்றொண்டர்களின் கருணையும் அக்கறையும் நிறைந்த உதவிக்குப் பெரிதும் நன்றிக்கடன் பட்டிருக்கின்றனர்.

புதிய சமுதாயத்தின் முகவரி

131, ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மான், [2ஆவது மாடி] கோலாலம்பூர் 01-08. தொலைபேசி:80839

மலேசிய மண்ணுக்கும் நமது மீட்புத் தொண்டர்களுக்கும் இத்தகைய விபத்து அனுபவம் புதிது எனினும் தாங்கள் சிறிதும் எதிர்பாராமல் திடீர் என்று எதிர்நோக்கிய இந்தப் பிரமாண்டமான மீட்புப் பணியை அனைத்துலகமும் பாராட்டும் விதத்தில் அற்புதமாகச் செய்து முடித்திருப்பது நாட்டுக்கே பெருமை அளிப்பதாகும். உள்துறை அமைச்சர் டான்ஸ்ரீ கஸாலி ஷாபி, நமது மீட்புத் தொண்டர்களின் பணியைப் பெரிதும் பாராட்டி இருப்பது முற்றிலும் பொருத்தமே ஆகும்.

ஏற்கனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஆயுதபாணிகளான ஜப்பானியக் கொரில்லாக்கள் கோலாலம்பூரில் ஏ.ஐ.ஏ. கட்டிடத்தை முற்றுகை இட்டிருந்த தருணத்திலும் நமது நாடு ஒரு பயங்கரச் சோதனையை எதிர்நோக்கியது. மலேசியாவுக்கு அந்த முற்றுகை, முற்றும் ஒரு புதிய அனுபவமாகும். அத்தருணத்தில் நமது அரசாங்கமும், போலிஸ் படையினரும் மற்றும் தொண்டு நிறுவனங்களும், அம்முற்றுகைக்குத் தீர்வு காண்பதில் காட்டிய நிதானமும், திறமும் உலக நாடுகளால் பெரிதும் பாராட்டப்பட்டன. அந்த நெருக்கடியின் போதும் ஜப்பானியக் கொரில்லாக்களை ஒரு சமரசத்திற்கு இணங்க வைப்பதற்கு உள்துறை அமைச்சர் டான்ஸ்ரீ கஸாலி ஷாபி மேற்கொண்ட விவேகமிக்க ராஜதந்திர நடவடிக்கைகளையும் கொரில்லாக்களுடன் நடத்திய பேச்சில் அவர் கையாண்ட நளினத்தையும் நாம் மறப்பதற்கில்லை.

மலேசியா சிறிய நாடென்றாலும் தன் மீது எதிர்பாராமல் திணிக்கப்படுகிற இத்தகைய நெருக்கடிகளைப் பக்குவமாகக் கையாண்டு பெயர் போட முடிவதற்கு நாம் பெற்றிருக்கும் திறன்மிக்க அரசாங்கமும், திறமும், ஈரமும் ஒருங்கே கொண்ட அரசாங்க அதிகாரிகளும், தொண்டர் படையினருமே காரணம் என்பது மிகையாகாது.

சாதனைப் பயணம்

பிரதமர் டத்தோ உசேன் ஓன் ஜப்பானுக்கும் அமெரிக்காவுக்கும் மேற்கொண்ட மூன்று வாரப் பயணம், சாதனைகள் நிறைந்த ஒன்றாக அமைந்திருப்பது குறித்து நாம் பெரும் மகிழ்ச்சி அடையலாம். மலேசியாவின் வளர்ச்சித் திட்டங்களுக்கு மேலும் கடன் கொடுப்பதற்கு ஜப்பான் முன் வந்திருப்பதோடு இரு நாடுகளுக்கிடையே வர்த்தகம் விரிவடைவதற்கும் உறுதியளித்திருக்கிறது. அமெரிக்க அதிபர் கார்ட்டர், மலேசியா கண்டு வருகிற சமூக-பொருளாதார வளர்ச்சியை மனம் நிறைந்து பாராட்டி இருப்பதோடு, வளமும் அமைதியும் கொண்ட ஒரு மாபெரும் நாட்டின் தலைவர் என்று நமது பிரதமரைப் புகழ்ந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் புதிய அதிபரை முதன் முதலில் சந்தித்துப் பேசியிருக்கும் ஆசியான் நாட்டுத் தலைவர் என்னும் முறையில் நமது பிரதமர் இப்பகுதி மக்களின் அமைதி விருப்பத்தை எடுத்துரைப்பதற்கும் இப்பகுதியில் அமைதி நிலைப்பதற்கு அமெரிக்கா ஆற்றவேண்டிய கடப்பாடுகளை வலியுறுத்துவதற்கும் இச்சந்தர்ப்பத்தை முழுமையாகப் பயன்படுத்திக்கொண்டிருப்பதில் வியப்பில்லை. தென்கிழக்கு ஆசியாவின் அமைதிக்கும் நிலைத்தன்மைக்கும் அமெரிக்கா தன் பங்கைத் தொடர்ந்து ஆற்றுமென்று அதிபர் கார்ட்டர் நமது பிரதமரிடம் உறுதியளித்திருப்பது மனநிறைவு அளிப்பதாகும்.

சோவியத் ரஷ்யாவுக்கும் இத்தகைய ஒரு வேண்டுகோளை நமது பிரதமர் ஜப்பானில் நிருபர் மாநாடு ஒன்றில் விடுத்திருப்பதும் நினைவுகூரத்தக்கது. தென்கிழக்கு ஆசியாவில் அமைதி நிலவுவதற்கு சோவியத் ரஷ்யா தனது செல்வாக்கைத் தோழமை நாடுகளிடம் பயன்படுத்த வேண்டுமென்று டத்தோ உசேன் ஓன் கேட்டுக்கொண்டிருக்கிறார். இப்பகுதியில் தோற்றம் பெற்றுள்ள புதிய கம்யூனிஸ்ட் நாடுகளான வியட்னாம், லாவோஸ், கம்போடியா ஆகிய மூன்று நாடுகளிடத்தும் ரஷ்யாவுக்குச் செல்வாக்கு இருப்பது வெளிப்படை. இவ்வகையில் ரஷ்யா முனைப்போடு தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இந்த மூன்று நாடுகளையும் தென்கிழக்கு ஆசியாவின் அமைதிக்குத் துணை நிற்கும்படி வற்புறுத்துமென்று மலேசியா எதிர்பார்ப்பது நியாயமே ஆகும்.

அமெரிக்காவும் ரஷ்யாவும் உச்ச வல்லரசுகள் என்னும் முறையில் தென்கிழக்காசிய அமைதிக்கும், நடுநிலைக்கும் வகை செய்யவேண்டிய பொறுப்பை நமது பிரதமரின் வேண்டுகோளின்படி சரிவர நிறைவேற்றுமென்று எதிர்பார்ப்போமாக!

இந்திரா மீது நடவடிக்கை

பிரதமர் மொரார்ஜி தேசாயின் அரசாங்கம், பழைய பிரதமர் இந்திராகாந்தியையும் அவரது நெருங்கிய கூட்டாளிகளையும் கைது செய்து, இந்திய அரசியலில் ஒரு பெரிய பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இந்திரா காந்தி தமது அவசரக் கால ஆட்சியின்போது இன்றைய பிரதமர் மொரார்ஜி உட்பட மற்றும் பல மந்திரிகளையும், ஜனதா தலைவர்களையும் சிறையில் அடைத்து வைத்திருந்தது உண்மையே. அதற்குப் பழிக்குப் பழி வாங்கும் நடவடிக்கையாக மொரார்ஜி அரசாங்கம் இந்திரா காந்தியையும் அவரது சகாக்களையும் கைது செய்திருக்கிறதோ என்று ஐயப்படுவதற்கு இடமிருப்பதையும் மறுப்பதற்கில்லை.

இக் கைது நடவடிக்கைக்கு இந்தியாவின் உள்துறை அமைச்சர் சரண்சிங் தக்க விளக்கங்களை அளித்திருக்கிறார். இந்திரா மீது சுமத்தப்படவிருக்கும் குற்றச்சாட்டுக்களையும் அவர் பட்டியலிட்டிருக்கிறார். எப்படியிருந்தாலும், வெளி உலகம் இந்தக் கைது நடவடிக்கைகளுக்கு அரசியல் நோக்கமே காரணமென்று கருதுவது இயல்பே ஆகும். பழைய பிரதமர்களையும் பழைய ஆட்சியாளர்களையும் அவர்கள் எத்துணை "தவறு" செய்திருந்தாலும் பெருந்தன்மையோடு தேசத்தின் கௌரவத்தையும் பொது நலனையும் முன்னிட்டுப் பேசாமல் விட்டுவிடுவதே சிறப்பாகும். குற்றம் காண முற்பட்டால் அரசியல்வாதிகளில் எவருமே தப்பமுடியாது. இப்படிப் பதவிக்கு வருகின்ற ஒவ்வொரு கட்சியும் ஏற்கனவே பதவி வகித்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முற்பட்டால் அது தேசத்தின் கண்ணியத்தைப் பெரிதும் பாதிப்பதோடு ஒருமைப்பாட்டையும் சீர்குலைத்துவிடும்.

ஒருவேளை இந்திராகாந்தியும், அவருடைய காங்கிரஸ் கட்சியும் மறுபடியும் அரசியலில் தலைதூக்கி விடக்கூடும் என்னும் அச்சத்தின் அடிப்படையில் இந்த கைது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமானால், மொரார்ஜி அரசாங்கம் தப்புக் கணக்குப் போடுவதாகவே சொல்லவேண்டும். இத்தகைய நடவடிக்கை மூலம் இந்திராவின் "மறுபிறப்புக்கு" மொரார்ஜி அரசாங்கம், தானே வழிவகுத்துக் கொடுப்பதாகச் சொல்வதே சரியாகும். ஆகவே இந்திய அரசாங்கம் இந்திரா காந்தியைப் பொறுத்த வரையில் ஆவேசத்தையும், பழிவாங்கும் எண்ணத்தையும் கைவிட்டுப் பெருந்தன்மையோடு நடந்துகொள்ளுமென்று வெளி உலகம் எதிர்பார்ப்பதில் தவறில்லை.



பாவையர் பக்கம்

இனிமை

ஆண்மகன் தன்னுடைய ரகசியத்தைவிடப் பிறருடையதையே அதிக பத்திரமாகப் பாதுகாக்கிறன். பெண்களோ பிறருடையதைவிடத் தம்முடைய ரகசியத்தையே அதிக பத்திரமாகப் பாதுகாக்கிறுர்கள்.

-லா புரூயர்.

பெண்கள் இயல்பிலேயே இனிமை நிறைந்தவர்கள். அன்பெனும்செல்வத்தைப் பிறவியிலேயே பெற்றவர்கள். இந்தச் சிறப்பினுல்தான் அவர்கள் இல்வாழ்க்கை பயன் அடைகிறது.

-ரவீந்திரநாத் தாகூர்

பெண் முடிந்தபோது சிரிப்பாள்; ஆனுல் நினைத்தபோது அழுவாள்.

-பிரெஞ்சுப் பழமொழி

மணப்பெண் கலியாணம்செய்து கொள்ளுமுன் புருஷனைத் தவிர வேறு எந்தப் பொருளையும் விரும்ப மாட்டாள்; ஆனுல் கலியாணம் செய்து கொண்டுவிட்டால், புருஷனைத் தவிர வேறு எல்லாப் பொருள்களையும் விரும்புவாள்.

-ஷேக்ஸ்பியர்

தொகுப்பு:

-து. சுந்தராம்பாள் சாமி.

கார்டன் சிட்டி, மலாக்கா



மீன் பேஸ்

தேவையான பொருட்கள்:

4 தயின் வஞ்சனை மீன், 1 ரொட்டி, 1 பெரிய வெங்காயம், 1 சிறு கப் கஞ்சி மாவு, 4 கொத்தமல்லி இலை, 3 பழுத்த மிளகாய், 1 பல் பூண்டு, சிறிதளவு எண்ணெய், சிறிதளவு உப்பு.

செய்யும் முறை:

வஞ்சனை மீனை நன்ருகக் கழுவி, வெட்டிக்கொள்ளவும். பிறகு வெட்டிய மீனின் முள்ளை நீக்கிவிட்டு மீன் சதையை மட்டும் தனியாக வைத்துக் கொள்ளவும்.

பெரிய வெங்காயம், பழுத்த மிளகாய், பூண்டு ஆகியவற்றை நன்ருகக் கழுவிப் பொடியாக நறுக்கி மீன் சதையுடன் சேர்த்துக்கொள்ளவும். பிறகு கஞ்சி மாவு, உப்பு, ஆகியவற்றையும் சேர்த்து மீனுடன் பிசையவும். பிசைந்த மீன்பேஸ்ஸை ரொட்டியின் மேல் தடவவும்.

மீன் பேஸ் தடவிய ரொட்டியின் மேல் கொத்தமல்லி இலையைச் சிறிய அளவில் வெட்டி ரொட்டியின் மேல் வைக்கவும். பிறகு வாணலியில் எண்ணெய் ஊற்றி நன்ருக அதுகாய்ந்தவுடன்இந்த ரொட்டியை இரண்டுதுண்டுகளாகப்பொரிக்கவும். பொரித்தவுடன் ஆறவைத்துச் சாப்பிடவும். குறிப்பு: இன்னும் ருசி சேர்க்க 'சில்லிசாஸ்' பயன்படுத்தலாம்.

குமாரி தி. ராணி

தனபாலன்,

தம்பின்.


மிருதுவாக....

ஆட்டாமாவில் உப்புக் கலந்த வெந்நீரை ஊற்றிப் பிசைந்து சுமார் 2 மணி நேரம் ஊற வைத்துப் பின்பு அதைத் தட்டிச் சப்பாத்தி, பூரி தயாரித்தால் அவை சாப்பிட மிருதுவாகவும் மென்மையாகவும் இருக்கும்.

புத்தம் புதிய அம்மியைப் பழக்கத்திற்குக் கொண்டுவர வடித்த கஞ்சியில் உமியைக் கலந்து அரைத்தால் கல் தூள் அகன்று அம்மி மிருதுவாக இருக்கும்.

-குமாரி ஆ. தர்மாம்பாள்,

தஞ்சோங் மாலிம்



"அத்தான்... என் அத்தான்
அவர் என்னைத்தான்...
எப்படிச் சொல்வேனடி..?" -என்று பத்மப்பிரியா பாடுவதைக் கவனிப்பவர் படாபட் ஜெயலட்சுமி.

திரை: "பெருமைக்குரியவள்"

அட்டைப்படப் பேட்டி

சபதத்தை நிறைவேற்றினார் உமா!

தலைநகர் லோரோங் துவாங்கு அப்துல் ரஹ்மானிலுள்ள ஒரு சிறிய தையற்கடை நமக்குப் பெரிய கதையைச் சொல்கிறது. அதுதான் "உமா டெய்லரிங்" கடை. அதன் உரிமையாளர் திருமதி உமாதேவி.

"நம் பெண்கள் படித்துவிட்டு வேலை தேடி அலைவதைவிடச் சொந்தத் தொழில் புரியத் துணிவுடன் முன்வரவேண்டும். நம் வாழ்க்கையின் உயர்வுக்குத் திட்டமிட வேண்டும் - உழைக்கவேண்டும் - உயர வேண்டும்" என்று திருமதி உமா கூறும்போது அவரது முகத்தில் பளிச்சிடும் பாவத்திலிருந்து அவரது உள்ளம் எத்தகைய எழுச்சியும் மலர்ச்சியும் பெற்றிருக்கிறது என்பதை நம்மால் ஊகிக்கமுடிகிறது.

எல். சி. இ வரை படித்திருக்கும் உமா ஆரம்பத்தில் சம்பளத்திற்குப் பல கடைகளில் தையல் வேலைபார்த்தார். 1975ஆம் ஆண்டில் டத்தின் ஆதிநாகப்பன் அவர்களின் "கெவரீஸ்" தையற்கடையிலும் பணியாற்றினார். தையற்கலையில் தனி ஈடுபாடு கொண்டிருந்த இவருக்கு, படிக்கும் நாளிலேயே உள்ளத்தில் ஊறிய ஆசை, சொந்தமாக தையற்கடை வைத்துப் புகழ்பெற வேண்டும் என்பதே.

அதுவும் தையற்கடைகளில் சம்பளத்திற்கு வேலைபார்த்து வந்தபோது உமாவின் உள்ளத்தில் "நாமும் இப்படி ஒரு தையற்கடையைச் சொந்தமாகத் திறக்கவேண்டும்" என்கிற தாபம் நீறுபூத்த நெருப்பாகத் தகித்துக்கொண்டிருந்தது.

அவரது கனவு - ஆசை - கடின உழைப்புக்குப் பின்னர் சென்ற ஆண்டு நிறைவேறியது. அதன்வழி "உமா டெய்லரிங்" உதயமாகியது!

"வாடிக்கையாளர்களின் ஆதரவும், வாஞ்சையுள்ள சிநேகிதிகளின் ஆறுதல் மொழியுமே நான் இன்று சொந்தமாக ஒரு தையற்கடையைத் திறக்க உரமாக அமைந்தது" என்று நன்றியுணர்வோடு குறிப்பிடும் உமா, தற்சமயம் தனக்கு 1,500 வாடிக்கையாளர்கள் இருப்பதாகவும் பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.

"உங்கள் வாழ்க்கையில் என்றுமே மறக்கமுடியாத ஒரு சுவையான சம்பவத்தைக் கூறமுடியுமா?"

"எனக்கு அப்போது 12 வயதிருக்கும். பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். ஒருநாள் என் தாயார் விலையுயர்ந்த துணியைச் சோளி தைப்பதற்காக வாங்கி வீட்டில் வைத்திருந்தார்.

அந்த அழகான துணியைப் பார்த்ததும் என்னுள் ஓர் ஆர்வத் துடிப்பு எழுந்தது. அம்மா அந்நேரம் வெளியே போய் இருந்தார். அவருக்குத் தெரியாமல் அந்தத் துணியை எடுத்து வெட்டி சோளி தைக்க முற்பட்டேன். ஆர்வம் இருந்த அளவுக்கு என்னிடம் அனுபவம் இல்லாததால், வெட்டப்பட்ட அந்த துணியினுள் சோளி தைக்க முடியாமல் வெட வெடத்துப் போனேன். அந்நேரம் பார்த்து அம்மாவும் வந்துவிட்டார். விலைகொடுத்து வாங்கி வந்த துணி அலங்கோலமாக வெட்டப்பட்டுக் கிடந்ததைப் பார்த்ததும் அவருக்கு வந்தது ஆத்திரம். எனக்கு வந்தது அச்சம். செம்மையாக அம்மாவிடம் அடி வாங்கியதுதான் மிச்சம். "இப்ப நல்லா அடியுங்க... ஆனா ஒரு நாளைக்குப் பாருங்க உமா டெய்லரிங்னு கடையைத் திறந்து சொந்தமா வியாபாரம் செய்யத்தான் போறேன்!" என்று அழுதுகொண்டே தாயாரிடம் உணர்ச்சி வசப்பட்டுப் பேசிய வார்த்தைகள் இன்னும் பசுமையாக எனது நினைவில் நிலைத்துள்ளன" என்று தனது மறக்கமுடியாத நிகழ்ச்சியைக் கூறினார் உமா.

அன்று தாயிடம் போட்ட சபத்தை இன்று நிறைவேற்றி விட்டார் உமா!

இவருக்கு அடிக்கடி சினிமா பார்ப்பது, தேவையில்லாத பொழுதுபோக்குகளில் பணத்தையும், காலத்தையும் செலவிடுவது என்பவை யெல்லாம் பிடிக்காது

"இன்றைய நம் பெண்களின் நாகரிக வளர்ச்சி எப்படி இருக்கிறது?"

நம் பெண்கள் முன்பைவிட இப்போது துணிமணிகளையும், நகைகளையும் "செலக்ட்" பண்ணுவதில் நல்ல வளர்ச்சி கண்டிருக்கிறார்கள் என்றுதான் சொல்லுவேன்; மற்ற இனப் பெண்கள் கூடச் சேலை அணிவதைப் பெருமையாகக் கருதும் இந்நாளில், நம் பெண்களில் ஒரு சிலர் நாகரிக மயக்கத்தினால் சேலை அணிவதைக் கௌரவக்குறைவாக நினைக்கிறார்கள். நம் பெண்கள் ஒரேயடியாக சேலையைப் புறக்கணித்து விடுவது முறையாக எனக்குப் படவில்லை. என்றுமே தமிழ் மங்கையர்களுக்கு மதிப்பும், மரியாதையும், அழகும் கொடுப்பது சேலைதான். இதை நாம் மறந்து விடக்கூடாது. அதற்காகவே ஒரே "கர்நாடகமாக இருக்க வேண்டும் என்றும் நான் சொல்ல வரவில்லை" -இவர் குறைப்பட்டுக் கொள்வதிலுள்ள நியாயம் நமக்கும் புரிகிறது.

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்ற கொள்கையில் மிகவும் பற்றுதல் உடைய இவர் கோலசிலாங்கூரில் பிறந்தவராவார். இவர் குடும்பம் பெரியது. உடன் பிறப்புக்கள் 11 பேர். ஆரம்பகால வாழ்க்கையில் தான் சந்தித்த வறுமை, கஷ்டங்களை உமா இன்றும் மறக்கவில்லை!

முயற்சி, உழைப்பு, மனஉறுதி, நாணயம் இந்த நான்கையும் மூலதனமாகக் கொண்டு கைத்தொழிலாகத் தையல் கலையை விரும்பி ஏற்றார், உழைத்தார். இப்போது கைநிறைய சம்பாதிக்கிறார். அதே நேரம் யாருக்கும் அடிமையாகாமல் சொந்தத் தொழில் புரிகிறோமே என்ற மனநிறைவு!

தன்னம்பிக்கையோடு உழைத்து உயர்ந்திருக்கும் உமாவிடம் இறுதியாக ஒரு கேள்வி கேட்டேன்:

"நம் இளம் பெண்கள் வாழ்க்கையில் முன்னுக்கு வர உங்கள் ஆலோசனை என்ன?"

"படித்துவிட்டு வேலை வேலை என்று அலையாமல் தங்களுக்குத் தெரிந்த கைத்தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபட்டுக் கடுமையாக உழைக்க வேண்டும். சீனப் பெண்களைப் பாருங்கள். எந்த வேலையானாலும் முகமலர்ச்சியோடு ஏற்று உழைக்கிறார்கள். அதன்வழி வாழ்க்கையிலும் சீக்கிரம் முன்னுக்கு வந்துவிடுகிறார்கள். அவர்களைப்போல நாமும் தாழ்வு மனப்பான்மை கொள்ளாமல், உழைத்து உயர எண்ணம் கொண்டு செயல்பட வேண்டும்.

இதை என் அனுபவத்தில் கண்டதினாலேயே இவ்வளவு உறுதியாகக் கூறுகிறேன். இந்தச் சின்ன தையற்கடையை வைத்துக் கடுமையாக உழைத்தேன். சிக்கனத்தைக் கடைப்பிடித்தேன். சேமித்தேன். இன்று சொந்தத்தில் ஒரு புதிய வீட்டையும் வாங்கிவிட்டேன்!" என்று மனம் திறந்து கூறிய திருமதி உமாவைப் பார்க்கும்போது நமக்கு ஏற்படுவது வியப்பு. அதேநேரம் அவருடைய உழைப்புக்கேற்ற உயர்வை எண்ணி நம் இதயம் பெருமிதமும் அடைகிறது.

பேட்டி
ராமதாஸ் மனோகரன்

'அவங்க போட்ட சத்தம் இப்பவும் கேட்குது'



எஸ்.வைரக்கண்ணு

'பலத்த மழையும் மின்னலுமாய் இருப்பதால் சுபாங் அனைத்துலக விமான நிலையத்தில் நாம் தரை இறங்க இப்போது அனுமதிக்கப்படவில்லை!'

அறிவிப்பு ஓய்ந்தது.

ஜப்பானிய "ஜால்" டிசி-8 ரக விமானத்தில் பறந்து கொண்டிருந்த பயணிகள் அடுத்த அறிவிப்புக்காகக் காத்துக்கொண்டிருந்தனர்.

அன்று செப்டம்பர் திங்கள் 27-ஆம் நாள் செவ்வாய்க்கிழமை.

தோக்கியோவில் காலை 11.30க்கு தனது JL-715 பயணத்தைத்தொடங்கிய அந்த டிசி-8இல் ஆண்களும், பெண்களும் குழந்தைகளுமாக 79 பேர் பறந்து கொண்டிருந்தனர்

அவர்களில் 10 விமானச் சிப்பந்திகளும் இருந்தனர்.

சிலர் தோக்கியோவிலிருந்து நேரடியாக சிங்கப்பூருக்கும்-

சிலர் ஹாங்காங்கிலிருந்து கோலாலம்பூருக்கும் தங்கள் பயணத்தை அந்த விமானத்தில் மேற்கொண்டிருந்தனர்.

தரை இறங்கும் அனுமதியைப் பெறும் வரை அந்த விமானம் வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

மீண்டும் அறிவிப்புக் குரல் ஒலித்தது!

"தரை இறங்க அனுமதி கிடைத்து விட்டது. பயணிகள் அனைவரும் தங்களது சீட் பெல்டை இறுக்கமாக அணிந்து கொள்ள வேண்டுகிறோம்!"

அப்போது மாலை மணி 6.35. அந்த விமானம் தாழ்வாகப் பறந்தது.

உடனே-...

அதிர்ச்சி-

தாக்குதல்-

பயங்கரம் அனைத்தையும் ஒரு சேர அனுபவித்தனர் அந்தப் பயணிகள்!

அந்த விமானம் தரை இறங்கிய போது......

சிலர் தங்களது இருக்கையிலிருந்து தூக்கி எறியப்பட்டனர்.

சிலர் என்ன நடந்தது என்பதனை யூகிக்க முடியாமல் "திக்" பிரமை பிடித்திருந்தனர்.

அதே வேளை மரண ஓலங்கள் பயங்கரமாக எழத் தொடங்கின!

ஃ ஃ ஃ

குறிப்பிட்ட நேரத்தில் ஜால் டிசி-8 சுபாங் விமான நிலையத்தில் தரை இறங்காமல் போனதால் அது வழிதவறி இருக்கக்கூடும் என்று விமானக் கட்டுப்பாட்டு நிலையத்தார் யூகித்துக் கொண்டனர்.

உடனே காணாமல் போன அந்த விமானத்தைத் தேடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

பின் சுங்கை பூலோ, எல்மினா தோட்டத்தில் பால்மரக்காட்டினூடே அந்த விமானம் விழுந்து நொறுங்கி கிடந்ததைக் கண்டனர்.

விமானம், நடுவே இரண்டாகப் பிளந்து அதன் முன்புறப்பகுதி தீயினால் முற்றாக எரிந்து போயிருந்தது.

டிசி 8 ரக விமான விபத்தை அறிந்து கொள்ளச் சென்றிருந்தோம்.

கோலாலம்பூரிலிருந்து சுமார் 20 மைல் தொலைவில் இருந்த அந்தத் தோட்டத்திற்கு நாங்கள் சென்றடைந்து, தொழிலாளர் குடியிருப்பினைக் கடந்தபோது எங்கள் காரை நிறுத்தினர் இரு காவல் துறை அதிகாரிகள்.

விமான விபத்தை விசாரிப்பதற்காக 68 பேர் அடங்கிய குழு ஒன்று ஜப்பானிலிருந்து வந்து ஆராய்ந்து வருவதால் அங்கு இப்போது



அந்தப் பயங்கர விபத்தில் ஒருவராவது உயிர் தப்பி இருக்கக் கூடுமா எனும் ஐயத்தோடு சென்ற மீட்புப் படையினர் அதிர்ச்சியினூடே ஆச்சரியத்தையும் அடைந்தனர்.

பலர் பலத்த காயங்களுடன் உயிர் பிழைத்திருந்தனர்.

அவர்களை உடனே அருகிலுள்ள சுங்கை பூலோ மருத்துவமனைக்கு அனுப்பினர்.

முதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிட முடியாதபடி சிலரின் சடலங்கள் சிதைவுற்றுக் கிடந்தன. பின் இறந்தவர்களின் எண்ணிக்கை 33 எனத் தெரிந்துகொண்டனர். இந்தவிபத்தில் 46 பேராவது உயிர் தப்பிக்க முடிந்ததே, அந்த வகையில் அவர்கள் கொடுத்து வைத்தவர்கள்தான்.

எல்மினா எஸ்டேட்டில் விழுந்து நொறுங்கிய ஜப்பானிய "ஜால்" பார்வைக்குப் பொதுமக்களை அனுமதிப்பதில்லையென அந்த அதிகாரிகள் கூறினர்.

நானும், புகைப்படக்காரர் மாயனும் "புதிய சமுதாயம்" பத்திரிகையின் சார்பில் வந்திருப்பதாகக் கூறினோம்.

அந்த அதிகாரிகள் அதனை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர் எங்களை அனுமதித்தனர்.

தோட்டச் செம்மண் சாலையில் எங்கள் கார் சற்றுச் சிரமப்பட்டே சென்றது.

விமானம் விழுந்து நொறுங்கிய இடத்தை நாங்கள் அடைந்தோம்.

அங்கே அரச மலேசிய ராணுவப் படையினரும் போலீசாரும் பலத்த காவல் புரிந்து கொண்டிருந்தனர்.

அவர்களின் அனுமதியோடு காரை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டு நடந்தோம்.

அது ஒரு குன்று. பல வரிசை ரப்பர் மரங்கள் சரிந்து கிடக்க, படு பயங்கரமாக நொறுங்கிக் கிடந்தது அந்த விமானம்.

விமானத்தின் முன் பகுதி முற்றுகச் சிதறிக் கிடந்தது. நடுப்பகுதி தீக்கிரையாகி வெறும் கூரையே இருந்தது.

வால் பகுதியில் பெருத்த சேதமில்லை. அந்தப் பகுதியில் அமர்ந்திருந்த பயணிகளில் பெரும்பாலோர் தான் உயிர் பிழைத்திருக்க வேண்டும் என ஊர்ஜிதப் படுத்திக் கொண்டேன்.



கு. கிருஷ்ணமூர்த்தி

விமானம் விழுந்த அந்தக் குன்றின் தாழ்வான பகுதிகள்வரை உபரிப்பாகங்கள் சிதறிக் கிடந்தன.

அந்த உபரிப்பாகங்களை எவரும் கொண்டுசெல்ல முடியாதபடி பத்து அடிக்கு ஒருவர் காவலிருந்தனர்.

அதே இடத்தில் கூடாரம் அமைத்து ஜப்பானிய குழு மும்முரமாக விபத்தை ஆராய்ந்து வருவதைக் கண்டோம்.

மாயன் தனது வேலைகளை முடித்துக் கொண்டதும் மீண்டும் தொழிலாளர் குடியிருப்புப் பகுதிக்கு வந்தோம்.

எங்களைப் புன்முறுவலோடு வரவேற்றவர்களிடம், விபத்து நடந்த நாளன்று மீட்புப் படையினரோடு உதவிகள் புரிந்தவர்களைச் சந்திக்க வந்திருப்பதாகத் தெரிவித்தோம்.

எல்மினு தோட்டத் தொழிலாளர்கள் பெரும்பாலோர் உதவிகள் புரிந்து பலரைக் காப்பாற்றிதாக அறிந்து கொண்டோம்.

அவர்களில் மாணவர்கள் சிலரும் அடங்குவர். அந்த மாணவர்களுள் ஒருவரான மூன்றும் படிவம் பயிலும் மாணவர் க. கிருஷ்ணமூர்த்தி சம்பவத்தை இப்படி நினைவு கூருகிறார்.

"அப்ப மணி பதினென்னுக்கு மேல இருக்கும். வெளியில பலமா மழை பெய்யத் தொடங்கிட்டு இருந்துச்சு... கண்ணைப்பறிக்கிற மாதிரி மின்னல்... தொடர்ந்து தலையில விழுற மாதிரி இடி. போர்வைய இழுத்துப் போத்தியும் எனக்குத்தூக்கம் வரலே. வெளியிலே வழக்கத்துக்கு மாறு ஏதோ சத்தம் கேட்டுச்சு...

'என்னென்னு போயி பாருடா மூர்த்தி'னு என் அக்கா சொன்னுங்க.

வெளிய வந்து பார்த்தேன்.

கொட்டுற மழையிலே போலிஸ் லாரிங்களும், ஆம்புலன்ஸ்களும் போயிக்கிட்டு இருந்துச்சு.

இந்த நேரத்துல,அதுவும் தோட்டத்துக்கு இவ்வளவு போலிஸ் லாரிகளும், ஆம்புலன்ஸ்களும் போறதுக்கு என்ன காரணம்னு தெரிஞ்சுக்க விரும்புனேன்.

பக்கத்து வீட்டுக்காரங்க எல்லாம் வெளிய வந்து வேடிக்கை பார்த்துக்கிட்டு இருந்தாங்க.

அதே சமயம் எங்க தோட்டத்துல இருக்கிற சில பேரு அந்த ஆம்புலன்ஸுங்க போன வழியே ஓடுனுங்க. நானும் அவங்ககூட சேர்ந்துக்கிட்டேன்.

ஜப்பான்ல இருந்து வந்த பிளேன் ஒண்ணு விழுந்துடுச்சுனு அவங்க பேசிக்கிட்டாங்க.

அதைக் கேள்விப்பட்டதும் என்னுல நம்ப முடியலே.உண்மையா பொய்யான்னு தெரிஞ்சுக்க இன்னும் வேகமா ஓடுனேன். கொஞ்ச நேரத்துல ஒரே வெளிச்சம்!

ஸ்போட் லைட்டுங்க ரப்பர் மரங்களுடே ஒரு உயரமான பகுதியை நோக்கி வெளிச்சத்த பாய்ச்சிக் கொண்டிருந்தன.

அங்கே...

ஒரு பிளேன் விழுந்து நொறுங்கிக் கிடந்தது.

அதன் நடுப்பகுதியிலே... தீப்பிடிச்சி எரிஞ்சுக்கிட்டு இருந்தது.

நான் அங்கே போனப்ப போலிஸ்காரங்ககூட நானும் சேர்ந்துக்கிட்டு நொறுங்கிய விமானத்த நெருங்கினேன்.

பயமும் நடுக்கமும் இருந்தாலும் ஏதோ ஒரு தைரியம்.

அந்த பிளேன்ல வால் பகுதிக்குள்ள போனேன்.

யார் யாரோ அலறும் சத்தம் கேட்டுச்சு...முதல்ல ஒரு வயதான வரை காப்பாத்த முயன்றேன்.

பாவம் அவரு...ரொம்ப பயந்த நிலையிலே இருந்தாரு.

அவர வெளியே கொண்டு வந்ததும் சில பேர் உடனே ஓடிவந்து ஸ்ட்ரெச்சர்ல வைச்சு ஆம்புலன்ஸுல ஏத்துனுங்க.

அப்புறம் நான் ஒரு மலாய்ப் பெண்மணியையும் சீனப் பெண்மணியையும் காப்பாத்தினேன். விமான விபத்தப்பத்தி பத்திரிகைகளிலே படிச்சிருக்கேன், ஆனு அந்தச் சம்பவத்த நேரில் பார்த்தப்ப... இப்படிப்பட்ட ஒரு சம்பவம் இனிமே நடக்கக்கூடாதுனு நெனைச்சிக்கிட்டேன், அவ்வளவு கொடூரம் அது!"

அன்றைய நிலையை அப்படியே மனக்கண்முன் கொண்டுவந்த கிருஷ்ணமூர்த்தி தன்னை மறந்து விவரித்தார்.

"இந்த விமான விபத்தைக் கண்டபிறகு விமானத்தில் பயணம் செய்யவேண்டும் என்ற ஆசை இன்னும் உங்களுக்கு இருக்கிறதா?" —நான் கிருஷ்ணமூர்த்தியிடம் கேட்டேன்.

"எல்லா விமானங்களுமா விபத்துக்குள்ளாகுது? இதுக்கெல்லாம் பயந்தா ஒவ்வொரு நாளும் செத்துக்கிட்டே இருப்போம். நடக்கிறது நடந்துதான் ஆகணும். தன்னம்பிக்கை இல்லாட்டினு... இட் இஸ் வெரி டிபிகல்ட் டு லிவ்!" என்ருர் சிரித்தபடியே.

எல்மினு தோட்டத்தில் தொழிலாளியாகப் பணியாற்றும் 22 வயது இளைஞர் ஆர். கணேசனைச் சந்தித்தேன். அவர் தனது அனுபவத்தைக் கூறினர்.

"என் ஆயுசில... இப்படியொரு சம்பவத்தைப் பார்த்தது இதுதான் முதல் தடவை.



வி. ராமையா

எங்க எஸ்டேட்டுல விழுந்து நொறுங்கிய அந்த "ஜெட்" விமானத்தை நான் போய் பார்த்தப்ப ஒருத்தர்கூட உயிரோட இருக்க மாட்டாங்கனு நினைச்சேன்.

பிளேனுடை இடுக்கிலேயும் ரப்பர் மரங்களுக்கு நடுவிலேயும் கிடந்த உயிரற்ற உடல்களைப் பார்த்ததும் எனக்கு ஏற்பட்ட உணர்ச்

சியை சொல்லறதுக்கு இப்போ வார்த்தைகளே கிடைக்கலே.

நான் நடந்து போனப்ப சில உடல்களை மிதிச்சுக்கிட்டுப் போக வேண்டி இருந்துச்சு. கை, கால், தலை, உடம்பு இதுங்கள தனித்தனியாகப் பார்த்தப்ப எனக்கு ஒரே அதிர்ச்சி யாயிருச்சி!

அந்த ராத்திரி நேரத்துல பலத்த மழையிலே சில பேரை நான் காப்பாத்த உதவி செஞ்சேன்னு நினைக்கும்போது ஐ ஃபீல் வெரி ஹெப்பி!"

கணேசன் கூறியவற்றையெல்லாம் என்னோடு இன்னொருவரும் கேட்டுக்கொண்டிருந்தார். அவரிடம் மெல்ல நெருங்கி "உங்கள் அனுபவம் எப்படி?" என்று கேட்டேன்.

அவர் முதலில் சொல்லத் தயங்கினார், பின் கூறினார்.

"அந்த இடத்த நான் அடஞ்சப்ப போலிஸ்காரங்க சுத்தி வளைச்சு நின்னுக்கிட்டிருந்தாங்க.

அந்த ஏரோபிளேன் வந்து விழுந்த இடம் ஒரு உயரமான இடம்.

அந்த இடத்த சுத்தி இருந்த கித்தா மரம் எல்லாம் சாய்ஞ்சு போய் கிடந்துச்சு.


பிளேன் மேல கித்தா மரங்க விழுந்து கிடந்துச்சு!

ராத்திரி நேரத்துல அந்த இடமே பட்டப்பகலா தெரியிற மாதிரி லைட்டுங்க போட்டிருந்தாங்க.

அவங்க போட்ட சத்தம்-கதறுனது எல்லாம் இன்னும் என் மனசுல அப்படியே கேட்குது!" என்றார் வி. ராமையா. 38 வயது தொழிலாளியான இவர் மறுநாள் காலை வரை சம்பவம் நடந்த இடத்தில் மீட்புப் படையினரோடு உதவிகள் புரிந்தவர்.

நொறுங்கிக் கிடந்த ஏரோப்பிளேன்ல இருந்து எங்க எஸ்டேட் ஆளுங்க காப்பாத்திக் கொண்டு வந்தவங்களை படுக்கையில (ஸ்ட்ரெச்சர்) வச்சு ஆம்புலன்ஸுங்களுக்கு கொண்டு போகிற உதவிய செஞ்சேன்.

நம் நாட்டில் நடந்த முதல் படு பயங்கரமான விமான விபத்து இது. ஜப்பானிய விமான நிறுவனத்திற்கு இது இரண்டாவது விபத்து. ●



"எங்கள் வீட்டு வாசல் கதவை மாடு தின்று விட்டது"

ஏன்"

"Pull என்று போட்டிருந்தது"

தேசிய இலக்கியம்

தமிழியக்கப் பாடல்கள்

ஆசிரியர்: கனிமொழி

வெளியீடு: மலேசிய திராவிடர் கழகம்,
53-B 1, ஜாலான் பெராங்கான்,
கோலக்கிள்ளான்.

விலை: 50 காசு.

தமிழியக்கம் என்றவுடன் தமிழ் இலக்கியத் தொடர்பானவர் உள்ளத்தில் பேருரு எடுத்து நிற்பவர் பாரதிதாசன். மொழிப்பற்றை அடிப்படையாக வைத்துக் கல்வி, கலை, பொருளாதாரம், அரசியல் முதலிய பல துறைகளிலும் தமிழர்கள் முனைந்து முன்னேற வேண்டும் என்ற நோக்கத்தில் எழுந்ததே தமிழியக்கம். இத்தமிழியக்கத்தின் தேவை இன்னும் மறைந்துவிடவில்லை. மாறாக, இன்னும் வலிவோடு இயங்க வேண்டும் என்பது தற்காலத் தமிழ்க் கவிதையில் ஓர் ஆழமான துடிப்பாகவே காணப்படுகின்றது. அத்துடிப்பின் ஒரு வெளிப்பாடே இந்நூல் எனலாம். பொருள்களைப் பொறுத்த அளவில், கவிஞர் புதுமையான கருத்தொன்றையும் கூறியதாகக் கூற முடியாது. பொதுவாக இப்பொருள்களைப் பற்றி இதுவரை கூறப்பட்டுள்ள பொதுக் கருத்துக்களே பாடல்களில் இடம் பெற்றுள்ளன. இவ்வகையில் தமது பார்வையைக் கூர்மையாக்கி இருந்திருந்தால், பாடல்களில் இன்னும் கருத்துக் கூர்மை சேர்ந்திருக்கும்.

கருத்துக்களில் அதிகப் புதுமை இல்லாவிட்டாலும், உணர்த்துவதில் கவிஞரின் சிறப்பு சில இடங்களில் அழகுற வெளிப்பட்டுள்ளது. இந்நூலின் பாடல்கள் அனைத்தும் இசைப்பாடல்கள் ஆகலால், இசைப் பாடல்களுக்கு இயற்கையாய் அமைய வேண்டிய சந்தங்கள் சில பாடல்களில் சிறப்பாக அமைந்துள்ளன. இன்றைய கல்வி முறையின் அமைப்பையும், உண்மையான கல்வி எப்படி இருக்கவேண்டுமென்பதையும் கூறும் "கல்வி வளர்ந்தென்ன, கருத்து வளரலையே" என்ற பாடல் இதற்கோர் எடுத்துக்காட்டு.

"கல்வி வளர்ந்ததடி
கண்ணம்மா-நாட்டில்

என்று தொடங்கும் பாடல், பணத்திற்குப் படிப்பு அடிமையாகும் நிலையையும் சாடுகிறது. "நஞ்சினும் கொடியது மது", "கதிரவன் வாழ்த்து", "காதலைப் போற்றுவோம்", "தலைவர்க்குத் தலைவன் தந்தை பெரியார்" ஆகிய பாடல்களிலும் சந்த அழகினைக் காணலாம்

அன்பும் அறனும் வளரப் பாடுவதே ஆசிரியரின் முதல் நோக்கமாகக் காணப்படுகின்றது. எனவே அன்பையும் அறனையும் வலியுறுத்தும் குறட்பாக்களை மனத்திற்கொண்டு இப்பாடல்களை அவர் புனைந்துள்ளார். ஒவ்வொரு பாடலுக்கும் மேல் அதனோடு தொடர்புடைய குறட்பா தரப்பட்டுள்ளது. திருவள்ளுவரின் அழகிய தோற்றத்தைத் தாங்கியுள்ள அட்டையும் இதனை உணர்த்துகிறது. வருங்காலத்தில் தமிழியக்கத்தைக் கவிஞர் இன்னும் விரிவாக்க வேண்டும் என்பதே நம் விருப்பம்.

—'குன்றன்'

வாய்ப்பும் பேறும்



அகில இந்திய புகழ் நர்ட்டியத் தாரகை குமாரி உமா பாரதியின் பரத நாட்டிய நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருப்பதன் மூலம், நல்ல நாட்டியங்களைக் கண்டு ரசிக்கும் வாய்ப்பையும், கல்வி நிதிக்கு உதவி செய்யும் பேற்றையும், டாக்டர் இராம. சுப்பையா கல்வி உபகாரச் சம்பள வாரியமும், மலேசிய ஆந்திர சங்கமும் நமக்கு வழங்கியுள்ளன.

அவர்களின் கல்வி நிதி வளர்ச்சிக்காக உமா பாரதியின் நாட்டிய நிகழ்ச்சிகள், இம்மாதம் 8-ஆம் தேதி முதல் 28-ஆம் தேதி வரை மலேசியாவின் முக்கிய நகரங்களில் நடைபெற்று வருகின்றன.

குமாரி உமா பாரதி குச்சுப்பிடி நடனத்திற்காகத் தங்கப் பதக்கத்தைப் பெற்றவர். அது மட்டுமல்ல; திரைப்பட நட்சத்திரமுங்கூட!

இலக்கிய அரங்கம்

டாக்டர் இரா. தண்டாயுதம்

மு. செல்வநாதன். ஈப்போ

கே: டாக்டர் மு. வ. எப்போது மறைந்தார்? அவர் மறைந்து விட்டதாக நீங்கள் கருதுகிறீர்களா?

ப: அக்டோபர் 10-ஆம் தேதியோடு அவர் மறைந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. டாக்டர் மு. வ. என்ற மனித உடல் மறைந்திருக்கலாம். ஆனால் அவர் உயிர் மறையவில்லை. அவர் படைத்த பல்வேறு நூல் வடிவில் அது வாழ்கின்றது. புகழுடம்பு என்கிறார்களே, அது இந்த நூலுடம்புதானோ என்று பல நேரங்களில் எண்ணம் வருகிறது. என்னைப் பொறுத்தவரையில் அவர் மறைந்தார் என்னும் பேச்சுக்கே இடமில்லை. ஏனெனில் அவரை அடிக்கடி கனவில் காண்கிறேன். நினைவின் மறு உருவம் தானே கனவு?

கே: டாக்டர் மு. வ. தம் நாவல்களில் அறவாழி, ஆசிரியர் முருகையா போன்ற சிலரைப் படைத்துக் கொள்கிறாரே, ஏன்?

ப: நாவல் என்பது ஓர் உரைநடைக் கலைப் படைப்பு. இதில் நாவலாசிரியன் நேரடியாகக் குறுக்கிட்டுத் தன் கருத்துக்களை விளக்கத் தொடங்கினால், அது நாவலின் கலைக்கட்டுக்கோப்பைப் பாதிக்கும். இவ்வாறு பாதிக்கின்ற காரணத்தால் அவன் தன் கருத்தைக் கூறாமல் இருக்கவும் முடியாது. இதற்கு ஒரு வழியாகவே டாக்டர் மு. வ. தம் நாவல்களில் இத்தகைய கதை மாந்தரைப் படைத்துக்கொண்டு அவர்கள் மூலம் தம் கருத்துக்களை வெளிப்படுத்துகிறார்.

எஸ். விஜய். விஜிடாஸ், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: 1978-ஆம் ஆண்டிற்கான எச். எஸ். சி தமிழ் இலக்கியப் பாட நூல்கள் யாவை?

ப: டாக்டர் மு. வ. வின் "உலகப் பேரேடு", கு. அழகிரிசாமியின் "வஞ்சமகள்", தமிழ்க்கவிக் கோவை, "குயில் பாட்டில்" முதல் ஆறு அத்தியாயங்கள் ஆகியவை.

கே: மு. வ. எழுதிய நாவல்களுள், முக்கியமாகச் சமுதாயத்திற்கு அவர் கூறும் கருத்துக்கள் யாவை?

ப: இயற்கையின் நியதியை உணர்ந்து, சுற்றுப்புறச் சூழலை அறிந்து, தனிப்பட்ட வாழ்க்கையில் ஒழுக்கம் காத்து, மற்றவர்க்கும் பயன்பட வாழ்வதையே டாக்டர் மு. வ தம் நாவல்களில் காட்டுகிறார்.

செல்வராஜு குமரன், கிள்ளான்

கே: ஜெயங்கொண்டார் என்ற நூலாசிரியரைப் பற்றிச் சிறிது கூறவும்?

ப: பரணி நூல்களுள் காலத்தால் முற்பட்ட கலிங்கத்துப் பரணியைப் பாடியவர் இவர். "பரணிக்கோர் சயங்கொண்டான்" என்று பாராட்டப்படுவதிலிருந்து இந்நூல் வகையைப் பாடுவதில் இவருக்குள்ள திறமை புலப்படும். கி. பி. 1112-இல் நடந்த கலிங்கப்போரில் முதற் குலோத்துங்க சோழன் அடைந்த வெற்றியையே இந்நூல் பாடுகிறது. இவரின் வாழ்க்கை வரலாறு தெரியவில்லை

ஆர். லோகநாதன், கம்போங் லாவோட், ஸ்கூடாய்

கே: கவிதைகள் வடிக்க நிச்சயம் இலக்கியம் படித்தாக வேண்டுமா?

ப: இலக்கிய அறிவும் அனுபவமும் கவிதை வடிக்கப் பெருந்துணை செய்வன.

கே: தமிழ் மொழிக்குச் சிறப்பூட்டத் திருக்குறள் பிறந்துள்ளது. பிறமொழிகளிலும் இதுபோன்ற சிறப்பு நூல்கள் ஏதும் உண்டா?

ப: எல்லா மொழிகளிலும் அவ்வம் மொழிக்குச் சிறப்புச் சேர்க்கும் சில நூல்கள் பிறக்கவே செய்கின்றன. அம்மொழியின் எல்லையைக் கடந்து உலகளாவி வாழ்வன வேண்டுமானால் திருக்குறளைப் போன்ற சில நூல்களாக இருக்கலாம்.

க. மாசிலாமணி கமலேந்திரன், சுங்கை போயா தோட்டம்

கே: குண்டலகேசி, வளையாபதி, சீவகசிந்தாமணி இவற்றை இயற்றியவர்கள் யாவர்? இம்மூன்றும் எந்தக் கதைகளைக் குறிக்கின்றன?

ப: குண்டலகேசியை இயற்றியவர் நாகுதத்தனார் என்ற புலவர். பௌத்தக் கதையாகிய தேரி காதையில் 46-ஆவது காதையாக இந்நாலின் வரலாறு அமைந்துள்ளது. வளையாபதியை இயற்றிய ஆசிரியர் யார் எனத் தெரியவில்லை. இக்காவியத்தின் கதை வைசிய புராணத்தின் 35-ஆவது அத்தியாயத்தில் காணப்படுகிறது. சீவக சிந்தாமணியை இயற்றியவர் திருத்தக்க தேவர். சீவகன், தத்தை முதலிய எட்டுப் பெண்களை மணந்து, வாழ்வைத் துய்த்து இறுதியில் துறவு பூண்ட கதையைக் கூறுகிறது.

கே: தாங்கள் விரும்பிப் படிக்கும் உள நூல் ஆசிரியரின் பெயரையும் நூலையும் குறிப்பிடுங்கள்.

ப: உள நூல் எனக்குப் பிடித்த துறையானாலும், நேரம் கிடைக்கும்போது உள நூல் படிப்பேனே அல்லாமல் குறிப்பிட்ட ஆசிரியர், நூல் எனத் தேர்ந்து படிப்பதில்லை. வளர்ந்துவரும் இத்துறையில் நாளும் எத்தனையோ புதுப்புது நூல்கள் வந்துகொண்டிருக்கின்றன.

மல்லிகை மணாளன், கொத்தம்பா தோட்டம், கெடா

கே: நாவலாசிரியர் சாண்டில்யனைப் பற்றிச் சில வரிகள் கூறவும்.

ப: சுவையாகக் கதை சொல்வதில் வல்லவர். வரலாற்று உண்மைகளை எந்த அளவுக்குத் தம் நாவல்களின் கதைத் திட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்கிறார் என்பது கேள்விக்குரியது. பால் உணர்வில் மனித பலவீனத்தைப் புரிந்து பயன்படுத்திக் கொள்வதில் சிறந்தவர்.

கே: மலேசியாவில் தமிழ் நாவல்துறை வளரவில்லையே, ஏன்?

ப: ஓரிரண்டு வரிகளில் பதில் சொல்லக்கூடிய கேள்வி அல்ல இது. எனினும் புத்தக வெளியீட்டுத் துறையில் உள்ள தடைகள், வாசகர் கூட்டம் பெருகாமை, தொடர்ந்து எழுதுவதில் ஏற்படும் சோர்வு ஆகியவற்றைச் சில காரணங்களாகக் கூறலாம்.

எம். லெட்சுமணன், ஜெரம், சிலாங்கூர்

கே: இறவா இலக்கியமாகப் போற்றக்கூடிய தமிழ் இலக்கியம் எது? அதன் படைப்பாளர் யார்? நூலை இங்கு பெறமுடியுமா?

ப: நீங்கள் குறிப்பிடும் இறவா இலக்கியங்கள் தமிழில் எத்தனையோ உள்ளன. சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம் தொடங்கிப் பாரதி, பாரதிதாசன் வரை எத்தனையோ இறவா இலக்கியங்கள் தமிழில் தோன்றிவிட்டன. உரைநடை இலக்கியத்திலும் தோன்றி வருகின்றன. எனவே எதனைத் தனியே குறிப்பிடுவது? இந்நூல்களில் பலவும் இங்கு கிடைக்கின்றன.

கே: எச். எஸ். சி. யில் தமிழ் இலக்கியம் எடுக்க இருக்கும் ஒரு மாணவன், தன்னுடைய இலக்கிய அறிவைப் பலப்படுத்திக் கொள்ள எத்தகைய நூல்களைப் படிக்கலாம்?

ப: மறைமலையடிகள், திரு. வி க., டாக்டர் மு. வ., கி. வா. ஜ. முதலிய பல அறிஞர்கள் தமிழ் இலக்கியம் தொடர்பாகப் பல நூல்களை எழுதியுள்ளனர். அவற்றைப் படிப்பது, இலக்கிய அறிவைப் பலப்படுத்திக் கொள்ள உதவும்.

அந்த முடிவு...

சாப்பிட்டுவிட்டுச் சாய்வு நாற்காலியில் உடலைக் கிடத்துகிறேன். சமையலறையில் என் மனைவி வேலையாக இருக்கிருள். வீட்டிற்கு வெளியே என் பெரிய பையன், அடுத்த வருடம் பள்ளிக்குப் போக வேண்டியவன், தன் தம்பியோடு விளையாடிக்கொண்டிருக்கிருன்.

உண்ட பின் சாய்வு நாற்காலியில் சாய்ந்து "பேப்பரைக்" கையிலெடுத்தேனுனல் இரண்டு பக்கங்களைக்கூட முழுமையாகப் படிப்பதற்குள் நித்திராதேவியிடம் சரணடைந்து விடுவேன். அவளுக்கும் எனக்கும் அப்படி ஓர் உறவு. ஆனுல், இன்று அவளுக்கும் என் மீது கோபம். மனமும் பேப்பரில் பதியவில்லை. பேப்பரைத் தள்ளி வைத்து விட்டுக் கண்களை வெறுமனே மூடிக் கொள்கிறேன்.

இன்றைக்கு மட்டுமா இந்த நிலை? என்றைக்கு அந்தப் பிரச்சனையை மீண்டும் உணர்ந்தேனே அன்றிலிருந்தே இதே நிலைதான். மண்ணைக் குடையும் மண் புழுவைப் போன்று அது மனதைக் குடைந்து கொண்டிருந்தது.

எந்த விஷயத்தையும் நான் இவ்வளவு யோசித்தது கிடையாது. யோசித்து முடிவெடுப்பதென்பதே எனக்கு அதிகப் பழக்கமில்லாத ஒரு செயல். "பட்பட்"டென்று முடிவெடுத்தே பழக்கப்பட்டுப் போன நான் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் முடிவெடுக்க... யோசிக்கிறேன்...யோசிக்கிறேன்... யோசித்துக்கொண்டே இருக்கிறேன்...

மனத்திரையில் என் மகன் தட்டுப்படுகிறன். என் மகனுடைய நல்வாழ்க்கையை, பிரகாசமான வாழ்க்கையை நிர்ணயிக்கப்போகும் விஷயமல்லவா இது? இதை ஒரு சாதாரணப்பிரச்சனையாக எண்ணித் திர ஆலோசிக்காமல் நான் முடிவெடுக்க முடியுமா?

மனம், இரு முனைகளிலும் நெருப்பு எரியும் கொள்ளிக்கட்டையின் இடையே கிடந்து தடுமாறும் சிற்றெறும்புபோலத் தவிக்கிறது.

தமிழ்ப்பள்ளியில் பையனைச் சேர்ப்பதா வேண்டாமா?

நேரத்துக்கு நேரம் நிறத்தை மாற்றும் பச்சோந்திபோல உள்ளம் தடுமாறுகிறது. தலையைக் கையால் அழுத்திப் பிடித்துக் கொள்கிறேன்.

தோட்டத் தமிழ்ப்பள்ளி ஒன்றில் தமிழாசிரியன் நான். தோட்டத்தில் பள்ளிக்குச் சற்றுத் தூரத்திலேயே உள்ள வீட்டில் குடியிருக்கிறேன். மற்ற மொழிகளைச் சரிவர படிக்காததாலோ, தமிழை மட்டும் ஆரம்பப் பள்ளியிலிருந்து கற்றதாலோ எனக்கு அதில் ஒரு பற்று.

எனக்கு... "தமிழைப் பழித்தவனைத் தாய் தடுத்தாலும் விடேன்" என்று மேடையில் முழங்கிப் பாராட்டைப் பெற்ற எனக்கு இப்படி ஒரு சோதனை. உண்மையில் அந்தச் சோதனை என்னைப் பொறுத்ததாயிருந்தால் எப்போதே முடிவெடுத்துவிட்டிருப்பேன்.

ஆனுல் சோதனை எனக்கல்லவே? என் மகனுக்கல்லவா? அவனுக்காக நான் அளிக்கப்போகும் பதிலிலல்லவா அவன் எதிர்காலமே அடங்கியுள்ளது.

அவனைப் பற்றி என்னவெல்லாம் நான் கனவு கண்டு கொண்டிருக்கிறேன். அந்தக் கனவு நனவாக......

தமிழ்ப்பள்ளியில்சேர்க்கலாமா, கூடாதா?

கீறல் விழுந்த இசைத்தட்டு மாதிரி மீண்டும் மீண்டும் மனம் அசைபோடுகிறது.

"அம்மாஆ...அண்ணு கிள்ளித்தான்"-என் சிறிய மகனின் அலறல் கேட்கிறது. சிந்தனை சிதறுகிறது.

"டேய் சேந்தன்! ஏண்டா தம்பியே கிள்ளுன? வந்து ஒந் தோல உரிக்கிறேன் பாரு" என் மனைவி சமையலறையிலிருந்து குரல் கொடுக்கிறள்.

"அவன் ஏன் என்னிய முதல்ல அடிச்சான்"-என் பெரிய மகன் எதிர்க்குரல் கொடுக்கிறன்.

"சரி! சரி! அப்புறமா வந்து உங்கள கவனிக்கிறேன். இப்ப சத்தம் போடாம வெளையாடுங்க. அப்பா தூங்குறுங்க. எழுந்திரிச்சாங்கன்ன சத்தம் போடுவாங்க"

நான் தூங்குகிறேனும். குழந்தைகள் சத்தம் போடக் கூடாதாம். மானேஜரின் தயவில் கிடைத்த இந்த வீடு என்ன மாளிகையா? குழந்தைகள் சத்தம் போட்டால் கேட்காமல் இருக்க... வீடா இது? எனக்குள் பொருமிக் கொள்கிறேன்.

என் மகனும் காலம் முழுதும் இந்த மாதிரி ஒரு வீட்டில்தான் வாழ்க்கை நடத்த வேண்டுமா? அவனுக்கென்று நல்ல வீடாக ஒன்று வேண்டாமா? அவனும் சந்தோஷமாக நாலு பேரைப் போல வாழ வேண்டாமா? அதற்கு...

தமிழ்ப்பள்ளி உகந்ததாக இருக்குமா?

மனம் மீண்டும் வண்டாக மாறிவிடுகிறது.

"தமிழ் உன் தாய் மொழி. அதனுல் உன் மகனைத் தமிழ்ப்பள்ளிக்குத்தான் அனுப்ப வேண்டும். இல்லாவிட்டால், "தமிழ், தமிழ்" என்று நீ மேடையில் முழக்கியதெல்லாம் வெளிவேஷம் போன்று ஆகிவிடாதா?" மனம்தான் கேட்கிறது.

"தமிழ்ப்பள்ளியா? அங்குப் படித்து நீ சிரமப்பட்டது போதாதா? தமிழாசிரியனுகக் கிடந்து உழல்வது போதாதா? உன் மகனும் இதே நிலைக்கு ஆளாக வேண்டுமா?" இதுவும் மனம்தான்.

உண்மைதான். தமிழ்ப்பள்ளியில் ஆறும் வகுப்பு முடித்தபின்னர் ஆங்கிலப் பள்ளியில் சேர்ந்த நான் எல். சி. இ. பாஸ் பண்ண என்ன சிரமப்பட்டேன்? பகீரதப் பிரயத்தனம் என்பார்களே, அதைப் போன்றல்லவா இருந்தது. அது மட்டுமா? எம்.சி.இ. யில் தேர்ச்சியடைய நான் எடுத்துக் கொண்ட முயற்சிகள் கொஞ்சநஞ்சமா? இன்று வரையிலும் மலாயில் "கிரெடிட்" கிடைக்கவில்லையே!



வ. முனியன்
குருன்

தமிழ்ப்பள்ளியில் நான் சோடையாக இருந்திருந்தால் ஆங்கிலப் பள்ளியில் தட்டுத் தடுமாறி மூன்றுவது கிரேடில் பாஸ் பண்ணியதற்கு ஒரு நல்ல காரணமாவது கிடைத்திருக்கும். ஆனுல் "உனக்கு நல்ல எதிர்காலம் உண்டு" என்று தமிழ்ப் பள்ளியில் ஆசிரியர்களால் தட்டிக் கொடுத்துப் பாராட்டப்பட்ட எனக்கே ஆங்கிலப் பள்ளியில் அந்த நிலையென்ருல்...

என் மகன் என்ன ஆவான்? நினைக்கவே மனம் அஞ்சுகிறது.

"மலாய்ப் பள்ளியில் ஆரம்பம் முதல் படித்தால்தான் குழந்தைகள்

அந்த மொழியில் திறமையாக வர முடியும். இடைநிலைப் பள்ளிகளிலும் அவர்களுக்குச் சிரமமேற்படாது" நண்பர் நடராசன் ஒருநாள் என்னிடம் கூறியது நினைவில் நிழலாடுகிறது. அவரும் தமிழாசிரியர்தான். அவருடைய குழந்தைகளை மலாய்ப் பள்ளியில்தான் படிக்கவைக்கிறார்.

என்னுடைய கல்வி அனுபவங்களை வைத்துப் பார்க்கும்போது நண்பர் நடராசன் கூறியது உண்மையாக இருக்காது என்று என்னால் சொல்ல முடியவில்லை.

ஆனால் நடராஜன் ஏன் பாட்டாளிகளின் குழந்தைகளை மட்டும் தமிழ்ப்பள்ளியில் படிக்க வைக்கும்படி வற்புறுத்துகிறார்? எனக்கு ஓரளவுக்கு அவருடைய எண்ணம் புரிகிறது.

என் மகனின் வாழ்வு நலமாக அமைய அவன் மலாய்மொழியில் நன்கு கற்றுத் தேற வேண்டும் என்பதில் எனக்கு எந்த ஐயப்பாடும் இல்லை. ஆனால், வீட்டில் தாய்மொழியைத் தவிர்த்து வேறு பேசி அறியாத அவனை மலாய்ப் பள்ளியில் ஆரம்பத்திலேயே சேர்த்தால் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல் தோன்றாதா? மொழியைப் புரிந்து கொள்ளச் சிரமப்பட மாட்டானா? மொழியில் ஆரம்பத்தில் ஏற்படுகின்ற வெறுப்பு-பின்னர் நிரந்தர வெறுப்பாக மாறிவிட்டால்...?

"மலாய் படிப்பதில் அப்படி ஒன்றும் சிரமமிராது- முன்பெல்லாம் ஆங்கிலப் பள்ளியில் படித்து மாணவர்கள்தேர்ச்சிபெறவில்லையா? அதுவும் நமக்குத் தாய்மொழி இல்லையே? இரண்டாம் மொழியான ஆங்கிலத்தைப் படித்துத் தேறியதைப் போலவே மலாய்மொழியைப் படித்துத் தேறுவதும் அவ்வளவு கடினமாயிருக்காது". நண்பர் நடராசன்தான் இதையும் ஒருநாள் என்னிடம் கூறியிருந்தார்

"உண்மைதான் ஆங்கிலமொழியில் படித்ததுபோல மாணவர்கள் இப்போது மலாய்மொழியில் படிக்கப் போகிறார்கள்" மனத்தில் சிறு சலனம்.

நடராசன் கூறியதிலிருந்தே என் எண்ணத்தில் ஒரு சிறு கீறல் விழுந்திருப்பதை உணர்கிறேன். ஒரு சில பெற்றோர்களிடம் நானே அவர்கள் குழந்தைகளை மலாய்ப்பள்ளியில் சேர்க்கும்படி யோசனை கூறியிருக்கிறேன்.

ஆனால், இன்று என் மகனுக்கென்று வரும்பொழுது தயங்குகிறேன்.

காரணம்?

"மற்றப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்ட மாணவர்களில் எத்தனைப் பேர் இதுவரை படித்துத் தேறியிருக்கிறார்கள்?" மனம் கணக்குப் போடுகிறது.

தோட்டத்தை மனக்கண் அலசுகிறது. மாணிக்கம் தென்படுகிறான். போஸ்டாபீஸில் கிளார்க்காக இருக்கும் அவன் மலாய்ப் பள்ளியில் படித்தவன்தானே?

அவன் ஒருவன்தானா? எஸ்டேட் மண்டோரின் மகன்... முனியாண்டி சி. இ. டி. யில் "மீட்டர் ரீடர"ாக இருக்கிறானே .. அவனும் ஆரம்பக் கல்வியை வேறு பள்ளியில் தொடங்கியவன்தானே?

இவர்கள் இருவரைத் தவிர்த்து வேறு நல்ல உத்தியோகம் பார்ப்ப



வர்கள் இல்லையா? என் மனம் மேலும் தோட்டத்தின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரை செல்கிறது.

அம்பலவாணன் அகப்படுகிறன்... எஸ்டேட் பெரிய கிராணியின் மகன்... யுனிவர்சிட்டியில் லாயருக்குப் படித்துக்கொண்டிருக்கிறன்.

வேறு யாரேனும்?

கந்தசாமி ... முத்துச்சாமி... சேகரன்...ஆண்டாள்... எலிசபெத்... ராஜ்குமார்...மனோகரன்...ஒவ்வொருவராக நினைவுக்கு வருகிறர்கள். இவர்கள் எல்லாரும் ஆரம்பத்தில் வேறு பள்ளியில் படித்துவிட்டு இடைநிலைப் பள்ளிக்குப் போனவர்கள்தானே?

இவர்கள் அனைவரும்......?

"என்ன இன்னும் தூக்கம்! மணி அஞ்சடிக்கப் போவுது. எழுந்திருங்க! எழுந்திருங்க!"-என் மனைவியின் அன்புக் கட்டளை நினைவலைகளிலிருந்து என்னை விடுவிக்கின்றது. கண்ணிமைகள் திறக்கின்றன. காப்பிக்கிளாசுடன் நிற்கும் அவளை ஏறிட்டுப் பார்க்கிறேன். தூங்கியே என்னைப் பார்த்துப் பழக்கப்பட்டுப் போன அவளிடத்தில் நான் தூங்கவில்லை என்று கூறினுல் நம்புவாளா?

"இவளிடம் கூறி யோசனை கேட்டாலென்ன? அவன் எனக்கு மட்டும் மகனல்லவே? அவளுக்குந்தானே." காப்பியை உறிஞ்சிக்கொண்டே யோசிக்கிறேன். வார்த்—தைகளாக வெளிவர அதிக நேரம் செல்லவில்லை.

"ஏன் ராஜம், நம்ப சேந்தனை எந்தப் பள்ளிக்கூடத்துலே போடலாம்னு நினைக்கிறே? எனக்கு யோசித்து யோசித்து மண்டையே வெடிச்சிடும் போல இருக்கு" மனதைத் திறந்து காட்டுகிறேன்.

அவள் என்னை ஆச்சரியத்துடன் பார்க்கிருள். இதுவரையிலும் முக்கிய விசயம் எதற்கும் யோசனை கேட்காத நான் இன்று யோசனை கேட்பது அவளுக்கு ஆச்சரியத்தைத் தருவதில் வியப்பொன்றுமில்லை. மேலும், "வேறு பள்ளிக்கூடத்துக்கு அனுப்புங்க" என்று பெற்ருேர்களுக்கு யோசனை சொல்லிக்கொண்டிருக்கிற நான், திடீரென்று இவ்வாறு கேள்வி கேட்டால்...?

"இதிலே நான் சொல்ல என்னங்க இருக்கு. உங்களுக்கு எது சரின்னு படுதோ அத செய்யுங்க" காப்பிக்கிளாசுடன் நகர்ந்து விடுகிருள். பதியிடம் அவ்வளவு நம்பிக்கை அவளுக்கு.

அவள் சாதாரணமாகச் சொல்லிவிட்டுப் போய்விட்டாள். சாதாரண விசயமாயிருந்தால் நான் ஏன் அவளை யோசனை கேட்கிறேன். நாளைக்கு ஏதேனும் ஆகிவிட்டால் என்னைத்தானே குறை கூறுவாள். பெண் பிள்ளையாக இருந்தாலும் பரவாயில்லை என்று விட்டுவிடலாம், மகனல்லவா?

தமிழ்ப்பள்ளியில் சேர்க்கலாமா கூடாதா?

மீண்டும் மூளையைக் குழப்பிக் கொள்கிறேன். காலம் இருந்திருந்தால் இப்படி மூளையை போட்டுக் குழப்பிக் கொள்வதைக் கொஞ்சம் குறைத்திருப்பேன்.

ஆனுல், இன்னும் பத்துத் தினங்களில் புது வருடம் பிறக்கப் போகிறதே!

என் மகன் பிறந்து மூன்று வயதாகும்வரை இப்படி ஒரு பிரச்சனை ஏற்படும் என்று நான் கனவில் கூட நினைத்திருப்பேனு என்பது சந்தேகமே. ஆனுல், மூன்று வயதில் குழந்தைகளைப் பள்ளியில் பதிந்து கொள்ள வேண்டும் என்ற நிலை உருவாகியபோது......

தமிழாசிரியன் என்னும் முறையில் என் மகனைத் தமிழ்ப் பள்ளியில்தான் படிக்க வைக்க வேண்டுமென்று நினைத்தேன். இல்லாவிட்டால் என் தமிழ்ப்பற்றைச் சந்தேகிக்க மாட்டார்களா? என்னை நம்பித் தங்கள் குழந்தைகளை அனுப்பும் பெற்ருேர்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்? தமிழ்ப் பள்ளியின் மீதுதான் அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படுமா?

ஆனுல், இன்னொரு வகையில் மனதில் ஒருவித அச்சம். தோட்டத் தமிழ்ப்பாடசாலைகளின் நிலையை என்னையன்றி வேறு யார் நன்கு அறிவர்? பாடசாலைகளா அவை? கூத்து மேடைகளிலும், தோட்ட முதலாளிகளின் பெருமனது காரணமாகக் கிடைத்திட்ட "ஹைதர் அலி" காலத்துக் கட்டடங்களிலும் நடக்கும் அவற்றைப் பள்ளிகள் என்று கூற முடியுமா?

போதாதற்கு மூங்கில் தட்டிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட வகுப்பறைகள்...முதல் வகுப்பு மாணவர்கள் போடும் சத்தம் ஆறும் வகுப்பு மாணவர்களுக்கும் கேட்கும் நிலை...பன்மை வகுப்புக்களைப் போதிக்க ஆசிரியர்கள் எடுக்கும் தசாவதாரம்...அவர்களின் மனச் சோர்வு... அரசியல் என்னும் குளத்தில் நீந்தி விளையாடிக் கொண்டிருக்கும் சில ஆசிரியர்களும், தலைமையாசிரியர்களும்...ஒட்டு மொத்தமாக இதுதானே தமிழ்ப் பள்ளி, இந்தப் பள்ளியில் என் மகனைச் சேர்த்தால்...?

மேலும், தமிழ்ப்பள்ளியில் படித்த என் நிலைமை எனக்கல்லவா தெரியும்? என் காலத்திலாவது ஏதோ தமிழாசிரியனுக வந்து காலத்தை ஓட்ட முடிகிறது.

இப்போது... தமிழாசிரியனுக வருவதற்குத் தமிழ் தெரிந்திருப்பது கூட அவ்வளவு முக்கியமில்லையே. எம். சி. இ. யில் மலாய் மொழியில் "கிரெடிட்" அல்லவா பெற்றிருக்க வேண்டும். மேலும் டி. டி. சி. யில் கூட தமிழாசிரியர்களாகப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மலாயில் அல்லவா பயிற்சி கொடுக்கிருர்கள்..

ஆனுலும், என் மகன் தமிழாசிரியனுக வரவா நான் கனவு கண்டு கொண்டிருக்கிறேன்? அவன் ஒரு லாயராக, டாக்டராக, எஞ்சினியராக வர வேண்டாமா?



மனைவிக்காகக் கணவன் காரின் கதவைத் திறந்தால் இரண்டில் ஒன்று புதியது என்று அர்த்தம்.

—டி. வி. பாலு,
சென்னை

பள்ளியில் பதிவதைத் தள்ளிப் போட்டு விடுகிறேன். கடைசி நேரத்தில்கூட பதிந்து கொள்ளலாமே!

அதை இனியும் தள்ளிப்போட முடியவில்லை. புதிய வருடத்தில் அவன் பள்ளிக்குப் போக வேண்டுமே.

தமிழ்ப்பள்ளியில் சேர்ப்பதா கூடாதா?

மனம் மீண்டும் அதைச் சுற்றியே வட்டமிடுகிறது.

"அப்பா! அப்பாஆ"மனம் திடுக்கிட்டு விழித்துக்கொள்கிறது. என் மகன்தான் குரல் கொடுக்கிருன்.

"மாமாங்க வர்ருங்கப்பா"

ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கிறேன். நண்பர்கள் கிருஷ்ணனும் சந்தானகோபாலும் வருவது தெரிகிறது.

"எந்தக் கோட்டையப் பிடிக்கத் திட்டம் "தீட்டிக்கிட்டிருக்கய்யா"? நண்பர் சந்தானகோபால் கேட்டுக்கொண்டே, கிருஷ்ணன் பின் தொடர, உள்ளே நுழைகிறர்.

"கோட்டைய எங்கே ஐயாபிடிக்கிறது? கட்டி வச்சிருக்கும் கோட்டையில்ல இடிஞ்சி விழுந்து தவிடுபொடியாகிடும் போல இருக்கு" என் உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்தி விடுகிறேன்.

"அப்படி எந்தக் கோட்டைய்யா இடிஞ்சி விழுந்திடுச்சி? உனக்குத்தான் சொந்தமா ஒரு வீடு கூட இல்ல, ஒடஞ்சி போக"ஹோ...ஹோ என்று விழுந்து விழுந்து சிரிக்கிறர் கிருஷ்ணன். அவருக்கு எல்லாமே நகைச்சுவைதான்.

நண்பர்களிடம் கூறினுல் நல்ல முடிவு ஏதேனும் கூருமலா போய் விடுவார்கள்? விசயத்தைக் கூறுகிறேன்.

"இதிலென்னய்யா யோசிக்க வேண்டியிருக்கிறது? நம்ப குழந்தைங்கள தமிழ்ப் பள்ளிக்குத்தான் அனுப்பணும். அதிலே எந்தச் சந்தேகமும் கூடாது. தமிழாசிரியர்களாகிய நாமே அனுப்பலேனு வேறு யாரய்யா தமிழ்ப்பள்ளிக்குக் குழந்தைகள அனுப்புவாங்க? மேலும், நம்ப மொழி, கலை, கலாச்சாரத்துக்கு அடிப்படையே தமிழ்ப்பள்ளிதானே?" சந்தானகோபால் உறுதியுடன் கூறுகிறர்.

அவர் தமிழ்ப்பற்று மிக்கவர் என்பது எனக்குத் தெரியும். அவருடைய குழந்தைகளைத் தமிழ்ப் பள்ளிக்குத்தான் அனுப்பி வருகிறார். அவரிடமிருந்து வேறொரு பதிலை நான் எதிர்பார்த்திருக்க முடியாது தான்.

"தமிழ்ப்பள்ளிக்கு நம்ப குழந்தைகளை அனுப்பறதுலே எனக்கு அவ்வளவா உடன்பாடு இல்லே. தமிழ்ப்பள்ளிகளைப் பத்தி நமக்கு நல்லா தெரியும். தெரிஞ்ச நாமே நம்ப குழந்தைகளைக் கொண்டு போய்ப் பாழுங் கிணத்துலே தள்ளலாமா? தமிழ்ப்பள்ளியில படிச்சிட்டு இடைநிலைப் பள்ளியில் ரிமூவ் வகுப்பில் சேர்ந்து படிக்கும்போது மாணவங்க எவ்வளவு சிரமப்படறாங்க தெரியுமா? பலருக்கு ஆசிரியர் பேசறதே புரியறதில்லையாம். இந்த நிலையில அவுங்க எல். சி. இ. வகுப்பைத் தாண்டறதே பிரமப் பிரயத்தனமா இருக்கிறபோது அவுங்க எம். சி. இ. முடிப்பதோ, மேலே படிக்கிறதோ அல்லது நல்ல வேலையில சேர்றதோ சுலபமான காரியமா? அதனால மலாய்ப்பள்ளியில் ஆரம்பத்திலிருந்து படித்தால்தான் குழந்தைகளுக்கு நல்ல எதிர்காலம் அமையும்" - கிருஷ்ணன் குட்டிப் பிரசங்கமே செய்துவிடுகிறார்.

அவருடைய குழந்தை ஒன்று வேறு பள்ளியில்தான் படித்து வருகிறது. அவருடைய கட்சிக்கு அவர் வலு தேடித்தான் ஆகவேண்டும்.

கிருஷ்ணன் கூறியவற்றை முழுமையாக என்னால் ஏற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் எல்லாவற்றையுமே தள்ளிவிடவும் முடியவில்லை. சில எனக்குத் தெரிந்த விசயங்கள்தானே.

நண்பர் சந்தானகோபாலுக்குக் கோபம் கொப்புளிக்கிறது. வார்த்தைகள் சூடாக வெளிவருகின்றன. "நீங்க சொல்றதை என்னால் ஏத்துக்க முடியாது. மாணவர்கள் நல்லா தேறலேன்னா அதுக்குத் தமிழ்ப் பள்ளிக்கூடம் காரணமில்ல. ரிமூவ் வகுப்பு ஆசிரியங்கதான் காரணம். அவுங்க தமிழ்ப்பள்ளிக்கூட மாணவங்களை உதவாக்கரைங்களா நினைக்கிறாங்க. அவுங்க மட்டும் அக்கறையோட...வாங்குற சம்பளத்துக்கு... சொல்லிக் கொடுத்தாங்கன்னா நம்ப மாணவங்க நிச்சயம் நல்லா படிப்பாங்க" நெஞ்சம் படபடக்க, உதடுகள் துடிக்க உணர்ச்சிப் பிழம்பாக மாறிவிடுகிறார் சந்தானகோபால்.

நான் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறேன். இவர்களுடைய காரசாரமான விவாதத்திலிருந்தாவது என்னுடைய தலைவலிக்கு மருந்து கிடைக்குமானால்...

காப்பி வருகிறது.

"இதிலே கோபப்படறதுக்கோ சத்தம் போடறதுக்கோ ஒண்ணுமில்லே. உள்ளதைத்தான் சொல்றேன்" காப்பியை ஓர் உறிஞ்சு உறிஞ்சிவிட்டு மெதுவாக ஆரம்பிக்கிறார் கிருஷ்ணன்.

அவர் எப்போதுமே அப்படித்தான். பாய்வார். எதிரி திரும்பிப் பாய்ந்தால் சுருதியைக் குறைத்துக் கொள்வார். ஆனால் விட்டுக்கொடுக்க மாட்டார் சுலபத்தில். விடாக் கண்டன்.


"தமிழ்ப்பள்ளிகள்லே மலாய் மொழி போதிக்கிறதுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நேரம் ரொம்பக் குறைவு. அதிலும் பன்மை வகுப்பு நடத்தப்படற பள்ளிகள்லே மலாய் மொழிப் போதனை எந்த நிலையில இருக்குதுன்னு உங்களுக்கு நான் சொல்லத் தேவையில்லே..." காப்பியை மேலும் இரண்டு மிடக்கு குடித்துவிட்டுத் தொடர்கிறார்.

"மேலும் மலாய்மொழி ஆசிரியர்களைத் தங்களுக்குக் கடிதம் எழுதுபவர்களாகவும் டைப்பிஸ்டாகவும் வைத்திருக்கும் தலைமையாசிரியருங்க உள்ள தமிழ்ப்பள்ளிகள்லே மலாய் மொழிப் போதனையா நடக்குது? இதனால்தான் "ரிமூவ்" வகுப்புக்கு அவுங்க போகும்போது அவுங்களுக்குக் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல இருக்கிறது. அதனாலதான் ஆரம்பத்திலிருந்தே வேறு பள்ளியிலே போடணும்னு சொல்றேன்."

முடித்துவிட்டு எங்களை நோட்டம் விடுகிறார் கிருஷ்ணன்.

"நீங்க சொல்றது உண்மையில்லேன்னு நான் சொல்ல வரலே. ஆனால் அதுக்காகத் தமிழ்ப்பள்ளிகளைக் குறைகூற வேண்டாம்னுதான் சொல்றேன். சில ஆசிரியர்களைத்தான் குறைகூறவேண்டும் அதுக்கு. இந்த நிலை வேறு பள்ளிகளிலும் இருக்கலாமில்லையா?"

உங்களுக்குத் தெரியுமோ இல்லையோ, பட்டணத்திலே இருக்கிற வேறு பள்ளியிலே படிக்கிற மாணவர்கள்லே... இந்திய மாணவர்கள்லே... நூத்துக்கு எம்பத்தஞ்சு சதவிதம் ஒண்ணுமே தெரியாதவங்களா இருக்காங்களாம். மீதியிருக்கிறவங்களும் ஒருத்தர்கூட "ஏ, பி" வகுப்புங்கள்லே படிக்கலியாம். இத அந்தப் பள்ளிக்கூடத்துத் தலைமையாசிரியரே என்னிடம் சொன்னாரு. அவரே இந்த மாணவர்கள்லாம் தமிழ்ப்பள்ளிக்கூடத்துலே படிச்சிருந்தா நல்லா படிச்சிருக்க முடியும்னு சொல்லி வருத்தப்பட்டுக்கிட்டாரு. இதப்பத்தி என்ன நினைக்கிறீங்க? வேறு பள்ளியிலே படிச்சா...?"



"ஏண்டா ரொம்ப நேரம் இப்படி உட்கார்ந்து பழகுறே?"

"அடுத்த மாசம் மணவறையிலே உட்காரணுமே!"

"சந்தானகோபால் சொல்றதிலேயும் உண்மை இருக்கு" - நான் இடைவெட்டுகிறேன். "வேறு பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்ட பல பிள்ளைங்க பெயர்கூட எழுதத் தெரியாத நிலையிலே இருக்கிறது எனக்குத் தெரியும். ஓரிரண்டு பேரைத் தவிர மற்றவங்களெல்லாம் எல். சி. இ. "ட்ராப் அவுட்டு"ங்களாகத்தான் இருக்காங்க..."

"அதுக்கு அந்த மாணவர்களோட பெற்றோருங்கதான் காரணமின்னு நான் சொல்லுவேன். அவுங்க மட்டும் கொஞ்சம் அக்கறை எடுத்து வீட்டிலே தங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுத்திருந்தாங்கன்னா அவுங்கள்லே பலபேர் பாஸ் பண்ணியிருப்பாங்கன்னுதான் நான் நினைக்கிறேன்" கிருஷ்ணன் பெற்றோர்கள் மீது பழியைப் போட்டுத் தப்பிக்க நினைக்கிறார்.

"பெற்றோர்களிடம் குறைபாடு உண்டுதான். அதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் அதையே நாம தமிழ்ப்பள்ளிக்கும் கூறமுடியுமில்லையா?" சந்தானகோபால் குறுக்கிடுகிறார்.

"எனக்குத் தெரிஞ்ச வரையிலும் தமிழ்ப்பள்ளியிலே முதல்ல படிச்சிட்டு பிறகு "ரிமூவ்" வகுப்பு மூலம் படிச்சவங்கதான் பலபேர் முன்னேறியிருக்காங்க."

"ஆனால் நீங்க ஒன்றை மறந்திட்டுப் பேசறீங்க. ரிமூவ் வகுப்பின் மூலம் படிக்கும்போது ஒரு மாணவனுக்கு ஒரு வருஷம் இழப்பு ஏற்படுது. அந்த ஒரு வருஷத்தில் என்னென்னவோ நடக்கலாம். முக்கியமா வேலை வாய்ப்புங்களை நினைச்சுப்பாருங்க" கிருஷ்ணன் சிறிது இறங்கி வந்தாலும் விட்டுக்கொடுக்கத் தயங்குவது தெரிகிறது.

யார்தான் விட்டுக்கொடுப்பார்கள்? அதுவும் விடாக்கண்டன் என் பெயர்பெற்ற கிருஷ்ணனா விட்டுக்கொடுப்பார்?

"அதை நாம அவ்வளவு பெரிசுபடுத்த வேண்டியதில்லை. நம்முடைய தாய்மொழிக்காக அந்த ஒரு வருஷத்தை நாம தியாகம் செய்யத் தயங்கக்கூடாது" - சந்தானகோபால் விவாதத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க முயல்கிறார். "ஒரு குழந்தை தன்னுடைய ஆரம்பக் கல்வியைத் தன் தாய்மொழியிலேயே படிப்பதுதான் நல்லது என்று மேல்நாட்டு அறிஞர் ஒருவர் கூட சொல்லியிருக்காரு. எனவே இதையெல்லாம் வச்சுப் பார்க்கும் போது தமிழ்ப்பள்ளியிலே நம்ப குழந்தைகளைப் படிக்கவைக்கிறது தான் நல்லதுன்னு நான் நினைக்கிறேன்"

நண்பர்கள் சென்றுவிடுகின்றனர்.

நான் ஒரு முடிவுக்கு வந்துவிடுகிறேன்.

வழிகாட்டுகிறார் வள்ளுவர்

படிக்காவிட்டாலும் பரவாயில்லை

ஜி. முருகு சுப்பிரமணியன்

இன்று நாம் எடுத்துக்கொள்ளும் குறள் பொருட்பாலில் கேள்வி என்னும் அதிகாரத்தின் கீழ் இடம் பெற்றிருக்கும் 414-வது குறளாகும்.

> 'கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு
> ஒற்கத்தின் ஊற்றாந் துணை' (414)

இக்குறளுக்கு டாக்டர் மு. வ. எழுதியிருக்கும் தெளிவுரை வருமாறு:

"நூல்களைக் கற்கவில்லை யாயினும், கற்றறிந்தவரிடம் கேட்டறியவேண்டும். அஃது ஒருவனுக்கு வாழ்க்கையில் தளர்ச்சி வந்தபோது ஊன்றுகோல்போல் துணையாகும்"

வள்ளுவர் எதனையும் மிக அழுத்தமாகவும், எவ்வித மான ஐயத்திற்கு இடமின்றியும் தீர்க்கமாகச் சொல்வதில் வல்லவர். அதுவும் நாம் மறுக்கமுடியாத அளவுக்குப் பணிவுடன் ஏற்கவேண்டிய அறிவுக்கட்டளைகளாகவும், பல குறள்கள் அமைந்திருப்பதையும் திருக்குறளை ஊன்றிக் கற்பார் உணரமுடியும். அத்தகைய கட்டளைக் குறள்களில் ஒன்றே "கற்றில னாயினும் கேட்க" என்னும் இந்தக் குறளாகும்.

படிக்காவிட்டாலும் - ஒருவேளை கல்வி அறிவு இல்லாதவனாகவே இருந்தால்கூட பரவாயில்லை. அதனைக் குறையாகக் கருதவேண்டியதில்லை. அத்தகையவர்கள் கேள்விச் செல்வத்தை முயன்று தேடுபவர்களாக இருந்தால் கல்லாதவர்கள்கூட நல்லவர்களாக, வல்லவர்களாக விளங்கமுடியும் என்பதுதான் இந்தக் குறளின் கருத்தாகும்.

"கற்றது கைம்மண் அளவு கல்லாதது உலகளவு" என்று சான்றோர்கள் சொல்வது வெறும் அடக்க வார்த்தை என்று மட்டும் கருதிவிடக்கூடாது. அது அவர்களின் அடக்கத்தைப் பிரதிபலிப்பது உண்மையே. அதே சமயத்தில் கற்றது கொஞ்சம், கல்லாதது உலகையும் விஞ்சும் என்றும் அறிவாளிகள் சொல்வது நூற்றுக்கு நூறு உண்மையாகும். கடலைப் போன்று கல்வி பரந்து கிடப்பது; ஆழம் காண முடியாதது. அதனால் தான் "சாந்துணையும் கற்க" என்று வள்ளுவர் மற்றொரு குறளில் கட்டளையிடுகிறார். "கல்வி கரையில, கற்பவர் நாள்சில" என்பது முழு உண்மை. ஒரு மனிதன் தன் வாழ்நாள் எல்லாம் - ஆயுட்காலம் முழுவதும் ஓயாது உறங்காது படிப்பதாக வைத்துக்கொண்டால்கூட கல்வியில் பூரணத்துவம் பெற்றுவிட்டதாக - கற்கவேண்டிய அனைத்தையும் கற்றுவிட்டதாகச் சொல்லமுடியாது.

ஆகவே அனைத்தும் அறிந்தவர், முற்றும் கற்றவர் கல்விக்கடலின் கரையைக் கண்டவர் என்று சொல்லத் தக்கவர் இந்த உலகத்தில் யாருமே இல்லை. அதனைக் குறிக்கத்தான் கல்வித் தெய்வமாகக் கருதப்படுகிற கலைமகளே இன்னும் படித்துக்கொண்டிருப்பதாகப் புலவர்கள் பாடியிருக்கிறார்கள்.

கல்விச் செல்வத்தை முழுமையாகத் தேட முடியாவிட்டாலும், தம்மால் இயன்ற அளவு ஈட்டவேண்டிய கடப்பாடு மனிதராய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. கல்வியின் அருமைபெருமைகளை வள்ளுவர் பல குறள்களில் நம் மனதில் பதியும்படியாகக் கூறி இருக்கிறார். "கற்றவர்க்கு இருப்பவைதாம் கண்கள்; கல்லாத மற்றவர்க்கு அவை புண்கள்" என்று நெஞ்சில் சுடும்படியாகக் கல்வியின் தேவையை அவர் வலியுறுத்தி இருப்பதைக் காண்கிறோம். இவ்வாறு தாம் வற்புறுத்தியும் கல்வியில் நாட்டமின்றிக் கைநாட்டுப் பேர்வழிகளாய், தற்குறிகளாய், எழுத்தறிவில்லாத கூட்டமாய்ச் சமுதாயத்தில் கணிசமான பகுதியினர் நடமாடக்கூடும் என்பதையும் வள்ளுவர் நன்கு உணர்ந்திருக்கிறார். கல்வியின் பொருட்டுத் தாம் விடுத்திருக்கும் கட்டளைகளைப் புறக்கணித்து வாழக்கூடிய மாந்தர் கூட்டத்தையும் அவர் மறந்துவிடவில்லை. அவர்களுக்கும் விமோசனம் உண்டு; உய்வதற்கு மார்க்கம் உண்டு என்பதையே "கற்றிலனாயினும் கேட்க" என்னும் இக் குறள் மூலம் வள்ளுவர் உணர்த்துகிறார்.

கல்வியைக் கண்ணுக்கு நிகராகப் பேசிய வள்ளுவர், கல்வி பெறாத காரணத்தினால் கண்ணிருந்தும் குருடர்களாய் நடமாடுகின்ற பரிதாபத்துக்குரிய மக்களுக்கு இரக்கப்பட்டு அவர்கள் வாழ்க்கையில் வழிபார்த்து நடப்பதற்கு ஊன்றுகோல் ஒன்றை வழங்குகிறார். வள்ளுவரின் அருள் நெஞ்சத்தை, கருணை உள்ளத்தை இந்தக் குறளில் காண்கின்றோம். "கற்கும்படி எத்துணை அழுத்தமாக உள்ளத்தைத் தொடும்படி எடுத்துரைத்தோம். அப்படி இருந்தும் படிக்காத கூட்டமாய்க் காட்டிலுள்ள மரங்களைக்காட்டிலும் நல்ல மரங்களாய் வளர்ந்து காட்சி தந்து பல்லை நிற்கும் கல்லாதவர் தொகை இன்னும் மிகப் பெரிதாக இருக்கிறதே" என்று வள்ளுவர் ஆத்திரத்தால் பொங்கி எழாமல், கல்லாத மக்களைப் பற்றியும் சற்று இரக்கத்துடன் சிந்திக்கிறார். அவர்களின் நிலைக்காக வருந்தி அவர்களுக்கும் ஒரு வழியை - வாழ்க்கை ஒளியை - காட்டுவதற்கு முற்படுகிறார்.

இந்தக் குறளில் கல்லாதவர்க்கு வள்ளுவர் காட்டும் வழிதான் யாது? 'கல்விச் செல்வத்தைச் சேமிக்கத் தவறிவிட்டீர்கள். போனால் போகிறது. கேள்விச் செல்வத்தையாவது திரட்டுங்கள். கல்விச் செல்வம் இல்லாத குறையைக் கேள்விச் செல்வம் ஓரளவு ஈடுகட்டும்; கண்ணில்லாத குருடர்களுக்குக் கம்பு உதவுவது போல் கல்வி பெறாத மக்களுக்குக் கேள்விச் செல்வம் ஊன்றுகோலாகத் துணை நிற்கும்' என்பது வள்ளுவரின் திடமான நம்பிக்கையாகும்.

மனித வாழ்க்கையில் உறங்கிக் கழிகிற நேரம், ஊர் சுற்றுகிற நேரம், உல்லாசமாகச் செல்கிற நேரம் இவை அனைத்தையும் கழித்துப் பார்த்தால் படிப்பதற்கு உள்ள நேரம் மிகமிகக் குறைவாகவே மிஞ்சும். அதனால்தான் "இளமையில் கல்" என்று சொல்லி வைத்திருக்கிறார்கள். படிக்க வேண்டிய இளமைப்பருவத்தில் எவ்வளவு முடியுமோ அவ்வளவையும் கருத்தூன்றிப் படித்துவிட வேண்டும். வயதான பிறகு வாழ்க்கைச் சுமை வந்துவிட்ட பிறகு படிப்பு ஏறுவது கடினம். படிப்பது மனத்தில் பதிவதும் கடினம். படிப்பதற்கு நேரம் கிடைப்பதும் கடினம்.

இதற்கு விதிவிலக்காக வாழ்நாளெல்லாம் படித்துக்கொண்டே இருப்பவர்கள் ஆங்காங்கு ஒருசிலர் இருக்கக்கூடும். அவர்கள் விதிவிலக்கானவர்கள். அவர்களை விடுத்துச் சராசரி மனிதர்களை எடுத்துக்கொண்டால் கல்விக்கு அவர்கள் வாழ்க்கையில் ஒதுக்கக்கூடிய நேரம் வரம்புக்கு உட்பட்டதாகவே இருக்கும். அவ்வாறு படிப்புக்கு ஒதுக்குகிற நேரத்திலும் ஒவ்வொருவரும் எதைப் படிக்கிறார்கள் என்று ஆய்வு நடத்தினால் சுவைமிக்க தகவல்களை நாம் பெற முடியும்.

ஒன்றா இரண்டா?

ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மனிதனும் படிக்க வேண்டியவை ஒன்றா இரண்டா? தினசரி வெளியாகின்ற பத்திரிகைகளை, உலக நடப்பைத் தெரிந்து கொள்வதற்காகப் படிக்க வேண்டி இருக்கிறது. மலேசியா போன்ற

நாட்டில் தமிழ்ப்பத்திரிகைகள் மட்டும் படித்தால் போதாது. நாட்டு நடப்புக்களை முழுமையாக அறிந்திருக்க வேண்டுமானால் மலேசிய மொழி ஏடுகளையும் ஆங்கில ஏடுகளையும்கூடத் தினந்தோறும் படித்துவர வேண்டும்.

வாரஇதழ்கள்,மாத இதழ்கள் என்று எடுத்துக்கொண்டால் அவசியம் படிக்கவேண்டியவை என்று பொறுக்கி எடுத்தால் கூட ஒவ்வொருவரும் குறைந்தது நான்கு அல்லது ஐந்து இதழ்களையாவது தொடர்ந்து படிக்க வேண்டும். இதுதவிர, புதிது புதிதாக வெளிவருகின்ற நூல்களில் ஒரு சில நூல்களையாவது அவரவர் துறைக்கு ஏற்பப்படிக்கவேண்டும்.இவை தவிரமுன்னோர் படைத்திருக்கும் இலக்கியச் செல்வங்களையும் முடிந்த அளவு துய்க்கவேண்டும். மேலும் ஒவ்வொருவரும் தத்தம் வாழ்க்கைத் தொழிலுக்காக, வழக்கறிஞர் என்றால் சட்ட நூல்களையும், டாக்டர் என்றால் மருத்துவ நூல்களையும், தொடர்ந்து கட்டாயம் படித்துவர வேண்டும். அப்பொழுதுதான் தம் தொழிலில் கால மாற்றத்துக்கு ஏற்ப நன்கு பிரகாசிக்கமுடியும்

இப்படி ஒவ்வொருவரும் கல்விக்காக நேரத்தைச் செலவிடவேண்டிய அவசியம் பற்றி விரிவாக அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால் இது நடைமுறை வாழ்க்கையில் எந்த அளவு சாத்தியப்படும் என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். வள்ளுவரும் "கல்வியை ஈட்டு; சாந்துணையும் கற்க" என்று கட்டளையிடுகின்ற அதே நேரத்தில் மனித வாழ்க்கையில் எந்த அளவுக்குக் கல்விக்கு இடம் இருக்க முடியும் என்பதையும் சிந்தித்துச் சீர்தூக்கியே "கற்றிலனாயினும் கேட்க" என்னும் இந்தக் குறளையும் எழுதி வைத்திருக்கிறார்.

முற்றிலும் கல்லாதவர்களான கைநாட்டுப் பேர்வழிகளுக்கும் கேள்விச் செல்வம் ஊன்றுகோல்போல் உதவும். அதுபோலப் படிப்பறிவு உள்ளவர்களுக்கும் கேள்விச் செல்வம் பல்லாற்றானும் பயன்படும். படித்தவர்களாயினும் பரபரப்பு மிகுந்த இந்த உலகத்தில் புதுமையும் அறிவுத் திறனும் நாளும் பெருகிவருகிற இந்தச் சூழ்நிலையில் எல்லாவற்றையும் தானே படிப்பதென்பது இயலாத காரியம்.

எடுத்துக்காட்டாகப் பெரிய புராணம், கம்பராமாயணம், சிலப்பதிகாரம் போன்ற மிக உயர்ந்த இலக்கியச் செல்வங்களை எல்லாம் நாம் பெற்றிருக்கிறோம். ஆனால் அந்தக் காப்பியங்களை எல்லாம் வரிவிடாமல் படித்துத் திளைப்பதற்கு நம்மில் எத்தனைப் பேருக்குப் பணம் இருக்கிறது. எத்தனைப் பேருக்கு நேரம் இருக்கிறது. எத்தனைப் பேருக்கு வாய்ப்பிருக்கிறது என்று எண்ணிப் பார்த்தால் கிடைக்கிற விடை ஏமாற்றமாகத்தான் இருக்கும்.

பேரிலக்கியங்களை விட்டு விடுவோம். நீதிவெண்பா, நாலடியார் போன்ற அரிய நீதி நூல்களையாவது நம்மில் எத்தனை பேர் படித்திருக்கிறோம்? இதற்கெல்லாம் யாரையும் குறை சொல்லவோ, நொந்து கொள்ளவோ காரணமில்லை. இன்றைய உலகச் சூழ்நிலையும் வாழ்க்கை நெருக்கடியும் ஓய்வாக அமர்ந்து இலக்கியங்களைப் பயில்வதற்கு உகந்ததாகப் பெரும்பாலோருக்கு அமையவில்லை. வயிற்றுப்பாட்டுக்கே பெரும்பகுதி நேரத்தைச் செலவிட்டுத் தீரவேண்டிய இக்கட்டான சூழ்நிலையிலேயே நம்மில் பலர் வாழ்ந்து வருகிறோம். இந்நிலையில் இலக்கிய இன்பம் நுகர்வதற்கு நேரம் கிடைப்பது அரிதாக இருப்பதில் வியப்பேதுமில்லை.

வள்ளுவர் வாழ்க்கையின் பல்வேறு கூறுகளையும் நன்கு உணர்ந்தவர். ஆதலால், படிப்புக்குப் போதிய நேரம் ஒதுக்க முடியாத பெரும்பான்மை மக்களின் சங்கடத்தை உணர்ந்து அவர்களுக்கு வழியைக் காட்டவே இந்தக் குறளைப் படைத்திருக்கிறார்.

"கம்பன் எழுதிய இராமகாதையைப் படிக்க நேரமில்லையா? அதற்கு ஏற்ற ஆசிரியர் துணை இல்லையா? பரவாயில்லை. கம்பனைப்பற்றி அறிஞர்கள், நிகழ்த்தும் சொற்பொழிவுகளைக் கேள். கம்பராமாயணத் தொடர் விரிவுரைகளுக்குத் தவறாமல் செல். கம்பனின் கவிச்சுவையை நீ துய்க்க முடியும்" என்பதுதான் வள்ளுவரின் அறிவுரையாகும். கம்பனைக் கற்றிலனாயினும் கேட்க என்று வள்ளுவர் கூறுவது நம் மனத்தில் நன்கு பதியுமென்று நம்புகிறேன்.

கூட்டங்களுக்கு...

அதுபோலச் சிலப்பதிகாரத்தை. வள்ளுவத்தை சிந்தாமணியை, ஷேக்ஸ்பியரை, இக்பாலைக் கற்றிலனாயினும் கேட்க என்பதுதான் வள்ளுவர் கூறுகிற மந்திரமாகும். இலக்கியக் கூட்டங்களுக்குச் சென்று அறிஞர்களும், இலக்கியச் செல்வர்களும் நிகழ்த்துகின்ற உரைகளைத் தவறாமல் காது கொடுத்துக் கேளுங்கள். ஓர் அறிஞரின் உரையைக் கேட்பது நூற்றுக்குமேற்பட்ட நூல்களைப் பயில்வதற்குச் சமமாகும். மேடையில் இலக்கியம் பற்றியோ, சமயம் பற்றியோ, அறிவியல் பற்றியோ உரை நிகழ்த்துகின்ற ஓர் அறிஞர், தாம் வாழ்நாளெல்லாம் படித்திருக்கும் நூல்களின் சுவை அனைத்தையும் ஒன்றுதிரட்டித் தம் வாழ்க்கை அனுபவத்தையும் இணைத்துக் கருத்துக் கோவையாக, கரும்புக் கட்டியாக வழங்குவார். "தாம் பெற்ற இன்பத்தை இவ்வையகமும் பெறுக" என்னும் நன்னோக்கில் அந்த அறிஞர் நிகழ்த்துகிற சொற்பொழிவு, அதனைச் செவிமடுக்கின்ற மக்களுக்கு வரப்பிரசாதம் போன்ற அரிய வாய்ப்பாகும். ஆகவே சிறந்த அறிஞர்கள் நிகழ்த்துகின்ற உரைகளைச் செவிமடுப்பதற்கு அனைவரும் முந்துவது இன்றியமையாதது. அந்த உரையின் மூலம் பெறுகின்ற கேள்விச் செல்வம் இணையற்றது; ஈடற்றது; ஊன்றுகோல்போல மனித வாழ்க்கைக்குத் துணையாக அது பயன்படும்.


இப்பொழுது நம்மிடையே கூட்டங்களுக்கும், சொற்பொழிவுகளுக்கும் செல்கின்ற ஆர்வம் பெரிதும் குறைந்து வருகிறது. சிறந்த அறிஞர் பேச வருகிறார் என்றால்கூட, காலி நாற்காலிகளையே மண்டபங்களில் அதிகமாக அவர் எதிர்நோக்க நேரிடுகிறது. முன்பெல்லாம் இலக்கிய விழாக்களுக்கும், தமிழர் திருநாள் போன்ற கொண்டாட்டங்களுக்கும் மக்கள் பெருந்திரளாக வந்து மொய்ப்பர். ஆனால் இந்த ஆர்வம் இப்பொழுது மக்களிடையே குன்றியிருப்பது வருந்தத்தக்கதாகும். நமது சூழ்நிலையில் இலக்கியங்களை ஒவ்வொருவரும் தனித்தனியே படிப்பது இயலாத காரியம். வாய்ப்பும், வசதியும் உள்ளவர்கள் படிக்கட்டும். அத்தகைய வாய்ப்பும், வசதியும் இல்லாதவர்கள் இலக்கியக் கூட்டங்களைப் பயன்படுத்திக்கொள்வது பெரிதும் நன்மை பயக்கும். அத்தகைய சொற்பொழிவுகள் மூலம் இலக்கிய இன்பத்தைப் பெறுவதோடு வாழ்க்கை மேம்பாட்டுக்குத் தேவைப்படும் எத்தனையோ அறிவுரைகளையும், அவர்கள் பெறமுடியும். 'கற்றிலனாயினும் கேட்க" எனும் குறள் நமது மக்களிடையே கூட்டங்களுக்கும், சொற்பொழிவுகளுக்கும் செல்கின்ற ஆர்வத்தை மறுபடியும் வளர்க்கத் துணைபுரியுமென்று எதிர்பார்க்கிறேன்.

பள்ளியில் பயிலும்போதுகூட ஒருசில மாணவர்கள் வீட்டில் பாடங்களைச் சரியாகப் படிக்காவிட்டாலும் வகுப்பில் ஆசிரியர் போதிப்பதைக் காதைத் தீட்டிக்கொண்டு கவனமாகக் கேட்பர். அத்தகைய மாணவர்கள் பெரும்பாலும் படிப்பில் சோடை போவதில்லை. கேள்வி ஞானத்திற்கு உள்ள சிறப்பையே இது காட்டுகிறது. வீட்டில் பாடங்களைப் படிப்பதில் அசட்டையாக இருக்கின்ற மாணவனுக்குக்கூட கேள்விச்செல்வம் கைகொடுக்கிறது. 'கற்றிலனாயினும் கேட்க' எனும் அறிவுரை இத்தகைய மாணவர்களுக்கும் பொருந்தக்கூடிய ஒன்று என்பது தெளிவு.

வள்ளுவர் காட்டுகிற வழியில் கேள்விச்செல்வத்தை இயன்றவரை ஈட்ட நாம் ஒவ்வொருவரும் முற்படுவோம். ஒரு மணி நேரம் கேட்கிற ஒரு சொற்பொழிவு ஓராயிரம் மணி நேரம் படிப்பதற்கு இணையானது என்பதை உணர்வோம். நமக்குக் கண்ணுகத் திகழ்ந்து கல்வி, வாழ்க்கைக்கு விளக்கத்தை நல்கிவருகிறது. கேள்விச் செல்வமோ முதுமைக் காலத்தில்.நமக்கு உதவுகின்ற ஊன்றுகோல்போலத் துணை நிற்கும் பெருமை உடையதாகும். கற்க முடிந்ததைக் கற்போம். கற்க முடியாதவற்றைக் கேட்போம். வள்ளுவர் காட்டுகிற வழியில் நிற்போம்.

கற்றில னாயினும் கேட்க அஃதொரு
வற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை (414)

தமிழறிவுப் போட்டி - 8



இறுதிநாள் 10-11-77

பெயர். ______________________

அடையாள அட்டை எண். ______________________

முகவரி ______________________

____

கையொப்பம்.

விதிகள்:

1. குறிப்புகளின் துணையோடு தக்க எழுத்துக்களைக்கொண்டு கட்டங்களை நிரப்பவேண்டும்.
2. ஒரு கட்டத்தில் ஓரெழுத்து மட்டுமே எழுதப்படவேண்டும்.
3. அழித்தல், அடித்தல், திருத்தல் கூடாது. "பால் பாயிண்ட்" பேனாவால் எழுதுவது நல்லது. பென்சிலால் எழுதுதல் கூடாது.
4. சரியான விடை எழுதியவர் வெ. 100 பரிசு பெறுவார். ஒருவருக்கு மேற்பட்டோர் வெற்றி பெறுவார்களாயின் இத்தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.
5. எவரும் சரியான விடையை எழுதவில்லையெனில் மிகக் குறைந்த பிழைகளையுடைய விடையை எழுதியவருக்கு வெ. 10 வழங்கப்படும். ஒரே எண்ணிக்கையிலான மிகக் குறைந்த பிழைகளுடைய விடையைப் பலர் எழுதியிருப்பின் வெ. 10 பகிர்ந்தளிக்கப்படும். எஞ்சிய வெ. 90 அடுத்த போட்டிக்கான பரிசுத்தொகையோடு சேர்க்கப்படும்.
6. ஒருவர் எத்தனை கூப்பன்களை வேண்டுமானாலும் அனுப்பலாம். தனித்தாளில் எழுதப்படும் விடைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.
7. கூப்பனில் எழுதப்படும் பெயர், அவரவரின் அடையாளக் கார்டில் உள்ளதன்படியே எழுதப்படவேண்டும்.
8. "புதிய சமுதாயத்தில்" பணியாற்றுபவர்களும் அவர்தம் குடும்பத்தினரும் போட்டியில் கலந்துகொள்ள இயலாது.
9. இப்போட்டி தொடர்பான அனைத்துக்கும் ஆசிரியரின் முடிவே இறுதியானது.
10. இறுதிநாள் 10-11-1977.
11. கூப்பன்களை அனுப்பவேண்டிய முகவரி:-

"புதிய சமுதாயம்"

131, Jalan Tuanku
Abdul Rahman, [2nd Floor]
Kuala Lumpur.

இடமிருந்து வலம்:

2. தாத்தாக்களுக்கு இவர்களைக் கேலி செய்வதில் ஒரு தனி இன்பம்.
4. முருகப் பெருமானுக்கு இப்படியும் ஒரு பெயர்.
5. இது பல்லுக்கு உறுதிதரும் என்பது முன்னோர்களின் அனுபவம்.
6. எதற்குமே பயன்படாமல் மணிக்கணக்கில் பேசப்படும் பேச்சு.
8. பெண்களின் ஒப்பனை நேரத்தைச் சிக்கனப்படுத்த இதுவும் இப்போது "ரெடிமேடாக" வந்துவிட்டது.

மேலிருந்து கீழ்:

1. சிலர் இதன் மூலமாகவே எல்லாவற்றையும் சாதிக்க முனைவார்கள்
2. இதன் தொல்லையைப் பெண்களிடம் கேட்டால் சொல்லுவார்கள்.
3. வீரம்.
6. கணவர்களை வசமாக்கப் பெண்களுக்குப் பயன்படுவது.
7. மனிதருக்குச் சிறப்பைத்தரும் ஒன்று.

கணைகளில் கவிதை நயம்

வீ. பூபாலன்

"அலையோசை" என்னும் காவியத்தைப் படைத்திருக்கும் நாடறிந்த நல்ல கவிஞரான காரைக்கிழார் கடந்த 18.9.77-ஆம் நாளன்று "கணைகள்" என்னும் கவிதை நூல் ஒன்றைத் திரு. முருகு சுப்பிரபணியன் தலைமையில் வெளியிட்டார்.

"கணைகள்", மலேசியத் தமிழ் நூல்களின் விற்பனையில் - குறிப்பாகக் கவிதை நூல் விற்பனையில் மாபெரும் சாதனையை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையல்ல. 1000 பிரதிகளில் ஏறத்தாழ 850 பிரதிகள் நூல் வெளியீட்டு விழாவன்றே விற்பனையாகிவிட்டன. இப்போது இரண்டாவது பதிப்பு அச்சாகிக்கொண்டிருக்கிறது.

"கணைகள்" பற்றிய ஆய்வுக் கருத்தரங்கு ஒன்றை 25.9.77-ஆம் நாளில் தலைநகர் பாரதியார் கலை மன்றத்தினர் நடத்தி அந்நூலுக்கு மேலும் சிறப்புச் செய்தனர்.

"கணைகள்" தொகுதியில் இடம் பெற்றுள்ள கவிதைகள் அத்தனையும் அத்தொகுதிக்கென்றே எழுதப்பட்ட கவிதைகள்; பத்திரிகைகளில் வெளிவராதவை; இந்திய சமுதாயத்தின் சிரழிவுகளைக் கனல் தெறிக்கும் சொற்களால் நூலின் பெயருக்கேற்ப கணைகளாக்கிப் படிப்போர் உள்ளத்தில் பாய்ச்சுபவை."

இவ்வாறு கூறுவது பொய்யல்ல, வெறும் புகழ்ச்சியல்ல என்பது "கணைகளை"ப் படிப்போருக்குப் புலப்படும்.

டாக்டர் இரா. தண்டாயுதம் தலைமையில் நிகழ்ந்த அந்தக் கருத்தரங்கில் திருவாளர்கள்: நா. கோவிந்தன், சா. ஆ. அன்பானந்தன், வீ. பூபாலன் ஆகியோர் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

கருத்தரங்கில் "கணைகளில் கவிதை நயம்" என்னும் தலைப்பில் திரு. வீ. பூபாலன் சமர்ப்பித்த கட்டுரை இது.

கவிதையென்பது எல்லா இனத்தவராலும் எல்லா மொழியினராலும் புனையப்படும் ஓர் இலக்கிய வடிவமாகும். ஆனாலும் இதுதான் கவிதை என்று கவிதைக்கு இதுவரையில் யாரும் ஒரு தெளிவான விளக்கத்தைக் கொடுத்திருப்பதாகத் தெரியவில்லை. அனுபவத்தை மொழி வடிவத்தில் காட்டுவதே கவிதை என்கிறார் ஆல்பர் குரோன்பி.

கருத்தை உணர்வோடு கலந்து ஊட்டும் கலைதான் கவிதைக் கலை என்றுகூடச் சொல்லலாம். உள்ளதை உள்ளவாறு சொல்லாமல் உணர்ந்தவாறு சொல்வதுதான் அதன் குணப்பண்பு. கவிஞனுக்குக் கற்பனையும் உணர்ச்சியும் அதிகம். செய்யுள் என்ற வெறும் உணர்ச்சியற்ற வடிவத்தில் சிக்கித் திணறிய தமிழ்க் கவிதை இன்றைய 20ஆம் நூற்றாண்டில் உணர்ச்சிமயமாய் நடைபோடுகிறது. இந்த உணர்ச்சி நமது நாட்டுக் கவிஞர்களின் படைப்புக்களிலும் ஊடுருவி நிறைய இலக்கியச் செல்வங்களை வழங்கியுள்ளது.

இத்தகைய படைப்புக்களில் ஒன்றுதான் கவிஞர் காரைக்கிழாரின் அண்மைய வெளியீடான "கணைகள்." இக்கவிதை நூலில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு பாடலின் கருத்தும் உணர்ச்சிப் பிழம்பாகவே விளங்குகின்றது. கவிதைக்குரிய இலக்கணங்களில் ஒன்றான உணர்ச்சியை, ஒரு கவிஞர் பாட்டின் வடிவத்திலோ அல்லது பாட்டின் பொருளிலோ அல்லது இரண்டிலுமோ வெளிப்படுத்தலாம். உணர்ச்சி, கவிஞர் காரைக்கிழாரிடம் எப்படி வெளிப்படுகிறது என்பதைக் காண்போம்.

"தமிழென்று பாடாத
நாவென்ன நாவடா அறுத்துப் போடு
தமிழிசையை மீட்டாத
கையென்ன கையடா வெட்டிப் போடு
தமிழ்க்கலைகள் பேணாத
நடிப்பென்ன நடிப்படா நெருப்பில் போடு
தமிழ்ப்பெருமை தோன்றாத
கூத்தென்ன கூத்தடா தூக்கிப் போடு"

நடிக்கவரும் பெண்டுகளைப்
பிடிக்கவரும் பேய்களுக்கு
நடிகனென்று தந்துயார் பட்டயம்
கடிக்கவரும் துண்டுகளைப்
பிடிக்கவரும் நாய்களுக்கே
நடிகரென்று தந்திடலாம் பட்டயம்

இக்கவிதை வரிகளில் ஒரு நியாயமான, தக்க உணர்ச்சியைக் காண்கிறோம். இது ஒரு நல்ல காரணத்திற்காக நல்ல முறையில் அமைகின்ற உணர்ச்சி. அதே நேரத்தில் ஆசிரியரின் உள்ளத்து உண்மையை ஒட்டிய ஓர் ஆற்றலுள்ள உணர்ச்சியாகவும் இது விளங்குவதைக் காண்கிறோம். அதே நேரத்தில் கவிதையை இயற்றியவரின் உணர்ச்சியையும் அதைக் கற்பவர் பெறும் உணர்ச்சியையும் இங்கே ஒருங்கே காண்கிறோம். இங்கே கவிஞரின் உணர்வுகள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்று பார்த்தால் உண்மையை உள்ளத்தோடு சேர்த்து அனுபவிக்கும்போது அந்த உணர்ச்சி பிறக்கிறது.

தமிழன் எப்படி இருக்கிறான்?

இலக்கியத்தில் வருகின்ற கற்பனையைக் கனவுக்கு இணையாக உவமை சொல்வார்கள். கற்பனையின் மறு உருவமான கனவு, கலை வடிவம் பெறுவதனால் அது அழியாமல் நிற்கின்றது. கவிஞனின் கற்பனையானது வெறும் கற்பனையாக அமையாமல் உள்ளதை ஒட்டிக் கூறுவதாகவோ விளக்குவதாகவோ அமையவேண்டும் என்று பிரேட் லீ கூறுகிறார். இன்று தமிழன் எந்த நிலையில் இருக்கிறான், எப்படி வாழ்வு நடத்துகிறான் என்பதை அழகிய கற்பனைத் தொடர்களால் விளக்குகின்றார் கவிஞர் காரைக்கிழார்.

கட்டெறும் பாகத் தேய்கிறான் தமிழன்
வாய்க்கா லில்லாமல் காய்கிறான் தமிழன்
தழுவுகொம் பில்லாமல் சாய்கிறான் தமிழன்
புல்லெனக் கம்பியை மேய்கிறான் தமிழன்

இங்கே பிறருடைய மன நிலையை, இன்ப-துன்பங்களை உணர்ந்து உவமை, உருவகம் முதலியவற்றினால் பொருள்களை உருவாக்கியும் வெவ்வேறு நிலையில் உள்ள பொருட்களை இயைத்தும் காட்டுகின்றார் கவிஞர்.

கற்பனை மூன்று வகைப்படும். அவை படைப்புக் கற்பனை, இயைபுக் கற்பனை, கருத்து விளக்கக் கற்பனை என்பனவாகும். இரண்டு வெவ்வேறு காட்சிகளைக் காணும் ஒரு கவிஞர், அவ்விரண்டு காட்சிகளையும் தமது கற்பனையினால் தொடர்புபடுத்தி ஒரு கவிதை பாடுகிறார். இது படைப்புக்கவிதை.

சாலையோரம் ஒரு குடும்பம்
சம்சுவிலே சாகவும்



வெளியீட்டு விழாவன்று எடுத்த படம்: இடமிருந்து திரு. க. கிருஷ்ணசாமி, நூலாசிரியர் கவிஞர் காரைக் கிழார், திரு. முருகு சுப்பிரமணியன், திரு. கே. ஆர். இராமசாமி.

பாலைபோலப் பிள்ளைகளும்
பசித்திருந்து வேகவும்
இந்தவாறு இந்த நாட்டில்
ஓரினத்தின் அறிமுகம்
எந்நாளும் நிகழ்ந்திருக்கும்
யாருமில்லை; தமிழினம்

இரண்டு காட்சிகளை வெவ்வேறு காலங்களில் காணும் ஒரு கவிஞர் ஒரேவிதமான உணர்ச்சிகளைப் பெறுகின்றார். இது இயைபுக் கற்பனையாகும்.

வேலைப் பிடித்தொரு வீரக் களத்தினில்
வெற்றி விதைத்தவனே - பகை
எட்டி உதைத்தவனே - இன்று
வாலைப் பிடிப்பவ னுக்கிப தாரென
வானைப் பிளக்குங் கணை - பெருங்
கூனை நிமிர்த்துங் கணை

மேற்கூறிய கற்பனையின் உண்மைகளையும் பண்பு நலனை யும் தெளிவாக எடுத்துக்கூறுவது கருத்து விளக்கக் கற்பனை.

தமிழே நீ ஏன் தமிழாய்ப் பிறந்தாய்
தமிழே நீ ஏன் தமிழாய் வளர்ந்தாய்
தமிழே நீ ஏன் தமிழாய் நிறைந்தாய்
தமிழே நீ ஏன் தமிழனால் குறைந்தாய்

உவமை உருவகமே கற்பனையின் சிறந்த வடிவங்கள். இந்த வடிவங்கள் கணைகளில் உணர்ச்சி பூர்வமாகக் கலந்திருப்பதைக் காண்கிறோம்.

வடிவம் சிறந்த கவிதை

கவிதையின் முக்கியப் பண்புகளில் ஒன்று வடிவம். உணர்ச்சிக்கும் கற்பனைக்கும் வடிவம் வேண்டும். இந்த இரு பண்புகளும் சேர்ந்து ஒருமுகமாக இயைந்து செல்லும் முழுமைதான் வடிவம். இலக்கியத்திற்கு வடிவம் மிக அவசியம். கவிஞரின் உணர்ச்சி, கற்பனை, அனுபவம் இவற்றைச் சிறந்த சொற்களின் வழியாக விளக்கி விட்டாலும் அவை அனைத்தையும் ஒருமுகப்படுத்தி முழுமையாக்கி ஒரு வடிவம் வரவில்லையென்றால் அது சிறந்த கவிதையாகாது. இது இருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்குமே என்ற எண்ணம் படிப்பவரின் மனதில் தோன்றக்கூடாது. அதுவே சிறந்த வடிவம் பெற்ற கவிதையாகும். இத்தகைய கவிதைகள் கணைகளில் நிறைய உண்டு.

குட்டிச் சுவரில் முட்டிக் கொள்ளும்
கூடைப் பொதியைக் காடாய்ச் சுமக்கும்
வெட்டித் தனமாய் உரத்துக் கத்தும்
விரும்பித் தொட்டால் முகத்தில் எத்தும்
பட்டிப் பெருக்கம்பார்த்துச் செல்லும்
படிக்கும் தாளைக் கடித்துத் தள்ளும்
மட்டிக் குணத்துக் குவமை யாகும்
மனிதன் அதனைக் கழுதை என்கிறான்

இந்தக் கவிதையில் காணப்படும் வடிவம் கவிஞரின் உள்ளத்தையும் படிப்பவரின் உள்ளத்தையும் தொடர்பு படுத்துகின்றது. ஒரு கவிதையைப் படித்து முடித்த பின்னால் குறையே இல்லை என்று நிறைவு பெறுவதே முழுமை. கூறப்பட்ட பகுதிகள் எல்லாம் சிதைவுறாமல் ஒன்றோடொன்று இயைந்து நிற்பதுவே இயைபு. இந்த முழுமையும் இயைபும் ஒன்றாக இணைவதே வடிவம். கணைகளில் வரும் பல பாடல்களின் வடிவம் பாட்டின் பொருளோடு ஒன்றி நிற்கும் தன்மையைக் காண்கிறோம். கவிதைக் கலை ஒலிநயம் உள்ளது. ஒலியே அதன் உடல். ஒலியைக் கொடுப்பது சொல். சொல்லழகு ததும்பி நிற்கும் கணைகள் பாடலொன்றினைக் காண்போம்.

கொலைவாளினை எடடா என
வரிபாடியடா தமிழா
கொடியோர்தொகை மிகுமேயெனில்
உன தாசையும் தமிழா
நெடிதாகிய புகழாடிட
நிலையாய்ஒரு சிலபேர்
கொடிதாங்கிய பகையேஎன
இடிபோல்இவண் அலைவார்

படைநடையில் வீர உணர்ச்சியைப் பொருளாய்க் கொண்டு அமைந்துள்ள இப்பாடல், ஒலிநயமிகுந்த சொற்களால் இசையின் சாரத்தை நமக்கு வழங்குகின்றது. கவிஞனால் அமைக்கப்பட்ட உணர்ச்சியைப் படிப்பவர்களுக்கு உணரவைப்பது ஒலிநயமே. சான்றுக்கு ஒரு பாடல்.

மொட்டைக்கிடு பட்டுத்துணியென
சற்றைக்கொரு புத்திக்கிரையென
அற்றைக்கினும் இற்றைக்கிறங்கிடு தமிழோர்கள்
கட்டுத்தறி வெட்டுப்படுபுரி
மட்டத்தொடு சிக்குப்படுநிலை
திட்டத்தொடு நெட்டப்படுவது முறையாமோ?

இதில் சொல்லமைப்பு சிறப்புத் தருகிறது. சொல்வளமும் வடிவத்தின் ஓர் அம்சமாகவே கருதப்படுகிறது. யாப்பு எனப்படுவதும் வடிவத்தின் அம்சம்தான். கவிதைக்கு அடிப்படையாக இருப்பது யாப்பு. ஒலிநயமும் யாப்பும், வந்த ஒலியமைப்பைத் திரும்பத் திரும்ப வந்து இனிமையைக் கொடுக்கும்.

அங்குமிங்குமனம் தங்குதிங்குவென
அலையவும் சிந்தை கலையவும்
பொங்குசெங்குருதி எங்கும்போதைவிசம்
புகையவும் நெஞ்சு சிதையவும்
எங்கள்அங்கமென இங்கெழுந்துவரும்
இளையவர் விணில் அழிவதை
பொங்குசிங்கமென வெஞ்சினம்பொருதப்
பாடுவேன் தடைகள் போடுவேன்

ஒலிநயம் சிறந்து அசை, சீர், தளை, அடி, தொடையென யாப்பின் உறுப்புக்கள் மிளிர்வதுதான் கவிதை. சில ஒலிகள் திரும்பத் திரும்ப வந்து உள்ளத்தை மயக்கும். எதுகை, மோனை முதலியன வந்து வடிவத்தைச் சிறப்பிக்கும். இத்தன்மைகள் யாவும் கணைகளில் நிறைந்து காணப்படுகின்றன.

மெய்ப்பாடுகளின் வெளிபபாடு

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்
றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப"

என்று தொல்காப்பியம் காட்டும் மெய்ப்பாடுகள் கவிஞர் காரைக்கிழாருக்கு எளிதாகக் கை வந்திருக்கின்றன.

மலிவு வீடு வேணுமா மந்திரியைப் பாரு
மந்திரியைப் பார்க்குமுன் மற்றவரைப் பாரு.

என்று மலிவு விலை வீடுகளைப் பெறுவதற்குக் கூறும் முறையைப் பாடும் வரிகளில் இழையும் நகைச்சுவை

பொழுது விடிஞ்சா பெரட்டுக்களம்
போகிற பாதையோ கரட்டுநிலம்
அழுது வடிக்குது பால்மரங்க
அத்தனை கதையும் அறிஞ்சதுங்க

என்று தோட்டப்புறத் தமிழனின் அன்றாட வாழ்க்கை நிலையைப் பாடும் கவிதையில் வழியும் அழுகைச்சுவை

பால்வெட்டுத் தொழிலாளி நானுங்க
பக்கிரிசாமி என் பேருங்க
நாள் வெட்டுச் சம்பளம் தானுங்க
நான் எட்டுப் பிள்ளைக்குத் தகப்பனுங்க

என்ற வரிகளில் தன்னிரக்கமாக வெளிப்படும் இளிவரல்

திண்ணென்ற தோள்களினால்
திசையெங்கும் ஆண்டவனும்
பண்ணென்ற ஒலிகளினால்
பலஞானம் பூண்டவனும்

என்று தமிழனின் அன்றைய ஆற்றல் வன்மையை எண்ணுகையில் பிறக்கும் வியப்பு

ஆளுக்காளுதான் தலைவன்
ஆகிப் போனதால்
நாளும் நாளும் நோயினாலே
நலியும் காங்கிரஸ்

என்று பதவிப் போட்டிகளால் நலியும் காங்கிரசால் சமுதாயத்திற்கு விளையும் ஆபத்துக்களை எண்ணிப் பார்க்கும் போது பிறக்கும் அச்சம்

கற்பனையாய் உண்மைகளாய்க்
காப்பியங்கள் படைத்தவனும்
கற்பனலின் வீச்சினிலே
கறையெல்லாம் துடைத்தவனும்

என்ற வரிகளில் கம்பீரமாக வெளிப்படும் பெருமிதம்

தீயிலே உன் கொல்லை தீயாகிப் போகுது
சிங்காரம் என்னடா சிங்காரம்
தெருவிலே உன் பிள்ளை நடுவிலே உன் மானம்
சிங்காரம் என்னடா சிங்காரம்

என்ற வரிகளில் வெளிப்படும் வெகுளி

கற்புக் கனலொடு பொற்புச் சிலம்பென
வெற்றிக் குறுபவள் தமிழச்சி

என்று பாடும் வரிகளிலுள்ள உவகை ஆகியவற்றை உற்று நோக்கும்போது எண் சுவைகளையும் ஏற்றமுறப் பாடுவதில் கவிஞர் காரைக்கிழார் வல்லவரென்பது புலப்படுகிறது. எனவே இவரது பாடல்கள் சுவைமிக்க பாடல்களாகவும சிந்தனையைத் தூண்டும் பாடல்களாகவும் இருப்பதில் வியப்பொன்றுமில்லை.

தான் வாழுகின்றகாலத்தின் அரசியல்,பொருளாதார, சமுதாய நிலைகளில் பெரிதும் ஆர்வம் கொண்டுள்ளவர் கவிஞர் காரைக்கிழார் என்பதற்கு அவரது கவிதைகளே சான்று. கவிதையை வெறும் சொல்லலங்காரக் கற்பனை வெளிப்பாட்டுக் கருவியாகக் கருதிவிடாமல் மக்களோடு தொடர்புபடுத்திச் சிந்தித்துப் பார்த்திருக்கிறார் இவர் என்பதற்கு அரசியல் சமுதாயக் கருத்துக்களை அவர் பாடியதே சான்றாகிறது. வெறும் நிலவையும் மலரையும் செடியையும் கொடியையும் பாடாமல் தனது கொள்கைகளுக்கும் மக்களுக்குமிடையே பாலம் போடும் பணியையும் கவிதைகளின் வாயிலாகச்செய்துள்ளார் கவிஞர்காரைக்கிழார்.கவிஞரின் இலக்கியப்பணி வாழ்க,வெல்க,வளர்க.

இரண்டு செருப்புகள்


இரண்டு செருப்புக்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டன.

ஒரு செருப்பு உண்மை உணர்ந்ததுபோல் "மனிதன் உயர்ந்தவன்" என்றது, அதைக் கேட்டதும் மற்றச் செருப்பு கல கல வெனச் சிரித்துவிட்டது.

பொல பொலவென எச்சில் தன்மீது கொட்டுவது போல அருவருப்படைந்தது முதல் செருப்பு.

அது கேட்டது: "என்ன சிரிப்பு? ஏன் இந்தச் சிரிப்பு?"

"நம்மை அணிந்தால் கட்டை மனிதனும் உயர்ந்தவனாகத்தான் தோன்றுவான்!" -மனிதனை உணர்ந்த இரண்டாவது செருப்பு இப்படிச் சொன்னது. சொல்லில் கேலி வெடித்தது.



முதல் செருப்பு மீண்டும் சொன்னது. அதன் சொல்லில் உணர்ச்சி துடித்தது: "மனிதன் உயர்ந்தவனே!"

"எப்படி?"

"பரதன் நம்மைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டல்லவா நடந்தான் அயோத்திக்கு!"

இது கேட்டு மீண்டும் சிரித்த இரண்டாவது செருப்புக்குப் புரியும்படி சொன்னது:

"பரதன் தூக்கியது நம்மையல்ல. இராமன் பாதத்தை."

"அப்படிச் சொல்லாதே! பதினான்கு ஆண்டுகள் அயோத்தி சிம்மாசனத்தில் நம்மை அமர வைத்ததல்லவா ஆண்டான் பரதன்?" முதலாமது ஆத்திரம் மூழ்கச் சொன்னது இப்படி.

நிதானத்தோடு இரண்டாவது செருப்பு கேட்டது: "அந்தப் பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு?"

முதல்செருப்பு வாயைப் பொத்திக் கொண்டது.

சா. ஆ. அன்பானந்தன்

தமிழகத்தில் தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் பார்த்து மகிழும் தரமான வெற்றி நாடகங்கள்.
விசேஷ காட்சி ஜோடனைகள்.
என்றென்றும் மறக்க முடியாத
மதுரமான இன்னிசைக் கீதங்கள்......



ஹரிச்சந்திரா மயான காண்டத்தில்
உடையப்பா தேவரின் ஓர் தோற்றம்!

மலேசிய, சிங்கப்பூர் ரசி

இசை நாடகத்

30 நடிகர் -

உண்மையே,
உன்னை நம்புவோமாக!
-ஹரிச்சந்திரன்

நாடகக்குழு
5000 நாட்களுக்குமேல் சிறப்பாக
மேடை ஏறிய

ஈப்போ நகர மண்டபத்தில்

அக்டோபர்

10 – முதல் காட்சி
வள்ளி திருமணம்

12 – சத்தியவான் சாவித்திரி

13 – பவளக்கொடி

14 – நந்தனார்

தினசரி
இரவு 8 மணிக்கு நடைபெறும்

நாடகங்களின் கதைச் சுருக்கம்:

அரிச்சந்திரா

அரிச்சந்திரா சத்தியத்தின் பெருமையை உலகிற்கு உணர்த்திய ஒரு மகா புருஷனின் வாழ்க்கை சரித்திரம் அரச பதவியை இழந்த பொழுதும், நாட்டை இழந்த பொழுதும் மனைவியை இழந்த பொழுதும், மகனை இழந்த பொழுதும் அரச வம்சத்தில் பிறந்தும் சுடுகாடு காக்கும் வெட்டியான் தொழில் செய்த பொழுதும் கூட சொந்த மகனின் பிணத்தை தகனம் செய்ய வந்த மனைவியை கண்ட பொழுதும்கூட சத்தியத்தின் எல்லையில் நின்று வாழ்க்கையில் ஒருதரம் கூட பொய் பேச மறுத்த சத்தியத்தின் காவலனாக வாழ்ந்துவிட்ட ஒரு காவியமாகி விட்ட மகா புருஷனின் வாழ்க்கை சரித்திரம தான் இந்த நாடகம் அரிச்சந்திரா.

சம்பூர்ணவள்ளி திருமணம்

தமிழ்க் கடவுள் எனப் போற்றப்படும் ஸ்ரீ முருகப் பெருமான், திருவிளையாடற் புராணத்தில் ஸ்ரீ வள்ளியை மணந்துகொள்ளும் ஒரு தெய்வீக கதைதான் சம்பூர்ண வள்ளித் திருமணம். கந்தபுராணத்தின் ஒரு பகுதி!

பவளக்கொடி

இந்திய நாட்டின் இதிகாசங்கள் என்று புகழப்படும் இருபெரும் காவியங்களில் ஒன்றான மகாபாரதத்தின் மாவீரனான அர்ஜுனனை, ஆண் இனத்தையே வெறுத்து ஒதுக்கிவிட்டு வாழ்ந்து வந்த ஒரு பெண்ணரசி பவளக்கொடி. பெண்களுக்கென ஒரு தனி உலகம் இருக்க முடியும் என்று கனவு கண்ட பவளக்கொடி. இறைவனின் சிருஷ்டிகளாகிய ஆணும் பெண்ணும் இருவருமே தனித்து வாழ முடியாது. இருசாராருமே ஒருவருக்கு மற்றவர் இல்லாமல் வாழ முடியாது என்பதை விளக்கும் ஒரு புராதன கதைதான் பவளக்கொடி நாடகம்.

ர்களுக்கு ராஜலிங்கம் புரொடக்ஷன்ஸார் படைக்கவிருக்கும்

திலகம் உடையப்பா

டிகைகள் அடங்கிய இசை நாடகங்கள்

K.L. டிக்கட்டுகள்: **$10, $5**

கோலாலம்பூர்
தேவான் பகாசாவில்
அக்டோபர்
17 - அரிச்சந்திரா
18 - வள்ளி திருமணம்
19 - சத்தியவான் சாவித்திரி
21 - பவளக்கொடி
22 - நந்தனார்

17-ஆம் தேதி காலை
மணி 10 க்கு
தேவான் பகாசாவில்
டிக்கட்டுகளைப்
பெற்றுக்கொள்ளலாம்

குறிப்பு:-
சிங்கப்பூர் நிகழ்ச்சிகள்
பின்னர் அறிவிக்கப்படும்

...உடையப்பா நடித்தார் என்று சொல்வதை விட அவருடைய அகண்ட மார்பு நடித்தது. திரண்ட புஜங்கள் நடித்தன, அவருடைய திட்சண்யமான பார்வை நடித்தது. அவருடைய வெண்கலக் குரல் நடித்தது என்றெல்லாம் சொல்வதுதான் நியாயம். இன்னமும் சொல்லப்போனால் வெட்டியானாகத் தோன்றிய அவர், தம் கையிலே வைத்திருந்த கழியைக் கூட நடிக்க வைத்தார் ஆஹா, இவ்வளவு அழகாக நடிக்கிறாரே, பாடுகிறாரே என்ற நினைப்பை விட ஒரு மனிதனால் எப்படி இப்படிப் பாடி நடிக்க முடிகிறது? என்ற பிரமிப்பே அதிகமாக இருக்கிறது..."

"உடையப்ப தேவரின் ஹரிச்சந்திர நாடகத்தில் உடையப்பா அவர்கள், ஹரிச்சந்திரனாக நடித்ததை "நடிப்பு" என்று வர்ணித்தால் அது அவருக்குச் செய்யும் அநீதியாகும். அவர் ஹரிச்சந்திரனாக மேடையில் தோன்றிச் செய்து காட்டுவது நடிப்பு அல்ல; சாதனை....."

துக்ளக் ஆசிரியர்
சோ

சத்தியவான் சாவித்திரி

தன்னை மணம் செய்து கொள்ளவிருக்கும் சத்தியவான் திருமணமான ஒரு வருஷத்தில் இறந்துவிடுவான் என்று ஒரு மகா முனிவரால் எச்சரிக்கப்பட்டிருந்தும் அதிந்திருந்தும்கூட மனதால் கணவனாக ஏற்றுக் கொண்டவனை தவிர வேறு யாரையும் மணந்துகொள்ள மறுத்து சத்தியவானையே மணந்து கொண்டு சத்தியவானின் உயிருக்காக யமதர்மனோடு வாதிட்டு தன் கணவனின் உயிரை மீட்டு பின் உயர்வை உலகிற்கு எடுத்து காட்டிய கற்புக் கரசியின் சரித்திரம் தான் சத்தியவான் சாவித்திரி நாடகம்.

நந்தனார்

ஆண்டையான் நிலத்தில் வேலை செய்யாமல் எப்போதும் சிவா, சிவா என புலம்பும் நந்தனை கிண்டல் செய்து, நீ கடவுளை காட்ட முடியுமா என மக்கள் கேட்க, அவர்களை திருப்பாங்கூர் கோயிலுக்கு அழைத்துச் செல்கிறான் நந்தன். கோயில் வாசலில் நந்தி மறைத்து நிற்க மனம் உருகி இறைவனை வேண்டிப் பாடுகிறான். நந்தி விலகுகிறது. இறைவன் தரிசனம் கிடைக்கிறது. நந்தன் சாதாரண மனிதனல்ல என்பதை அனைவரும் உணர்கின்றனர். அதன் பிறகு சிதம்பரம் செல்லும் நந்தனை வேதியர்கள் வரவேற்கின்றனர். நந்தன் அதில் மனம் லயித்தபடி நடராஜப் பெருமான் சன்னதியில் நுழைந்து ஜோதியில் கலந்து ஜோதியாகிறான்.

நேர்கூற்றும் அயற்கூற்றும்

வெ. ஆறுமுகம்

நேர்கூற்றை (Cakap Ajuk) அயற்கூற்றாக (Cakap Pindah) மாற்றக் கோரும் கேள்விகள் எஸ். பி. எம்./எம் சி. இ. மலேசிய மொழி வினாத்தாளில் அடிக்கடி இடம் பெறுவதில்லை. 1965-ஆம் ஆண்டிலிருந்து 1976-ஆம் ஆண்டு வரை இருமுறை மட்டுமே இத்தகைய கேள்விகள் வந்தன. ஆயினும், இதைக்கொண்டு மட்டுமே இத்தகைய பயிற்சி, முக்கியமானதல்ல என்று ஒதுக்கிவிட இயலாது.

நேர்கூற்றை அயற்கூற்றாக்குவதும், அயற்கூற்றை நேர்கூற்றாக்குவதும் அவ்வளவு கடினமான பயிற்சிகள் அன்று; ஒருசிலவிதிமுறைகளைத் தெரிந்துகொண்டு பயிற்சி பெறுவீர்களாயின் மிகவும் எளிதாகிவிடும்.

நேர்கூற்றில் இடம்பெறும் தன்மை - முன்னிலை - படர்க்கைப் பெயர்கள் (Gantinama) அயற்கூற்றுக்கு வரும்போது சில மாறுதல்களுக்கு உள்ளாகும்.

Cakap Ajuk	Cakap Pindah
saya	ia/dia/nya
aku	ia/dia/nya
ku	nya
beta (Raja)	baginda
awak	saya, dia,
engkau	dia,
kamu, kami	mereka, nya
dia	dia
mereka	mereka

மேலேயுள்ள சொற்களுள் சில, வெவ்வேறு வகையான இடங்களில் வெவ்வேறு வகையான மாற்றங்களை அடையும். இடந்தெரிந்து சரியான சொல்லைப் பயன்படுத்த வேண்டும்.

மேலே காட்டப்பட்டுள்ள மாற்றங்களோடு கீழ்வரும் மாற்றங்களும் முக்கியமானவையாகும்.

Cakap Ajuk	Cakap Pindah
ini	itu
di sini	di situ, di sana, di tempat itu
ke sini	ke situ, ke sana ke tempat itu
begini	begitu
demikian ini	demikian itu
esok	pada esoknya
hari ini	hari itu
malam tadi	malam yang lepas malam kelmarin
semalam	hari semalamnya
sekarang	masa itu, ketika itu

சின்னஞ்சிறு வாக்கியங்களை மட்டுமே கொண்டு இதுவரை பயிற்சி பெற்று வந்திருப்பீர்களாயின், அப்பயிற்சிகள் போதா என்றே கொள்ள வேண்டும். ஏனெனில், தேர்வில் பெரும்பாலும் நீண்ட வாக்கியங்களும் பத்திகளுமே தரப்படும். எனவே பயிற்சி முறையை மாற்றிக் கொள்ளுங்கள்.

பழைய வினாத்தாட்களில் இடம் பெற்றிருந்த இரு கேள்விகள் கீழே தரப்பட்டுள்ளன. கேள்விகள் நேரடியாகக் கேட்கப்படாமல் சற்றுச் சிக்கலாக அமைக்கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள்.

I

Sampaikanlah pesanan-pesanan berikut dengan menggunakan cakap pindah. (1970)

i. Masa ayah kamu hendak keluar ke pekan, ia berpesan.

'Kalau ada orang datang bertanyakan aku, katakanlah aku telah keluar ke pekan, tetapi aku akan pulang kira-kira pukul lima setengah. Tanyalah nama orang itu dan dari mana ia datang.'

Tak lama kemudian datang laki-laki yang tidak kamu kenali bertanyakan ayah kamu. Dia muda sedikit daripada ayah kamu.

ii. Kamu bekerja menjadi kerani dalam sebuah kedai letrik. Kamu menerima pesanan melalui talipon mengatakan:

'Ini Rashid bercakap. Tolong suruhkan Encik Jamil, juruletrik, datang menengok peti sejuk saya. Jenteranya tidak berjalan; saya tak tahu apa salahnya. Alamat rumah saya No. 27, Jalan Aman.'

iii. Minah berpesan kepada Cik Yam:

'Tolong khabarkan kepada Cikgu Maimun, saya tak dapat datang ke sekolah hari ini kerana keluarga kami kena pergi ke Kampung Ulu, menengok makcik saya sakit teruk. Saya akan tinggal di sana hingga hari Ahad ini.'

II

'Awak sudah gila,' Pak Itam membentak.

'Siapa yang gila?' Mak Long menyambut tentangan.

'Tak pernah dibuat orang' Pak Itam menambah tanpa memberi jawapan pertanyaan Mak Long.


'Apa yang susah?' Mak Long dengan suara yang lantang menanya. 'Tak payah hantar tanda dan tak payah tunang - menunang. Kita kahwinkan terus'

'Biarlah kita tunangkan dahulu. Baharulah ada manafaatnya.' kata Pak Itam.

Tulis semula petikan di atas dalam karangan prosa bentuk cakap pindah. (1974)

கதைப்புத்தகங்களில் காணப்படும் பத்திகளைப் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளுங்கள்; அவை ஏறத்தாழ மேலே உள்ளவற்றுக்குப் பொருந்திவரும்.

உயர்க!



இவ்வட்டம் எந்த ஆரம்பிக்கப்பட்டு எங்கு முடிக்கப்பட்டுள்ளது என்பதை உங்களால் கண்டுகொள்ள முடிகிறதா பாருங்கள். இவ்வட்டத்திற்குத் தொடக்கம் என்ற ஒன்றும் முடிவு என்ற ஒன்றும் கட்டாயம் இருந்தேயாக வேண்டும். அதைக் கண்டு பிடிக்க உங்களால் முடியாது; இதை வரைந்த எனக்குத் தெரியும்.

அதுபோலவே இவ்வுலகம் எப்பொழுது எப்படி உருவாக்கப்பட்டது என்பது அதைப்படைத்த இறைவனுக்கே தெரியும்.

இரா. இராமராவ், தலைநகர்.

பி.காந்திமணியம் செர்டாங்



பார்வதி அதிர்ந்து போனாள். பிரமை பிடித்தவளைப் போல கல்லாய்ச் சமைந்து நின்றாலும் கண்கள் மட்டும் நீரைக் கசிந்துகொண்டிருந்தன.

"அம்மா, வாங்க போகலாம்" மகன் ஆதரவோடு தாயின் கையைப் பற்றியவன், அவள் ஏன் அழுகின்றாள் என்று காரணம் தெரியாமல் திகைத்தான். இயற்கையாகவே தயாள சிந்தையும் இரக்க குணமும் கொண்ட பார்வதி அந்தப் பரிதாபத்திற்குரிய காட்சியைக் கண்டு கலங்குகின்றாள் என்று மட்டும்தான் அவன் தெரிந்துகொண்டிருக்கமுடியும். ஆனால் அங்கே கண்ட காட்சியின் பின்னால் ஒரு தொடர்பு இருக்கின்றது என்பது பார்வதி ஒருத்திக்கு மட்டும்தான் தெரியும்.

"பாவம்...யாருமில்லாத அனாதை போலிருக்கு" தலைநகரின் பெரிய பேருந்து நிலையத்திற்கு வந்திருந்த கூட்டத்தில் ஒருவர் மீளாப் பயணம் மேற்கொண்டு பிணமாய்க் கிடந்த ஒருவரைப் பார்த்துப் பச்சாதாபங்கொண்டு அப்படிச் சொன்னார்.

அந்த வார்த்தை-அவ்விடத்தை விட்டு அகலாமல் நின்றுகொண்டிருந்த பார்வதியின் உள்ளத்தில் உறைத்து, அடங்கிக் கிடந்த ஆவலுக்குச்சவால்விடுவதுபோலிருந்தது. மீறிக்கொண்டு அழுகையின் பிரதிபலிப்பாக வரும் விக்கலை அவளால் கட்டுப்படுத்தமுடியாமல் போயிற்று. கேவினாள். ஊமையாய் இருந்த அவளின் உணர்வுகள் யாவும் உறங்கிக்கொண்டிருந்த பாசத்தின் பிம்பமாகத் தோன்றி இடம்-பொருள்-ஏவல் என்பதனைக் கூடப் பொருட்படுத்தாமல் அலறிப் புடைத்துச் சத்தமிட்டு அழவைத்துவிட்டன.

பிணத்தைச் சுற்றி அங்கலாய்த்துக்கொண்டிருந்த பயணிகள் பார்வதியைப் பார்க்க ஆரம்பித்துவிட்டனர். இன்னும் சிறிது நேரத்தில் அவர்கள் யாவரும் இவளைச் சுற்றிக் கொள்வார்கள் போல் தோன்றியது. மகனுக்கு மிகவும் சங்கோஜமாக இருந்தது. பஸ்ஸுக்காக வந்த இடத்தில் அம்மா இப்படி யாருக்காகவோ கதறுவது ஆத்திரத்தையும் அதே சமயத்தில் ஆச்சரியத்தையும் கொடுத்தன. அம்மாவை இழுத்தான். அவள் நகரவில்லை. எல்லோரும் தன்னைப் பார்க்கின்றார்கள் என்பதனை உணர்ந்து சுதாரித்துக்கொள்ளச் சேலைக் கரையை அள்ளி வாயில் பதுக்கிப் பதறினாள்.

"அம்மா! என்னும்மா இது வந்த இடத்துல. அவன் யாரோ தெரியல,பாவப்படுறகோட இல்லாம இப்படி ஒப்பாரி வைக்க ஆரம்பிச்சுட்டீங்க. சே...சே... நல்லாவா இருக்கு...?"

"யாராயிருந்தா என்னடா? அதுக்கு உன் மாதிரியா மரியாதையில்லாம பேசுறது. மனுசர் இறந்துட்டா தெய்வத்துக்கு ஈடாயிடுறாங்க. ஏதோ தாங்கிக்க முடியல. அழுதிட்டேன்" பதற்றமுடன் சோகத்தை மீறிக்கொண்டு ஆத்திரப்பட்டு மகனின் வாயை அடைத்தாள் பார்வதி.

அதற்குள் அவர்கள் ஏறவேண்டிய வண்டி வரவே அம்மாவைப் பிடித்துக்கொண்டு மகன் விரைந்தான். பார்வதி ஏதும் சொல்லமுடியாமல் பின்தொடர்ந்தாள். அவளுடைய மனம் தவித்தது. கண்கள் பின்னோக்கிக் கூட்டத்தை ஊடுருவி ஆதரவில்லாமல் பயணிகளுக்காகப் போடப்பட்டிருக்கும் இருக்கையில் கிடந்த சடலத்தைத் தேடின

ஆரவாரத்துடன் காவல்துறை வண்டியொன்றும் செஞ்சிலுவை வண்டியொன்றும் அவ்விடத்தைப் பரபரப்படையச் செய்தன. காவற்காரர் ஒருவர் அங்கிருந்தவர்களை ஏதேதோ வினவினார். பிணத்தைச் செஞ்சிலுவை வண்டி சுமந்துகொண்டு கூட்டத்தினிடையே ஓடி மறைந்துவிட்டது. பார்வதி பேருந்தின் இருக்கையில் இருந்தவாறே வண்டி சென்ற வழியையே பார்த்துக்கொண்டிருந்தாள். மறுபடியும் பொதுக்கென நீர் கண்களிலிருந்து திரண்டு வழிந்தோடியது. சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்டே சாய்வில் சாய்ந்தாள். கண்கள் மூடிக்கொண்டன. சிந்தனை சுழன்றது.

"எனக்கும் என் பிள்ளைக்கும் என்ன பதில் சொல்றீங்க?" பார்வதி தன்னுடைய இன்பமான இல்வாழ்க்கையில் தடைவிழுந்த பின் கணவனிடம் தனக்கும் தன் அருமை மகனுக்கும் நல்ல வழிகோரி நின்றாள்.

"உனக்கும் எனக்கும் இருந்த சொந்தபந்தம் எல்லாம்தான் அறுந்துபோச்சே, அப்புறம் என்ன பதில் சொல்லவேண்டிக் கிடக்கு?" பார்வதியிடம் ஏதோ பிழைகண்ட கணவன் உறவே வேண்டாம் என்று பேசினான். அந்தப் பேச்சிலே உண்மை புலப்படவில்லை. வெறுப்பு என்ற கொடிய நச்சுப் பாம்புதான் படம் எடுத்து ஆடிக்கொண்டிருந்தது.

"நீங்க என்னை வேண்டாம்னு சொல்லுறதுக்கு அப்படி நான் என்ன தப்புச் செய்திட்டேன்?" என்ன பிழை செய்தோம் என்று புரியாமல் தத்தளிக்கும் உள்மனம் உறங்கமுடியாமல் தீர்க்கம் காண வேண்டிய அங்கலாய்ப்பில் கணவனிடம் மன்றாடியது.

"பெரிய இவ, காரணம் வேற காட்டணுமோ?" வெறுப்பால் ஏற்பட்ட அலட்சியம் கணவனை முடிவே எடுத்துவிட்டதுபோல் பேச வைத்தது.

"ஏங்க ஒண்ணுமில்லாம நம்ம வாழ்க்கையைப் பாழாக்குறீங்க?" குடும்பத்தில் குழப்பம் தலைப்பட்டு விட்டதே என்ற வருத்தத்தால் மேலும் பதறினாள்.

"வாழ்க்கை பாழானதுக்கு என்னையா காரணம் காட்டுறே! நல்லா நெனைச்சுப் பாரு, எனக்குத் துரோகம் பண்ணி என் நல்ல மன

"சில கஷ்டத்தை உண்டாக்குனது நீதான்." துரோகமிழைத்த மனைவியைக் கடுமையாகச் சாடும் உயர்வான புருஷன்போல் பேசினான்.

"அப்படி அது என்ன துரோகம்னு கொஞ்சம் சொல்லிடுங்களேன்." காரணமில்லாமல் இப்படி வெறுத்துப் பேசும் கணவனிடம் நியாயமான காரணத்தை வேண்டினாள்.

"நீ பெத்து வச்சியிருக்கையே... புள்ள.. அது யாருக்குடீ?" மறைத் கேட்பதினால் விவாதம் நீடிக்கும் என்ற நோக்கோடு அவன் திரித்து வைத்திருந்த ஆதார பூர்வமற்ற காரணத்தைப் பொட்டெனப் போட்டு உடைத்தான்.

"ஐயோ! என்ன வார்த்தை சொன்னீங்க." காரணத்தைக் கேட்டு அவள் அன்பான உள்ளம்- ஒரு நம்பிக்கையில் நியாயம் எதிர்பார்த்த உயர்வான உள்ளம்- பதியே தெய்வமென வழிபட்ட பண்பான உள்ளம் பல கூறுகளாக உடைந்தது.

அவன் அப்படிச் சொல்லிவிட்ட பிறகு, அவள் ஊமையானாள். வாழ்க்கையில் அழவேண்டிய காலம் வந்துவிட்டது என்று நினைக்கும் பொழுது அழாமலிருக்க முடியவில்லை. அதுவும் ஆசை அறுபது நாள் மோகம் முப்பதுநாள் என்ற பழங் காலஉதவாக்கரைப்பழமொழிபோல திருமணமான பதினொன்று மாதங்களில் இவ்வளவு விரைவிலே என்றிருக்கும்பொழுது அவள் மண்டையை வீட்டுக் குட்டிச் சுவரில் மோதிக் கதறாமல் இருக்க முடியவில்லை. கதறினாள், பதறினாள், வெதும்பினாள், பிரச்னை தீர்ந்துவிட வேண்டும் என்ற ஆவேசத்தில்; சுகமான இல்வாழ்வில் மாசற்ற தன்னை களங்கப்படுத்தித் தன் கணவரே பேசிவிட்டார் என்பதினால்

ஒரே வீட்டில் இரண்டு துருவங்களாக வாழ்வு தொடர்ந்தது.

பார்வதிசமைப்பதை அவன்சாப்பிடுவதில்லை. துணிமணிகளைத் துவைக்க விடுவதில்லை. அவள் ஹாலிருந்தால் அவன் திண்ணையிலும் அவள் திண்ணையில் இருந்தால், அவன் ஹாலிலும் எதிர்வாதமாகக் கிரகங்கள் இடமாறுவதுபோல அவர்கள் மாறிக்கொண்டிருந்தனர். இப்படி முரண்பாடாக இருந்தாலும் மாதச் செலவுக்காகப் பணம் மட்டும் பார்வதிக்குச் சமையல்காரி மூலம் மாதம் மாதம் வந்து கிடைத்தது. கணவனுடைய தொடர்பு இந்த அளவிலாவது என்ற எண்ணம் அவளை நிரப்பியது. இப்படி ஒரு ஐந்து மாதங்கள் ஓடிக்கொண்டிருந்த சமயத்தில் உடல் இன்பத்திற்காக ஏங்கிய பார்வதியின் கணவன் வீம்பைஒதுக்கித் தன்னுடைய குற்றச் சாட்டை மறந்து இரவில் நெருங்கினான். கண்கள் வழக்கத்திற்கு மாறாகச் சிவப்பாய். நடையில் தளர்வு.

"அடச் சீ... நீ... யாரு...?" கணவன் வீட்டில் இல்லாத சமயத்தில் யாரோ அயோக்கியன் வீடுநுழைந்து விட்டான் என்றபதற்றத்தில் வெளி வந்த வார்த்தைகள் அவன் நெஞ்சைச் சுட்டன. ஆணின் வெறி நிறைந்த ஸ்பரிசம் பட்ட பார்வதி பதறி விளக்கைப் போட்டாள். கணவன் பெரிய தப்புச்செய்துவிட்டவனைப்போல் கூனிக் குறுகித் தன் நிலை கேவலப்பட்டு விட்டதேஎன்று நொந்து அறையிலிருந்து வெளியாகிக் கொண்டிருந்தான்.

இதற்குத்தானே இவ்வளவு நாட்கள் காத்துக் கொண்டிருந்தாள் பார்வதி. உடற்சுகத்தைப் போக்கிக் கொள்ள வேண்டுமென்ற வெறியில்லை! இந்தச் சந்தர்ப்பத்திலாவது விடுபட்ட வாழ்வு மலரவழியுண்டே என்ற ஏக்கத்தில்தான். தொட்டது கணவனென்று அவள் உணர்ந்திருந்தால் அப்படிச் சொல்லியிருக்கவே மாட்டாள். தவறிச் சொல்லிவிட்டதால் வாயில் சூடு போட்டுக்கொள்ள வேண்டும் போலிருந்தது. மறுவாழ்வுகான நல்ல சந்தர்ப்பத்தைக் கோட்டை விட்டுவிட்டோமே என்றிருக்கும்போது தலைசுற்றியது.

இளகிய இரும்பு மீண்டும் கெட்டியாகி விடுவதைப்போல மனைவியின் பெண்மையை நாடிய மனம் கடுமையானது. பார்வதியின் மீதிருந்த வெறுப்பு வலுப்பெற்றது.

அவன் தள்ளாடி நடந்து கொண்டிருந்தான். அவன் சுயநினைவோடு நெருங்கவில்லை என்று பார்வதி உணர்ந்து கொண்டாள். போதையின் வேகத்தில் உணர்வுகள் விழித்து கொண்டனவோ? வெறுக்கப்பட்ட மனைவியின் தேவையை இப்பொழுதா அவன் உணர முடிந்தது!

எண்ணங்கள் ஒரு நிலையிலில்லாமல்-இவளுக்கு என்ன முடிவு கட்டுவது என்று கணவனும், இனி என்ன நடக்குமோ என்று மனைவியும் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தனர்.

வேண்டா வெறுப்பாகப் பெற்றோரின் வற்புறுத்தலில் திருமணம் செய்து கொண்டானேயொழிய பார்வதியின் அன்பான பணிவிடையினால் வெறுப்பைத் தளர்த்தி உறவுக்கு உயிர் கொடுத்தான் அவன். ஆனால் வாலிப முறுக்கில் ஏற்பட்ட அந்தப் பாசம் தேவை பூர்த்தியான பின் சுவைத்து உண்டுகொண்டிருக்கும் போது நாக்கைக் கடித்துக் கொண்டதுபோல் ஆனது அவனுக்கு.

விருப்பம்போல் வேறொருத்தியைக் கட்டிக்கொள்ள, நல்ல மனைவியை உதாசினப் படுத்தி "பிள்ளை யாருக்குப் பெற்றாய்" என்ற கேள்வியைப் போட்டுப் பிரளயத்தைத் தொடங்கினான்.

அந்தப் பிரளயம் இப்பொழுது "என் வீட்டை விட்டு வெளியே உன் பிள்ளையைத் தூக்கிக்கிட்டுப் போ" என்ற முடிவான வார்த்தையாய் இருந்தது.

கதறுவதைத் தவிர அந்தப் பேதை பார்வதிக்கு ஏதும் செய்யத் தெரியவில்லை. நியாயம் கோரி கோர்ட்டுக்குப் போக அவள்விரும்பவில்லை. அப்படிச் சென்றாலும் சம்பிரதாயப்படிநடந்த கல்யாணமேயொழிய சட்டப்படி பதிவு செய்யப்படவில்லை.

விருப்பப்படாத கணவனிடம் எப்படி வாழ்வது என்ற கேள்வியினூடே தாய் வீட்டோடு போய்விடுவோம் என்ற பதில்தான் அவளுக்குத் தெரிந்தது. தன் பொருட்களைச் சுருட்டிக்கொண்டு அன்பு மகனுடன் கணவனிடம் விடைபெற வந்த போது...

"போய்க் கொஞ்சம் நாள் இருந்துட்டு மறுபடியும் வரலாம்னு மட்டும் நெனைச்சுப் போகாதே. இந்தா உன் வழிச்செலவுக்கு மிஞ்சிய பணம் இருக்கு" முகத்தை அப்பால் திருப்பிக்கொண்டு அவள் கைகளில் திணித்தான்.

விடைபெற வந்தவள் திகைத்தாள். கடைசி நேரத்திலாவது கருணை காட்டப்படலாம் என்ற எண்ணம் தகர்த்தெறியப்பட்டது. மௌனித்து. ஒருகையில் பால்மணம் மாறாத குழந்தையுடனும் மறுகையில் பெட்டியுடனும் வாசலைத் தாண்டும் வரையில் கண்களில் நீர் பளபளக்கத் திரும்பிப் பார்த்துக்கொண்டே விக்கி விசும்பி நடந்தாள்.

கல்மனம் படைத்த அவன், சபலமின்றித் "தரித்திரம் தொலையட்டும்" என்பதுபோல் சமைந்து ஹாலில் உட்கார்ந்திருந்தான்.

எத்தனையோ முயற்சிகள் மகனைச் சேர்த்து வைத்துப் பார்க்கப் பெற்றோர்களால் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஒன்றும் ஏற்றுக்கொண்டதாக இல்லை. நாட்கள் நகர்ந்தன.

"அம்மா, வீடு வந்திடுச்சு" மகனின் உசுப்பல் கண்டு பார்வதி சுதாரித்துக் கொண்டாள். மரக் கட்டை போல உலர்ந்துபோன உடலை நகர்த்தி மகனைத் தொடர்ந்து கொண்டிருந்தாள். புதிய எண்ணங்களால் தாக்குண்ட உள்ளம் மட்டும் உலர்ந்து போகாமல் நன்றாக வாழ்ந்துகொண்டிருந்த அவரின் வாழ்வு பற்றி ஆராய்ந்து தீர்வுகாண முடியாமல் திகைத்தது.

வீட்டினுள் நுழைந்ததும் ஏதும் பேசாமல் படுக்கையில் போய் விழப் போனாள். அங்கே நிலைக்கண்ணாடி இருந்தது. பார்த்தாள்; அழுதாள்!

ஏனென்றால் வெள்ளைச் சேலை கட்டிக்கொள்ளப் போகின்றாள். பொட்டை அழிக்கப்போகின்றாள். பூவை இழக்கப் போகின்றாள். தாலியை அவளால்...... பொறுக்க முடியவில்லை. இரண்டு கைகளாலும் தாலிக் கயிற்றை இறுகப் பற்றிக் கொண்டு தொப்பெனப் படுக்கையில் விழுந்தாள்.

அவருக்காக அவள் மனத்துள் ஊசலாடிய ஆசைகளெல்லாம் வெளுப்பேறிய வானமாகிப் போயின.

நிர்வாணமான நிர்மல மனத்தோடு கையோடு வந்துவிட்டிருந்த தாலியைப் பார்த்தாள்.

அதுமட்டுமா சோபை இழந்து கிடந்தது? அவளும் தானே இனி வாழ்நாள் முழுவதும் சோபை இழந்து கிடக்கப்போகிறாள்.

பெல்டா

இந்த வார்த்தையைக் கேட்கின்றபோது ஒரு புத்துணர்ச்சியும் ஒருவிதத் தெம்பும் சிலரது உள்ளத்திலே தோன்றும். ஆனால் எருமை மாட்டின் மேல் மழை பெய்தது போன்ற உணர்வும் ஒரு சிலரிடையே ஏற்படத்தான் செய்கின்றது. அரசாங்க நிலக் குடியேற்றத் திட்டமான இதில் குடியேறி வாழ்வதை வெறுப்போடு பார்ப்பவர்களும் நம்மிடையே சிலர் இன்னமும் இருக்கின்றனர். ஒரு சிலர் கூறும் தவறான செய்திகளாலும், இருந்த இடத்தை விட்டுச் செல்லும் மனப் பக்குவம் பெருகதாலும், தோட்டங்களையே நம்பி வாழ்ந்து அதன் அடிமைப் பிடியில் அமிழ்ந்து போய் விட்டமையாலும் பலர் குடியேறக் கிடைக்கும் வாய்ப்புக்களைத் தவிர்த்து விடுகின்றனர்.

இன்று நமது சமுதாயத்திற்குப் பெல்டாவில் குடியேறுவதற்கான வாய்ப்புக்களை, அரசாங்கம் வழங்கி வருகின்றது. அந்த வாய்ப்புக்களை நமது சமூகத்தினர் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்கின்றார்களா என்று ஆராய்ந்து பார்த்தால் வேதனையே பதிலாக இருக்கும். பெல்டாவில் இந்தியர்களுக்கு அதிக இடம் தரப்படவேண்டுமென நமது ம. இ. கா., அரசாங்கத்திடம் மகஜர் சமர்ப்பித்து வேண்டுகோள் விடுக்கின்றது. அந்த வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து நமது சமூகத்தினரைக் குடியேறும்படி அழைக்கும்போது, அழைக்கப்படுபவர்களெல்லாம் குடியேறி விடுகின்றனரா என்பது இங்கே கேள்விக் குறியாகியுள்ளது.

பெல்டாவில் குடியேறும் நமது சமூகத்தினர் அங்கு புறக்கணிக்கப்படுகின்றனர் என்ற சொல்லுக்கே இடமில்லை. ஒவ்வொரு வகையிலும் சமமாகவே மதிக்கப்படுகின்றனர். மற்றவர்களைப் போலவே சுதந்திரமாக வாழ்கின்றனர். பெல்டாவின் ஒவ்வொரு பிரிவிலும் (ரஞ்சாங்வான்) ஜே. கே. கே. ஆர். என்ற நிர்வாக அமைப்பு (JAWATAN KUASA KEMAJUAN RANCHANGAN) இருக்கின்றது. இதன் தலைவராக, தலைமை நிர்வாகியே இருப்பார். துணைத் தலைவர், செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் போன்ற பொறுப்புக்களில் குடியேற்ற வாசிகளே இருப்பர். இவர்கள் குடியேற்ற வாசிகளாலே தான் தேர்வு செய்யப்பட வேண்டும். கமிட்டி உறுப்பினர்களாக ஒரு புளோக்கிற்கு ஒருவர் [12 பேர் அல்லது 20 பேருக்கு ஒருவர்] விதம் இருப்பார்கள். விளையாட்டு, சமூக மேம்பாடு, பெண்கள் பிரிவு, இளைஞர் பிரிவு, இறப்பு நிதி, சமய விவகாரம், பெற்றோர் ஆசிரியர் சங்கம், பாதுகாப்பு, சிறுவர் பள்ளி [கிண்டர் கார்டன்] ஆகிய பிரிவுகளின் பிரதிநிதிகளும் இடம் பெற்றிருப்பதோடு நமது இந்தியர்களின் பிரதிநிதியும் இடம் பெற்றிருப்பார்.

ரஞ்சாங்வானில் அதிக அதிகாரம் பெற்ற குழுவாகவும், தலைமை நிர்வாகமாகவும் இயங்கும் இது, ஆண்டொன்றிற்குப் பல ஆயிரம் வெள்ளிகளைத் தனது வரவு, செலவாகக் கையாளும். எந்தப் பிரச்சினையானாலும் முறையாகக் கூட்டம் போட்டு விவாதித்துப் பின்னரே எந்த முடிவையும் எடுக்கும் இக்குழு. நமது சமூகத்தினரைப் புறக்கணிப்பது கிடையாது.



ஆடுமாடுகள் வளர்ப்பதற்கும், கோழிப்பண்ணைகள் வைப்பதற்கும், மீன் வளர்ப்பதற்கும் இங்கு வசதிகள் உண்டு. கடைகள் வைத்து வியாபாரம் செய்து முன்னேறவும் வாய்ப்புண்டு. நாம் உழைப்பதற்குத் தயார் என்றால், முன்னேறுவதற்குப் பல வழிகள் உண்டு. ரப்பர் பகுதியாக இருந்தால் தினமும் நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள 10 ஏக்கரில் வேலை செய்ய வேண்டியிருக்கும். ஆனால், செம்பனையாக இருந்தால், மாதத்தில் ஏறக்குறைய 10 நாட்கள் மட்டுமே நமது நிலத்தில் வேலை செய்ய வேண்டியிருக்கும். எஞ்சிய நாட்களில் வேறு ஏதாவதொரு வகையில் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்புண்டு.

தோட்டப்புற வாழ்க்கை முறையைக் காட்டிலும், நிம்மதியான, வசதியான, சுதந்திரமான, சிறந்த வாழ்க்கையைப் பெல்டாவிலே பெற முடியும். இதனை உணர்ந்து கொண்டோமெனில் நமது சமூக எண்ணிக்கை பெல்டாவிலே உயர்ந்துவிடும்.

நிரந்தரமாகக் குடியிருக்க சொந்த விடு ஒன்று இல்லை. ஒரு ஏக்கர் நிலம் கூட வாங்கமுடியவில்லை. ஆடு மாடு வளர்க்க தோட்ட நிர்வாகம் அனுமதி தருவதில்லை, சுதந்திரமாக வாழமுடியவில்லை என நமது சமூகம் தோட்டப்புறங்களில் இருந்துகொண்டு ஏங்குவதைக் காட்டிலும், கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொண்டு பெல்டாவில் குடியேற முயலவேண்டும்.

குடியேற இன்னும் என்னை அழைக்கவில்லையே என்று தேர்வில் வெற்றிபெற்றுள்ள சிலர் ஏங்குகின்றனர். மனுச்செய்ய மனுபாரம் கிடைக்கவில்லையே என்று இப்போது அங்குமிங்கும் அலைகின்றனர் சிலர். ஆனால் தேர்விலே வெற்றி பெற்ற சிலரைக் குடியேறும்படி அழைக்கப்படும்போது, நொண்டிக் காரணங்களைக் கூறித் தட்டிக் கழித்துவிட்டு, தோட்டங்களிலேயே இருந்துவிடுகின்றனர் சிலர். இப்படிப்பட்டவர்கள் தங்களுடைய பொன்னான வாய்ப்பை இழப்பதோடு மட்டுமல்லாமல், துடிப்புடன் குடியேறக் காத்துக்கொண்டிக்கும் பலரது வாய்ப்பையும் கெடுத்துவிடக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குகின்றனர் என்பதை இவர்கள் உணருவதில்லை.

தோட்டப்புற அடிமைப்பிடியிலிருந்து விடுபட்டுச் சுதந்திரமாக வாழும் எண்ணங்கொண்டு, பெல்டாவில் குடியேறவேண்டும் என்னும் விழிப்புணர்ச்சி, நமது சமூகத்தில் என்றுதான் ஏற்படுமோ தெரியவில்லை.

இ. மாரிமுத்து
பெல்டா, சுங்கை திங்கி,
தஞ்சோங் மாலிம்



15 நாள் பலன்

அக்டோபர் 11 முதல்
அக்டோபர் 25 வரை

கும்பம் (ஜன. 20 — பிப். 18)

உங்களுக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படும். வெளியூரிலிருந்து நல்ல சேதி வரலாம். நீங்கள் வியாபாரிகளாக இருந்தால் லாபம் குறைந்தாலும் போட்ட முதலுக்கு ஆபத்தில்லை. நெருங்கிய நண்பர்கள் கள் நல்லது செய்யாவிட்டாலும் உங்களுக்குத் தொல்லை தராமல் இருந்தாலே போதும். உடலாரோக்கியத்தில் கவனம் தேவை.

நல்ல நாட்கள்: 16, 21
எச்சரிக்கை நாட்கள்: 20, 42

மீனம் (பிப். 19 - மார்ச்சு 20)

"திருடப் போனாலும் கூட்டு உதவாது" என்னும் பழமொழியின் படி நடந்து கொள்ளுங்கள். சில புதிய பொருள்களை வாங்குவீர்கள். சதையை அறுத்துத் தானம் செய்தாலும் "என்ன செய்து கிழித்தீர்கள்" என்று கேட்கும் உங்கள் உறவினர்களால் மனநிம்மதி கெடும். என்றாலும் நண்பர்கள் நன்றி மறக்கமாட்டார்கள். இயல்பாகவே ஓட்டைக்கைக்காரரான உங்களுக்கு சேமிப்புப்பெருகும் என்று எப்படிச் சொல்வது?

நல்ல நாட்கள்: 11, 16.
எச்சரிக்கை நாட்கள்: 15, 22

மேஷம் (மார்ச்சு 21 - ஏப். 20)

மண்ணைத் தொட்டால் பொன்னாகும் கைகள் உங்களுக்கு. எந்தக் காரியமும் உங்களுக்குச் சாதகமாகவே அமையும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு எழ வாய்ப்பு உண்டு. அதனால் ஒன்றும் குடி முழுகிப் போய்விடாது. செலவைக் கட்டுப்படுத்துங்கள்; பருந்து மாதிரி உங்கள் நண்பர்கள் வட்டமிடுகிறார்களே அதற்காகத்தான்! வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை.

நல்ல நாட்கள்: 15, 20
எச்சரிக்கை நாள்: 21

ரிஷபம் (ஏப். 21 - மே 20)

அத்தைக்கு மீசை முளைத்தால் சிற்றப்பா ஆகலாம் என்பது போல நீங்கள் நினைத்தது நடந்தால்தான் எதிர்பார்ப்பதும் கிடைக்கும். அத்தைக்கு மீசை முளைப்பதாவது...! கவலைப்படாதீர்கள். சில நாட்களுக்குப்பிறகு எல்லாம் சரிப்பட்டுவிடும். தொட்டதெல்லாம்செலவாகும் என்றால் ஏன் செலவைப் போய்த் தொடுகிறீர்கள்? அடக்கம், நிதானம், பொறுமை இவையெல்லாம் உங்களுக்கு இப்போது கேடயங்கள்.

நல்ல நாட்கள்: 12, 19
எச்சரிக்கை நாட்கள்: 14, 21

மிதுனம் (மே 21 - ஜூன் 20)

கூட்டு முயற்சிக் குப் பெரிய பூட்டைப் போடுங்கள். நீங்கள் மேட்டுக்கு இழுத்தால் மற்றவர்கள் பள்ளத்திற்கு இழுப்பார்கள். வாகனப் போக்குவரத்தில் நன்மை உண்டு. செய்தொழிலில் மேன்மை அடைவீர்கள். சக ஊழியர்களின் ஆதரவு பரிபூரணம். உடலாரோக்கியத்தில் கவனம் தேவை

நல்ல நாட்கள்: 16, 19
எச்சரிக்கை நாட்கள்: 13, 21

கடகம் (ஜூன் 21 - ஜூலை 20)

வாய்ச் சாமர்த்தியத்தால் எந்தக் கொம்பனையும் வளைத்துப் போடும் வல்லமை உங்களுக்கு ஏற்படும். அதை நல்ல வழியில் பயன்படுத்தி முன்னேறுவது உங்களைப் பொறுத்தது. தீயவர்கள் சிலரின் சேர்க்கையால் தொல்லைகள் உருவாகலாம். கவனமாக இருங்கள். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். குடும்பத்தில் சுமூகம் நிலவும்.

நல்ல நாட்கள்: 14, 20
எச்சரிக்கை நாட்கள்: 18, 23

சிம்மம் (ஜூலை 21 - ஆக. 21)

உள்ளதை வைத்துக் கொண்டு நல்லபடி வாழ முயலுங்கள். அதாவது எதிலும் அளவுக்கு மீறி ஈடுபாடு காண்பிக்காதீர்கள். வெளியூரிலிருந்து நல்ல சேதி வரலாம். அதனால் செலவுண்டாகும் என்பதை மறந்து விடவேண்டாம். உற்றார் உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரால் நன்மையுண்டு. மேலதிகாரிகளிடம் எச்சரிக்கையாகப் பழகுங்கள்.

நல்ல நாட்கள்: 12, 19, 22
எச்சரிக்கை நாள்: 18, 21

கன்னி (ஆக. 22 - செப். 22)

எத்தனை கவனமாகச் செய்தாலும் வேலையில் ஏதாவது ஒரு தவறு ஏற்படலாம். ஆகவே சிந்தனையை ஒருமுகமாக்கி எந்த வேலையையும் செய்யுங்கள். மேலதிகாரிகளின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாக நேரும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. குருட்டு அதிர்ஷ்டம் அடிக்கலாம். ஆனால் அது எந்தவகையில் என்பதைத் தான் சொல்ல முடியவில்லை.

நல்ல நாட்கள்: 22, 25
எச்சரிக்கை நாட்கள்: 12, 14

துலாம் (செப். 23 - அக். 22)

"நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும்" என்னும் முதுமொழி உங்களைப் பொறுத்தவரையில் நூற்றுக்கு எழுபது சதவிகிதம் சரியாக இருக்கும். வெளியூர்ப் பயணங்கள் மேற்கொள்ள நேரும். உடலாரோக்கியத்தில் கவனம் தேவை. கிணற்றில் போட்ட கல் மாதிரி கிடந்த பிரச்சனைகளுக்கு முடிவு உண்டாகும்.

நல்ல நாட்கள்: 16, 21
எச்சரிக்கை நாட்கள்: 18, 23

விருச்சிகம் (அக். 23 - நவ. 22)

கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்ததைப்போல உங்கள் முயற்சிகளுக்கு ஏற்றபடி மற்றவர்களின் உதவி கிடைக்கும் என்றாலும் பண விஷயத்தில் மட்டும் உங்கள் பாச்சா பலிக்காது போகலாம். பெரியோர்களின் ஆலோசனைகளைக் கேளுங்கள். ஓய்வில்லாமல் உழைக்க வேண்டியிருக்கிறதே என்று கவலைப்படாதீர்கள். எல்லாம் நன்மைக்கே!

நல்ல நாட்கள்: 14, 22
எச்சரிக்கை நாள்: 13, 25

தனுசு (நவ. 23 - டிச. 20)

மற்றவர்கள் ஆயிரம் சொன்னாலும் உங்கள் முடிவுதான் உங்களுக்குப் பெரிதாக இருக்கும். அதனால் சிலரது நட்பை நீங்கள் இழக்க நேரலாம். பண விஷயத்தில் கொஞ்சம் சிக்கனத்தைக் கடைப்பிடியுங்கள். "சிடு சிடு" வென்று பேசி, குடும்பத்தில் விவகாரங்களை உண்டாக்குவதைக் குறையுங்கள்.

நல்ல நாட்கள்: 16, 23
எச்சரிக்கை நாட்கள். 12, 15

மகரம் (டிச. 21 - ஜன. 19)

நண்பர்களிடம் எச்சரிக்கையோடு பழகுங்கள். பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும். வாகனப் போக்குவரத்தில் கவனம் தேவை. செய்தொழிலில் மேன்மை உண்டு. குடும்பஸ்தராக இருந்தால் குழந்தைகளின் ஆரோக்கியத்தில் கவனம் வேண்டியிருக்கும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படலாம்.

நல்ல நாட்கள்: 19, 25
எச்சரிக்கை நாட்கள்: 13, 21

–தஞ்சை நகுலன்

பால்மரக் காட்டினிலே

அகிலன்

14. உடன்பிறவாச் சகோதரன்

மறுநாள் காலையில் சரியாக எட்டு மணிக்குப் பாலனை அஜீஸின் மாமனார் வீட்டுக்கு முன்னால் மோட்டார் சைக்கிளில் கொண்டு வந்துவிட்டான் முருகன். "அஜீஸைப் பார்த்திட்டு நான் இப்படியே ஊருக்குப் போயிட்டு வாரேன்" என்று தன் அண்ணனிடம் அப்போதே விடைபெற்றுக் கொண்டான் பாலன். "கல்யாணத் தேதி நிச்சயமாயிட்டா நான் உன்னோட பள்ளிக்கூடத்துக்குக் கடுதாசி எழுதறேன் வீட்டிலே யாருக்கும் தெரியவேண்டாம். முடிஞ்சால் நீ மட்டும் வந்து சேர்" என்று சொல்லிவிட்டுப் பாலனின் பதிலுக்குக் காத்திராமல் அங்கிருந்து கிளம்பினான் முருகன்.

அஜீஸின் மாமனார் வீடு பாலன் எதிர்பார்த்ததைவிட பெரிதாக இருந்தது. வெளியே இரும்பு கேட்; வாசலில் காவற்காரன்; உள்ளே விசாலமான தோட்டம்; தோட்டத்துக்கு மத்தியில் வீடு.

உள்ளே அனுமதிப்பார்களோ மாட்டார்களோ என்ற தயக்கத்துடன் காவற்காரனை அணுகினான் பாலன்.

"பாலன் தானே நீங்கள்?" என்ற கேள்வி காவற்காரனிடமிருந்து மலாய் மொழியில் வந்தது. அன்போடும் மரியாதையுடனும் பாலனை அழைத்துக்கொண்டு அவன் உள்ளே போனான். அதற்குள் வீட்டின் உள்முகப்பிலிருந்த அஜீஸ் பாலனைப் பார்த்துவிட்டதால், ஓட்டமும் நடையுமாக வந்து அவனைப் பற்றி இழுத்துக்கொண்டு உள்ளே போனான்.

கூடத்தை ஒட்டி இருபுறங்களிலும் வரவேற்பு அறைகள் இருந்தன. ஒரு பக்கத்து அறையில் அஜீஸின் மாமனாரும் அவரைக்காண வந்தவர்களும் ஏதோ பேசிக்கொண்டிருந்தார்கள். மறுபுறத்து அறைக்குப் பாலனுடன் சென்றான் அஜீஸ். அங்கே அஜீஸின் மனைவி அவனை முகமலர்ச்சியோடு வந்து வரவேற்றுவிட்டுச் சென்றாள். பெண்கள் தங்கள் உடலையும் முகத்தையும் திரையிட்டு மறைத்துக் கொள்ளும் "பர்தா" முறை அங்கு இல்லை!

மலாய்ப் பெண்களும் அங்கு வாழும் மற்ற இனத்துப் பெண்கள் போலவே சுதந்தரத்தோடும் கலகலப்போடும் பழகினார்கள். நன்றாகப் படித்தார்கள்; ஆண்களோடு பெண்களும் சரிசமமாக அலுவலகங்களிலும் பிற நிறுவனங்களிலும் வேலை பார்த்தார்கள்.

"பழைய சிநேகத்தை நீ மறந்திடாமல் இருக்கிறது என்னோட அதிர்ஷ்டந்தான்" என்றான் பாலன்; "எங்கள் பக்கத்திலே ஒரு கதை சொல்வார்கள்: எல்லாச் செல்வங்களும் உள்ள கண்ணபரமாத்மா ஒன்றுமே இல்லாத பரம ஏழையான குசேலனுக்கு நண்பனாக இருந்தானாம்!"

இதைக் கேட்டுக் கலகலவென்று சிரித்தான் அஜீஸ். "அப்படியிருந்துங்கூட என்னிடமிருந்து படிக்கிற காலத்திலேயே எந்த உதவியும் நீ பெற்றுக்கொண்டதில்லையே? என் அம்மாவைத் திருப்திப்படுத்தறத்துக்காகக் "கப் கப்பா" டீயை மட்டும் உள்ளே தள்ளுவே!"

"அம்மா நல்லாயிருக்காங்களா? அவுங்களை ஒரு முறை நான் சந்திக்கணும்" என்றான் பாலன்.

"சிரம்பானிலேதான் இருக்காங்க. நீ எப்ப வேணுமானாலும் போகலாம்."

"சாப்பிடலாமா?" என்று குரல் கொடுத்தாள் அஜீஸின் மனைவி லியாக்கத் உன்னிஸா.

அடுத்தாற்போலிருந்த சாப்பாட்டறை மேசையில் எல்லாம் தயாராக இருந்தன. கண்ணாடிக் கிண்ணங்களில் பலவகைப் பலகாரங்கள், பழங்கள், ரொட்டித் துண்டுகள், வெண்ணெய், "ஜாம்" முதலியன இருந்தன. பரிமாறும் வேலையில் ஈடுபட்டாள் லியாக்கத்.

"தோசை தயாரா?" என்று சமையலறைப் பக்கம் திரும்பிக் குரல் கொடுத்தான் அஜீஸ்.

"இதோ!" என்று சுடச்சுட இரண்டு தோசைகளை எடுத்துக் கொண்டு வெளிப்பட்டான் சமையற்காரன்.

"நீங்கள் தோசை சாப்பிடுவதுண்டா?"

"மத்தியானச் சாப்பாட்டுக்கு நீ எப்போதாவது தோசை கொண்டு வருவாயே, நினைவிருக்கிறதா? உனக்காக ஸ்பெஷலாய்ப் போடச் சொன்னேன்."

பாலன் சட்டென்று திரும்பி அஜீஸின் சிவந்த முகத்தையும் குறும்புத்தனம் நிறைந்த விழிகளையும் உற்றுப் பார்த்தான். "நான் மிகப் பெரிய அதிர்ஷ்டசாலி என்று இப்போதுதான் தெரிகிறது; எப்போதோ நீ என்னை மறந்திருப்பாய் என்று நினைத்தேன்."

"சரி. சாப்பிடு."

மேல்நாட்டுப் பாணியிலேயே அங்கே காலைச் சிற்றுண்டி நடந்தது. கத்தி, கரண்டி, குத்தி முதலியவற்றின் உதவியோடு பாலன் பலகாரங்களை உள்ளே தள்ளி வைத்தான்.

இரண்டு கிண்ணம் தேநீரைக் குடித்தான். ஆளுக்கொரு ஆப்பிளை எடுத்துக் கடித்துக்கொண்டே இருவரும் வரவேற்பறைக்கு வந்து அமர்ந்தனர்.

"நான் இங்கே ஒரு பாங்கில் வேலை செய்து வந்தேன். கல்யாணத்துக்குப் பிறகு வேலையை விட்டுவிட்டேன். மாமனாரோடு தொழிலுக்குத் துணையாக இருக்க வேண்டியிருக்கிறது. கல்யாணம் முடிந்தவுடன் ஒரு மாதம் நானும் லியாக்கத்துமாக ஊர் சுற்றினோம். தேநிலவுப் பயணம் முடிந்து ஒரு வாரந்தான் ஆகிறது" என்று தன்னைப்பற்றிச் சொல்லிவிட்டு, "நீ இப்போது என்ன செய்கிறாய்?" என்று கேட்டான் அஜீஸ்.

தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக வேலை பார்த்துக்கொண்டே ஓய்வு நேரத்தில் மேல்படிப்புப் படித்து வருவதாகச் சொன்னான் பாலன்.


"ஏன், நீ இப்போது படித்திருக்கும் படிப்புக்கே வேறு வேலை கிடைக்குமே உனக்கு?"

"கிடைக்குந்தான்; என் அண்ணன் முருகன்கூடத் தோட்டத்தை விட்டு வந்து இங்கேதான் வேலை பார்க்கிறான். எனக்கென்னமோ இன்னும் கொஞ்ச காலமாவது அங்கேயே இருந்தால் தேவலாம் என்று தோன்றுகிறது"

மலாய் மொழி, தமிழ், ஆங்கிலம் மூன்றிலும் நன்றாகப் பேசத் தெரிந்தவன் பாலன். ஓரளவு எழுதவும் பழகிக் கொண்டவன். கடுமையாக உழைத்துப் பழகியவன் இப்போதுகூட அஜீஸிடம் அவன் மலாய் மொழியில்தான் பேசிக்கொண்டிருந்தான்.

"உன் திறமையை நீ தோட்டத்திலிருந்து கொண்டு வீணாக்குவது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை" என்றான் அஜீஸ்.

"ஒரு வழியில் பார்த்தால் நீ சொல்வது உண்மைதான். நான்கூட என் அண்ணனைப் பின்பற்றிச் சொந்த வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்றுதான் முதலில் நினைத்தேன். ஆனால் இப்படி வழி காட்டக்கூடியவர்கள் எல்லோருமே தப்பித்துக்கொண்டு வெளியேறி விட்டால், எங்கள் சமுதாயத்தில் பாதிப்பேருக்குமேல் கடைசி வரையில் வாழத் தெரியாமலே இருந்து விடுவார்களோ என்ற பயம் எனக்கு வந்திருக்கிறது. தோட்டத்துண்டாடல் காரணமாக நாட்டில் ஆயி



ரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் இப்போது அவதிப்படுவது பற்றி நீ கேள்விப்பட்டிருப்பாய். நான்கூட என் சொந்த மாமாவின் குடும்பத்தை ஸாபாவுக்கு அனுப்பி வைத்தேன் . இங்கு வந்தேன். முடியுமானால் முடிந்தவரை தோட்டத்திலேயே தங்கி ஏதாவது செய்யப் பார்க்கிறேன்."

ஆர்வத்தோடும் பெருமையோடும் பாலனின் முகத்தைப் பார்த்தவாறே அவன் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தான் அஜீஸ். பள்ளியின் நூல்நிலையத்திலிருந்து ஆப்ரகாம் லிங்கன், மகாத்மா காந்தி, கமால்பாட்சா முதலியவர்களின் நூல்களை எடுத்து அப்போதே பாலன் படித்து வந்தது அவனுடைய நினைவுக்கு வந்தது. தமிழ்ப் பிள்ளைகளில் பலர் செய்யாத காரியம் இது. இதைப் போன்ற செயல்களால் தானோ என்னவோ அஜீஸ் அவனிடம் கவரப்பட்டிருந்தான்.

"கல்லும் முள்ளும் நிறைந்த பாதையில் நடக்கத் துணிந்திருக்கிறாய்" என்ற அஜீஸ், "தமிழர்களைப் போலவே கம்பங்களில் வாழும் மலாய் மக்களைக் கரையேற்ற வேண்டிய பிரச்னையும் எங்களுக்கு இருக்கிறது; காலப்போக்கைத் தெரிந்துகொண்டு சிலர்கள் குடும்பம் குடும்பமாகச் சுயமுயற்சி செய்து உழைக்கிறார்கள். எல்லா மக்களும் உழைத்து முன்னேறினால் தான் நாடு இன்னும் முன்னேறும்; எல்லாரும் வளமாகவும் வாழ முடியும்" என்றான்.

"நான் புறப்படட்டுமா! உன்னுடைய நேரத்தை அதிகமாக எடுத்துக்கொள்ள விரும்பவில்லை."

"நான் உன்னை இங்கே வரவழைத்ததன் நோக்கமே உன்னை என் மாமனுக்கு அறிமுகம் செய்துவைக்க வேண்டுமென்பதற்குத்தான். உன்னைப்போல் கஷ்டப்பட்டு உழைப்பவர்கள் அவருக்குத் தேவை. நான் சொன்னால் உடனடியாக உனக்கு ஒரு வேலை போட்டுக் கொடுத்து விடுவார். உனக்கும் நல்ல சம்பளம் கிடைக்கும்."

நன்றி உணர்ச்சியால் உள்ளம் பொங்கிப் பூரித்தது பாலனுக்கு. "இப்படி நீ நினைத்ததே எனக்கு எவ்வளவோ கொடுத்ததற்குச் சமம். நீதான் உண்மையிலேயே எனக்கு மூத்த சகோதரன். உன் அன்பை நான் மறக்கவே மாட்டேன்!" நாத்தழுதழுத்தது பாலனுக்கு.

இருவரும் ஒருவர் கரத்தை ஒருவர் இறுகப் பற்றிக்கொண்டு ஒரு கணம் மெய்மறந்து நின்றார்கள்.

"நீ இப்போது எங்கே போக வேண்டும்?"

"பஸ் ஸ்டாண்டுக்குப் போய்ப் பஸ் பிடித்துச் சிரம்பானுக்குப் போகவேண்டும். சிரம்பானில் என்னுடைய நண்பன் கணேசன் என்னைச் சந்திப்பதாய்ச் சொல்லியிருக்கிறான்."

"இரு. பஸ் ஸ்டாண்டில் உன்னைக் கொண்டு போய்விடுகிறேன்."

அஜீஸின் மனைவி விபாகத்துக்குக் கைகூப்பி அவளிடம் விடைபெற்றுக்கொண்டான் பாலன். இருவரும் வெளியே வந்து காரில் அமர்ந்தார்கள். அஜீஸே காரை ஓட்டிக்கொண்டு பஸ் ஸ்டாண்டுக்கு வந்தான். சிரம்பானுக்குப் புறப்படும் பஸ்ஸூம் தயாராக நின்றது.

"நீ எப்போது நினைத்தாலும் என்னைத் தேடி வரலாம். எனக்குக் கடிதம் எழுதலாம். போன் செய்யலாம்" என்றான் அஜீஸ்.

"அதுதான் சொன்னேனே? நீதான் என்னுடைய உண்மையான மூத்த சகோதரன் என்று, இதை நான் உதட்டளவில் சொல்லவில்லை" என்றான் பாலன்.

அஜீஸ் அங்கிருந்து கிளம்பிய பிறகும் அவனுடைய நினைவு பாலனின் நெஞ்சை விட்டு அகலவில்லை. பள்ளிப் பருவத்து நட்புக்கள் பல, ரெயில் வண்டி நட்புக்களைப் போல் உடனுக்குடன் மறக்கப்படுவது உண்டு. பாலன் அஜீஸை மறக்காவிட்டாலுங்கூட, பொருளாதாரத்தில் அவர்களுக்கிடையே இருந்த வேறுபாடு பாலனைச் சற்றுத் தயங்க வைத்தது. சிரம்பானில் அவர்கள் வீட்டு வழியே பாலன் பல முறை சென்றபோதுங்கூட, உள்ளே எட்டிப்பார்த்து அஜீஸைப் பற்றி விசாரிக்கும் துணிவு அவனுக்கு ஏற்படவில்லை. அப்படி இருந்தது தவறு என்பதை அவன் இப்போது உணர்ந்துகொண்டான்.

பஸ் சிரம்பானுக்குப் புறப்பட்டது. சிரம்பானில் ஒரு நண்பனின் கடையில் தன்னைச் சந்திக்கும்படி சொல்லியிருந்தான் கணேசன். அன்றைக்கு மாலை அங்கே ஒரு இலக்கியச் சொற்பொழிவுக் கூட்டம். தமிழ்நாட்டிலிருந்து வந்த ஒருவர் பேசுவதாக இருந்தது. முடிந்தால் அந்தக் கூட்டத்துக்கும் போய்ச் சொற்பொழி

வைக் கேட்க வேண்டுமென்று பால னும் கணேசனும் திட்டமிட்டிருந் தார்கள்.

குறிப்பிட்ட நண்பரின் மளி கைக் கடையில் கணேசனைச் சந்தித் தான் பாலன். அங்கெல்லாம் பெரும் பாலும் கடையும் வீடும் ஒன்றாகவே இருக்கும். கடையின் பின்புறத் திலோ அல்லது மாடியிலோ கடைக் காரரின் வீடு இருப்பது வழக்கம்.

மாலை ஐந்து மணிக்கெல்லாம் நகரத்திலிருந்த ஒரு பெரிய மண்ட பத்தில் கூட்டம் தொடங்கியது. சிரம்பான் நகரத்திலிருந்த தமிழ்ப் பிரமுகர்கள் பலரும் கூட்டத்துக்கு வந்திருந்தார்கள். அவர்களைத் தவிர, சுற்றுப்புறத் தோட்டங்களில் உழைத்து வந்த இளைஞர் கூட்ட மும் அங்கே கூடியிருந்தது. சைக்கிள் களிலும், பஸ்ஸிலும், நடையாகவுமாக அவர்கள் அங்கே வந்து காத்திருந் தார்கள்.

உள்ளூர்ப் பெரியவர்கள் பேச் சாளரை அறிமுகம் செய்து வைத்த பின்பு, பேச்சாளர் சோமநாதன் கடல்மடை திறந்ததுபோல் தமிழ் மழை பொழியலானார். சுமார் ஒரு மணி நேரம் அந்த மண்டபம் தமிழ் முழக்கத்தால் அதிர்ந்தது. சங்க இலக்கியத்திலிருந்தும் திருக்குறளி லிருந்தும் சிலப்பதிகாரத்திலிருந்தும் மேற்கோள்களை அள்ளி அள்ளி விச லானார்.

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன்பே இந்த உலகத்தில் முன் தோன்றியமூத்தகுடி தமிழ்க் குடி" என்றார். முடிசூடி நாடாண்ட மூவேந்தர்களான சேரசோழ பாண்டியர்கள் கங்கையும் கடார மும் இமயமும் கொண்டவர்கள் என்று மார் தட்டினார். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது தான் தமிழர்களின் பரந்த கொள்கை என்று சாதித்தார். சங்க இலக்கியத் திலிருந்து காதல் காட்சிகளைச் சுட்டிக் காட்டிவிட்டு, கண்ணகியின் கற்புச் சிறந்ததா மாதவியின் கற்புச் சிறந் ததா என்று வாதாடிவிட்டு, உற்சாக மாய்ப் பேச்சைக் கேட்ட கடல் கடந்த தமிழர்களுக்கு நன்றி சொல்லிவிட்டுத் தம் பேச்சை முடித் தார்.

கூட்டம் கலைந்தது.

பாலனும் கணேசனும் தமிழர் நடத்திவந்த ஒரு "ரெஸ்டாரண்டு"க் குச் சென்று பலகாரத்துக்கு ஆர்டர் கொடுத்துவிட்டுக் காத்திருந்தனர். கூட்டத்தில் பேச்சுக் கேட்டுவிட்டு அவர்களைப் போலவே அங்கு வந்த வேறு சிலரும் சிற்றுண்டிக்காகக் குழுமியிருந்தனர்.

பேச்சாளரின் திறமையைக் கண்டு கணேசன் வாயடைத்துப் போனான். அடுக்கடுக்காகச் சொல் மாரி பொழிந்தாராம். ஒரே பிர மிப்பு அவனுக்கு.

"அவரோட பேச்சிலே இவ் வளவு சொல் அலங்காரம் இருந் திச்சே, அவர் என்ன பேசினார், அதனாலே உனக்கோ, எனக்கோ, அதைக் கேட்டவங்களுக்கோ என்ன நன்மைன்னு யோசனை செய்சியா?" என்று கேட்டான் பாலன்.

யோசனை செய்து பார்த்தான் கணேசன். "ஆமா... மயக்கமாப்பிலே பேசினார்; பொழுது போனதே தெரியலே"

"கற்காலத்து வாழ்க்கையைப் போலவே இன்னம் சில பேர் இங்கே வாழ்றாங்களே, நாம இங்கே காடாண்டுக்கிட்டு இருக்கோமே, "யாதும் ஊரே யாவரும் கேளிர்"னு பேசிகிட்டே இங்கே ஒன்பது கட்சி, தொண்ணூறு சாதின்னு நமக்குள்ளே அடிச்சுக்கறமே, பத்த டிக்குப் பத்தடி உள்ள லயன் வீட்டிலே ஆணும் பெண்ணுமாய்ப் பத்து பேர் வாழ்ந்த நிலையிலே கண்ணகியோட கற்பைப் பேசற தாலே என்ன லாபம்? இதையெல் லாம் இவர் கொஞ்சமாவது தெரிஞ் சுக்க வேண்டாமா? கடல் கடந்து பிழைக்க வந்தவங்க, இந்த இருப தாவது நூற்றாண்டிலே, இந்தச் சூழ்நிலையிலே எப்படி வாழ்றது? இலக்கியத்திலே சம்பந்தப்படுத்தி இதைப்பத்தியெல்லாம் அவர் பேசி இருந்தால் நமக்குப் பிரயோசனமா இருந்திருக்கும். இதை விட்டுட்டுப் புளிச்சுப்போன பழம் பெருமை யைப் பேசிப் போதையூட்டினா அதனாலே பலன் என்ன? கள்ளுத் தண்ணியைப் போலே இதுவும் ஒரு போதை! அவ்வளவுதான்!"

"தோட்டத்திலே வாழ்ற தமிழனைப் பத்தியோ ரெயில்வேயி லேயோ, நெடுஞ்சாலையிலேயோ கூலி வேலை செய்யற தமிழனைப் பத்தியோ இவங்களுக்கு என்ன தெரியும்?" என்று கேட்டான் அடுத்த நாற்காலியில் உட்கார்ந்திருந்த ஒருவன்; "யாராவது பணக்காரர் வீட்டிலேயோ, இல்லே, பெரிய ஓட் டல்லேயோ வந்து தங்கறாங்க. நாலு நகரங்களைச் சுத்திப் பார்த்து, கூட் டங்களைப் பேசிக் கைதட்டு வாங் கிட்டுத் திரும்பறாங்க. அவுங்க ஏத்தி விட்டுப் போன "சம்சு" போதை யிலே நாம இங்கே சேர-சோழ-பாண்டியனு நெனச்சுக்கிட்டு அவஸ் தைப்பட வேண்டியதுதான்!"

"நமக்கு உண்மையாகவே வழி காட்டக்கூடிய பெரியவங்களை நாம வற்புறுத்திக் கூப்பிடத்தான் வேணும்" என்றான் பாலன். "இலக் கியத் தொடர்பும் கலாசாரத் தொடர்பும் நம்மோட வாழ்க் கையை உயர்த்தக்கூடிய தொடர்பா இருக்கணும். இன்னிக்கு நாம கேட் டது வெறும் கதாகாலட்சேபம்."

சிற்றுண்டி முடிந்தது. பாலனும் கணேசனும் ரெஸ்டாரண்டி லிருந்து வெளியே வந்தார்கள். பாலன தோட்டத்துக்குப் புறப்படு வதாகவும் கணேசன் அங்கேயே தங்குவதாகவும் ஏற்பாடு.

கணேசன் திடீரென்று பாலனை வழியில் நிறுத்தி அவன் சற்றும் எதிர்பாராத ஒரு கேள்வியைக் கேட்டான்.

"உனக்குச் சின்னச்சாமியின் தங்கச்சி செல்லத்தைத் தெரியுமா?" என்று கேட்டான்.

"செல்லமா?"

"ஆமா, உன் வகுப்பிலேகூட முந்தி படிச்சிருக்கு; உன்னை நல்லாத் தெரியும் அதுக்கு."

"தெரியும்" என்றான் பாலன்.

"அதை நீ பார்த்தின்னா கவலைப் படாமல் இருக்கச் சொல். எப்படியும் சிரம்பானிலே காலை ஊணிக்கிட்டு, அடுத்தாப்பிலே கல்யாணம் பண் ணிக்கிறேன்னு சொல். நீ அதோட பேசறது அவுங்க வீட்டிலே யாருக் கும் தெரியவேண்டாம். அவுங்கண் ணன், தான் உயர்ந்த சாதிங்கறான்; பரிசப் பணம்கிறான்; என்னென் னவோ சொல்லி எங்க கல்யாணத் தைத் தடுக்கப் பார்க்கிறான்."

"நீ கவலைப்படாதே கணேசா!" என்றான் பாலன்.

(தொடரும்)

நம் கொடி



கொடி வணக்கம் செய்குவோம்-நாம்
கொடி வணக்கம் செய்குவோம்

அடிமை தீர்த்து உரிமை சேர்க்கும்
அன்னை நாட்டுப் புகழை ஆர்க்கும் (கொடி)

சிவப்பு வெண்மை மஞ்சள் நீலம்
சேர்ந்த நான்கு நிறங்கள் வாழும் (கொடி)

மஞ்சள் மன்னர் மாண்பு காட்டும்
மக்கள் ஒருமை நீலங் கூட்டும் (கொடி)

வெண்மை சிவப்பு மண்ணை இணைக்கும்
வெற்றிக் களிப்பு விண்ணை அணைக்கும் (கொடி

உவக்கும் பெருமை உலகில் சேர்த்து
உயர்ந்து நின்று பரந்து காட்டும் (கொடி)

உணர்ந்து பணிந்து ஒருமை சேர்ப்போம்
உயிரைக் கொடுத்தும் கொடியைக் காப்போம்
(கொடி)

21. 'எங்கிருந்தோ ஒரு குரல் வந்தது'

பட்டென்று ரிசீவரை அவர் வைத்த வேகத்தில் அவர்கொண்ட ஆத்திரம் மிகுதியாக வெளிப்பட்டது. சுபாவத்திலேயே சற்று முன் கோபியும் படபடப்பும் உள்ளவர். கோபம் வேறு வந்துவிட்டால் கேட்கவும் வேண்டுமா...?

இந்துமதியின் இதயம் நடுங்கியது! அவரது பயங்கர மௌனம் அவளைப் பாடாய்ப் படுத்தியது. ஆத்திரத்தில் நாலு வார்த்தைகள் பேசிவிட்டால்கூட ஆறுதலாக இருக்குமே என்று நினைத்தாள்.

ஆரம்பத்திலேயே டெலிபோனில் பேசிக்கொண்டிருந்ததைச் சற்றேனும் ஊன்றிக் கவனிக்காமல் இருந்துவிட்டோமே என்று கவலையும் பட்டாள்.

"நீ சொன்னது மட்டும் பொய்யாக இருந்தால் உன்னை உயிரோடு விடமாட்டேன் ஜாக்கிரதை!" என்று யாரையோ பயங்கரமாக அவர் எச்சரிக்கைசெய்தது அவளை மேலும் திகிலடையச் செய்தது.

அவரிடம் கேட்கவும் அச்சம்! கேட்காமல் இருக்கவும்முடியவில்லை! மெல்ல நிமிர்ந்து அவரைப் பார்த்தாள்.

அவர் இன்னும் அதேநிலையில் சோபாவில் சாய்ந்து கிடந்தார்! கோபம் வந்தால் படபடவெனப் பொரிந்து தள்ளிவிடும் சுபாவம் அவருக்கு. ஆனால் இன்று? ஒரு வார்த்தையும் பேசவில்லை!

இந்த மௌனம் அவளை மிகையாக அச்சுறுத்தியது! சுடச்சுட ஒரு கப் தேநீர் அருந்திவிட்டால் அவரது கோபதாபங்கள் பஞ்சாய்ப்பறந்துவிடும் என்பது அவளுக்கு அத்துப்படியான விஷயம்!

தேநீர் ஆறிப் போய்விட்டது! அதை அவர் ஏறிட்டும் பார்க்கவில்லை.


இந்துமதி கணவரின் பக்கத்திலேயே கவலையோடு நின்றுகொண்டிருந்தாள்.

நீண்ட நேரத்திற்குப் பிறகு அவர் மெதுவாக அவளைத் திரும்பிப் பார்த்தார். கவலை தோய்ந்த அந்த முகத்தில் அருமை மகள் வனிதாவின் வாஞ்சை ததும்பும் குழந்தை முகம் நிழலாடியது.

கள்ளங் கபடமற்ற . பச்சைக் குழந்தை! பள்ளிக்கூடம், படிப்பு, வீடு, பெற்றோர் என்று வளைய வந்துகொண்டிருந்த உலகமறியாத பேபி! செல்லப் பெண்!

அவளா அப்படி நடந்துகொள்கிறாள்? அவரால் அதை நம்ப முடியவில்லை! எப்படி நம்புவது? முன்பின் அறிந்திராத யாரோ ஒருவன் போன் செய்ததை நம்புவதா? அருமைப் பெண்ணைப் பற்றிய இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டால் இவள் நிலை எப்படி இருக்கும்...?

பொறாமை பிடித்த விஷமிகள் யாரேனும் திரித்துவிட்ட கட்டுக்கதையாக இருந்தால்.. ?



கோபி! அவன் யார்? எப்படிப்பட்டவன்? "சோற்றுக்கே தாளம் போடும் ஒரு வெறும் பயலோடு வனிதா ஊர் சுற்றிக்கொண்டு திரிகிறாள். காதல் பாடம் வெகு பிரமாதமாகப் படிக்கிறாள்" என்று எவ்வளவு இடக்காக அவன் கூறினான்.

அவன் சொன்னது உண்மையாக இருந்துவிட்டால்? நேரம் ஆகஆக அவரது இரும்பான நெஞ்சங்கூட ஆடத் தொடங்கிவிட்டது.

இங்கே இருக்கும்போது உலக விவரந் தெரியாத சின்னக் குழந்தை போல் தாயின் மடியில் படுத்துக்கொண்டு சிணுங்கும் செல்லப்பெண் வனிதாவா இப்படிமாறிப் இருப்பாள்?

இன்னும் ஓராண்டுகூட ஆகவில்லை! அதற்குள் இவ்வளவு பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்க முடியுமா?

நேரில் போய்ப் பார்த்துவிட்டால் எல்லாம் புரிந்துவிடும்! கோபக் கனல் பாசத்தீயில் மெல்ல உருகிக்கொண்டிருந்தது.

அவரது முகமாற்றத்தை அறிந்த இந்துமதி நெருங்கிவந்தாள். "யாரிடமிருந்து டெலிபோன் வந்தது?" — நீண்ட நேரமாக அடக்கிவைத்திருந்த ஆவல் வார்த்தைகளில் பீரிட்டது.

"எவனோ ஒருவன்! ஊர்பேர் தெரியாதவன்!"

"எனக்குப் புரியவில்லையே ஏதாவது சிக்கலான விஷயமா?"

"அப்படியொன்றுமில்லை! சாதாரண விஷயந்தான்! மொட்டைக் கடிதம் என்பார்களே! அதுபோலத்தான் அனாமதேயக் குரல்!" - அவர் மிகவும் கவனமாக வார்த்தைகளை அளந்து பேசினார்.

"இன்னும் விஷயத்தைச் சொல்லவில்லையே?" - இப்போது அவளுக்குச் சற்றுத் துணிச்சல் பிறந்திருந்தது.

"வெட்டிப் பயல் என்னவோ உளறிவைத்தான்! அது போகட்டும் வனிதாவிடமிருந்துகடிதம்வந்ததா?"

"இன்றுகூட வரவில்லை! எனக்கு என்னவோ அதே கவலையாக இருக்கிறது! உடம்புக்கு என்னவோ என்று அடித்துக்கொள்கிறது" - தன் செல்லப் பெண்ணை நினைத்தவுடனே கவலையும் வந்து ஒட்டிக்கொண்டது.

"அதெல்லாம் ஒன்றுமிருக்காது! பரீட்சைக்குப் படித்துக்கொண்டிருப்பாள்! நீ அலட்டிக் கொள்ளாதே!"

விஷயம் என்னவென்று விவரமாகத் தெரியாதமுன்பு இவளிடம் கூறினால் விபரீதமாகி விடுமோ என்று மிகவும் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள விரும்பினார்.

அன்று இரவு முழுவதும் அவரால் தூங்கவே முடியவில்லை!

இந்தக் காலத்தில் காதலிப்பது என்பது மிகவும் சர்வசாதாரண விஷயமே! அதிலும் படித்தவர்கள். நாகரிகம் தெரிந்தவர்களுக்கு வாழ்க்கையில் அன்றாடம் ஏற்படும் நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்றாகவே தோன்றியது.

வனிதாவின் அப்பாவுக்கு இது போன்ற அனுபவம் எப்போதும் ஏற்பட்டதே இல்லை. வனிதா அவர்களின் ஒரே மகள்!

பெரிய பணக்கார வீட்டுப் பிள்ளை, படித்தவன், பட்டதாரி, பெரிய உத்தியோகஸ்தன் என்ற ரீதியில் ஒரு மாப்பிள்ளையைக் கற்பனை பண்ணிக் கொண்டிருந்தார். திருமணத்தைப் பற்றிய கவலையே இன்னும் ஏற்படவில்லை! அதற்குள் சற்றும் எதிர்பாராத ஒரு பேரிடியாக அவருக்குத் தோன்றியது இது! "சோற்றுக்கே தாளம் போடும் வெறும் பயல்!" என்று கேவலமாக அவன்கூறிய அந்த வார்த்தைகள் அவரைச் சித்திரவதை செய்தன. இறுதியாக அவரால் ஒரு முடிவுக்கு வரமுடிந்தது!

அவன் கூறியது உண்மையோ இல்லை பொய்யோ! இனிமேல் வனிதாவை அங்கே தனியாக விட்டுவைப்பது சரியல்ல. அதற்கு ஒரே வழி மனைவியையும் அவளோடு தங்க வைப்பதுதான்.

புரண்டு கொண்டே இருந்தவர் எப்போது தூங்கினாரோ அது அவருக்கே தெரியாது!

காலையில் . கண் விழித்தபோது மணி ஒன்பது!

பெட்டாலிங் ஜெயாவில் வசிக்கும் நண்பர் ஒருவருக்கு டெலிபோன் செய்து நியூ டவுனில் வாடகைக்கு ஒரு வசதியான நல்ல வீட்டை ஏற்பாடு செய்யும்படிக் கேட்டுக்கொண்ட பிறகே நிம்மதியாக மூச்சுவிட்டார்.

கையில் காப்பி கப்போடு அங்கு வந்து நின்ற இந்துமதியின் காதில் அவர் இறுதியாகக் கூறிய வார்த்தைகள் தெளிவாக விழுந்தன.

"யாருக்கு வீடு...? அதுவும் இவ்வளவு அவசரமாக..."

"வேறு யாருக்கும் இல்லே. எல்லாம் நமக்குத்தான்!"

"நமக்கா...? என்னங்க இது... நமக்கு ஏன் வீடு...?

"எல்லாம் காரணமாகத்தான்! இனிமேல் வனிதாவை அங்கே தனியாக விட்டுவைக்கவேண்டாம் என்று நினைக்கிறேன். நீயும் அவளோடு இருந்தால் கவலையில்லாமல் இருக்கலாம்! நமக்கு இருப்பதோ அவள் ஒருத்திதான்? அவளை நீ அருகில் இருந்து கவனித்துக்கொள்வதுதான் சரி!" கணவரின் இந்தத் திடீர் மனமாற்றத்திற்குக் காரணம் புரியாமல் திகைத்து நின்றாள் இந்துமதி.

22. 'நானே வருவேன்'

காரின் வேகத்தைவிட அதிவேகமாக ஓடின, இந்துமதியின் எண்ணங்கள். மகளை உடனே சில மணி நேரத்திற்குள் பார்த்துவிடப் போகிறோமே என்ற ஆவல் ஒரு பக்கம்! கணவரின் திடீர் பயணத்திற்கான காரணம் புரியாத கவலை மறுபக்கம்.

மகிழ்ச்சியும் மனக்குழப்பமும் அவளை ஆட்டிப்படைக்க மௌனமாகவே அமர்ந்திருந்தாள் அவள்.

கணவரிடம் மீண்டும் மீண்டும் அதைப்பற்றிக் கேட்கவே அச்சம்! எதையும் ஒரு முறைக்கு மேல் கேட்டால் அவருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வரும்!

சாதாரண சமயங்களிலேயே அப்படியொரு குணம்! நேற்றிலிருந்து கோபமும், கவலையும், சிந்தனையுமாகக் குழம்பிக்கொண்டிருப்பவரிடம் ஊளறிக் கேட்க அவள் மனம் இடந்தரவில்லே!

காலையில் திடுதிப்பென்று வீடு பார்க்கும்படி போன் செய்தார். பிறகு அவசரமாகப் பயணம்! ஏன்? அவளுக்குப் புரியவில்லே.


அவளிடம் வார்த்தை எண்ணிப் பேசினர்! ஏதனுலோ? அதுவும் விளங்கிக்கொள்ள முடியவில்லே!

தனக்காக ஒரேயொரு செட் மாற்று உடைகளை எடுத்துவைத்துக்கொண்டார். அவள் கேள்விக் குறியோடு அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

"எதற்கும் ஒரு வாரத்திற்கு வேண்டிய துணிமணிகளை எடுத்துக்கொள்! பிறகு பார்க்கலாம்!" என்று சுருக்கமாகக் கூறினர்.

வனிதாவுக்கு உடல் நலமில்லேயோ? அதைச் சொல்லாமல்தான் இப்படி மௌன நாடகம் ஆடுகிருரோ என்ற திகில் அவளுக்கு.

"வனிதாவுக்கு ஒன்றுமில்லே! அவள் இப்போது இருக்குமிடம் சரிப்படவில்லே என்று கேள்வி! அதோடு சாப்பாட்டு வசதியும் அவ்வளவு சிறப்பாக இல்லேயாம்! எதற்கும் நீயே இருந்து கவனிப்பது நல்லது என்று நினைக்கிறேன்!"



அவர் இதை மிகவும் சாதாரணமாகச் சொல்வதுபோலப் பாவனை செய்தாலும் அதில் ஓர் அழுத்தம் இருப்பதை அவளால் உணர முடிந்தது.

இதெல்லாம் எதற்காக? மனைவியிடம் எதற்காக இத்தனை ஒளிவு மறைவு?

அவளுக்குக் கேட்டுவிடலாமா என்று உள்ளம் துடித்தது! உணர்வுகள் துடித்தன! உதடுகள் துடித்தன.

மிகவும் சிரமப்பட்டுத் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள்.

இருபது ஆண்டுகள் அவரோடு வாழ்ந்துவிட்டு அவர் குணம் தெரிந்திருந்தும் எதற்காக மன வேதனையும் வீண் சலசலப்பும்? இன்னும் மூன்று மணி நேரத்தில் நேரில் புரிந்துவிடப் போகிறதே!

நேற்றே சொல்லியிருந்தால் ஏதாவது பட்சணங்கள் அவளுக்குப் பிடித்த பலகாரங்கள் செய்திருக்கலாம்!

பெற்ற மனம் எத்தனையோ கவலைகளோடு இதையும் சேர்த்துக் கொண்டு அவதி கொண்டது.

நீண்ட நேரப் பயணத்திற்கு பிறகே அவர் கொஞ்சம் தெளிவடைந்து காணப்பட்டார். சூடாகத் தேநீர் அருந்தியதால் ஏற்பட்ட தெம்பு போலும்.

"நீ சொன்ன மாதிரி இங்கேயே அருகில் ஒரு ஹைஸ்கூலில் சேர்த்து விட்டிருக்கலாம்! அப்போது எனக்கு அது சரியாகப்படவில்லே!"

அவர் மெதுமாக இறங்கி வந்தார்.

கார் நாற்பது மைல் வேகத்தில் அசையாமல் ஓடிக்கொண்டிருந்தது.

"நீங்கள் தான் ஒரே பிடிவாதமாகப் பெரிய புகழ் பெற்ற அகடாமியில் படிக்க வைக்கவேண்டும் என்றுஎன்வாயை அடைத்துவிட்டீர்கள்! ஒரே பெண்! அவளைப் பிரிந்து இருக்க முடியாது என்றுல் கேட்டீர்களா?" இந்துமதி சமயம் பார்த்துத் தனது மனக்குறையைக் கொட்டித் தீர்த்தாள்.

அவர் பெருமூச்சு விட்டுக் கொண்டார். "இப்போதும் ஒன்றும் கவலைப்படும்படியாக இல்லே! என்றலும் மனம் கேட்கவில்லே!" அவர் சாமர்த்தியமாக விஷயத்திற்கு வேலியிட்டுக் கொண்டார்.

"பிறகு ஏன் திடுதிப்பென்று இந்தப் பயணம்?"

அவள் சமயம் பார்த்து ஒரு சரியான கேள்வியைக் கேட்டு வைத்தாள்.

"ம்...அதெல்லாம் ஒன்றுமில்லே! நான் வேறொரு விஷயமாகக் கிளம்ப வேண்டியதாக இருந்தது! கோலாலம்பூர் வரை வந்துவிட்டு பெட்டாலிங் ஜெயாவுக்குப் போகாமல் இருக்க முடியுமா? கார்ப் பயணம் தானே; நீயும் வந்தால் மகளையும் பார்த்த மாதிரி இருக்கும்!"

"மாதத்திற்கு ஒரு முறை அவளே வந்து விடுவாள்! இந்த முறை நாமே கிளம்பி விட்டோம்! அப்பாடி! எவ்வளவு தூரப் பிரயாணம்?"

குழந்தை எவ்வளவு சிரமப்பட்டிருப்பாள்? அதுதான் இந்த முறை பயணத்தை தள்ளிப் போட்டிருக்கிருள் பாவம்!

பெற்ற மனம் எதையெதை-யோ எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டு தனக்குத்தானே சமாதானமும் கூறிக்கொண்டது.

அவருக்குச் சுரீர் என்றது!

அவன் சொன்னதுபோல் காதல் போதையில் பெற்றோரிடம் உள்ள பாசம்கூட மாறியிருக்குமோ? அதனால்தான் இந்த முறை ஏதோ காரணம் கூறிப் பிரயாணத்தைத் தள்ளிப் போட்டு விட்டாளோ...?

மனம் வேறிடத்திற்குப் பாய்ந்துவிட்டதால்தான் பெற்றோரின் பிரிவு அவளுக்குப் பெரிதாகப் படவில்லை போலும்!

அவள் மனம் எதையெல்லாமோ கற்பனை செய்து குழம்பிக் கொண்டிருந்தது.

திடீரென்று காரின் வேகம் கூடியது!

"நம் வனிதாவை இந்தியாவுக்கு மேல்படிப்புக்கு அனுப்பிவிடலாமா என்று யோசிக்கிறேன்! நீ என்ன நினைக்கிறாய்...?" கணவரின் திடீர் கேள்வி அவளைத் திக்கு முக்காட வைத்தது.

"உள்ளூரிலேயே பிரிந்திருக்க முடியாமல் தவிப்பது போதாதா...? இன்னும் இந்தியாவுக்கு வேறு...ஐயோ! இனிமேல் வேறு எங்கும் அவளை அனுப்ப வேண்டாம்! பெண்பிள்ளைக்குப் படிப்பு இல்லாவிட்டால் போகிறது! என்னால் அவளை விட்டுவிட்டு இருக்க முடியாது!"

இந்துமதி உடலைச் சிலிர்த்துக் கொண்டாள்.

அவர் பேசவில்லை! கார் கோலாலம்பூருக்குள் நுழைந்து விட்டது! கவனமாகக் காரைச் செலுத்துவதில் முனைந்துவிட்டார்.

இன்னும் சில நிமிடங்களில் மகளைப் பார்க்கப் போகிறோம் என்ற ஆவலில் இந்துமதி வனிதாவைப் பற்றிய நினைவுகளில் மூழ்கி விட்டாள்.

இந்நேரம் குழந்தை என்ன செய்து கொண்டிருப்பாள்...? பாவம். கொட்டுக் கொட்டென்று தனியாக இருப்பாளோ...? தூங்குகிறாளோ?

கார் ஒரு வீட்டின்முன் நின்ற பிறகே நினைவுகளிலிருந்து மீண்டாள்.

காரிலிருந்து இறங்கியவர்களுக்குப் பெரிய ஏமாற்றமே காத்திருந்தது!

வனிதாவின் அறை பூட்டிக் கிடந்தது. பின்பக்கமிருந்த வந்த ஒரு கிழவி அவள் வெளியே போய் விட்டதாகக் கூறினாள்.

அதே சமயம் படுவேகமாக வந்த மோட்டார் சைக்கிள் "சரக்" கென பிரேக் போட்டு நின்றது.

தான் போட்ட திட்டம் இவ்வளவு சீக்கிரமாக வேலை செய்துவிட்டதே என்ற பூரிப்போடு நவீன் அவர்களை நோக்கி வந்தான்.

[வளரும்]

முன்னோட்டம்



தொலைக்காட்சி

13-10-77 வியாழன் இந்திப்படம்.

20-10-77 வியாழக்கிழமை தமிழ்ப் படம். ஜெய்சங்கர், லட்சுமி நடித்துள்ள நவாப் நாற்காலி

30-10-77 ஞாயிறு தமிழ்ப்படம். உங்க வீட்டுக் கல்யாணம் தேங்காய் சீனிவாசன் நாயகனாகத் தோன்றி நடித்துள்ள இந்த முழு நீள நகைச்சுவைப் படத்தில் அவருடன் "பட்டிக்காடா பட்டணமா" புகழ் சுபா, நாயகியாக இணைந்து நடித்துள்ளார்.

வானொலி

மனச்சுழல்

(ஞாயிறுதோறும் காலை 10·30க்கு ஒலிபரப்பாகிறது)

16-10-77 - ஒன்றினில் ஒன்று எழுத்து: தலைநகர் கிருஷ்ணம்மா

23-10-77 - உண்மை உறங்குவதில்லை எழுத்து: ஈப்போ எஸ். எலிசபெத்

30-10-77 - காயத்ரி, உன்னை விட மாட்டேன் எழுத்து: எஸ். வைரக்கண்ணு

நாடகம்

[சனிக்கிழமைதோறும் பிற்பகல் மணி 2க்கு ஒலிபரப்பாகிறது]

15-10-77 தீபம் எரிகின்றது— சுப்பிரமணியம் சக்ரவர்த்தி எழுதியது. (கோலாலம்பூர் நிலையத் தயாரிப்பு)

22-10-77 வைராக்கியம்- கம்பார் எஸ். வேலுமதி எழுதியது.

29-10-77 தெளிவு— புக்கிட் மெர்டாஜம் அ. திருச்செல்வி எழுதியது.

இஸ்லாமிய நாடகம்

(வியாழன்தோறும் இரவு 8.30க்கு ஒலியேறும்)

27-10-77 ஒன்றே போதும்—கோலப்பிலா எஸ். ஓ. ஏ. சைட் ஜபார் பாஷா எழுதியது.

சிரிப்புச் சித்திரம்

(சனிக்கிழமைதோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகிறது)

15-10-77 தலைநகர் எஸ். கிருஷ்ணம்மா எழுதிய என்ன பேரு வைக்கலாம்?'

22-10-77 தலைநகர் ரவிசங்கர் எழுதிய 'ஒரே கல்லில் இரண்டு மாங்காய்'

29-10-77 தலைநகர் பதவியன் எழுதிய 'சிரிச்சுக்கிட்டே போங்க'

சிறுகதை

(ஞாயிறுதோறும் இரவு 8.45க்கு ஒலிபரப்பாகிறது)

16-10-77 காணிக்கை— எழுத்து ஈப்போ மு. முத்தாலு

23-10-77 பதிசேவை செய்வதே ஆனந்தம்—எழுத்து: ஈப்போ திருமதி விஜயா தாமஸ்

30-10-77 ஒரு பயிர் வாடுகிறது எழுத்து: சுங்கை ஜாவி பி. எஸ். சுப்பிரமணியம்.

திரை மலர்

புதிய திரைப்படக் காட்சிகள், நேயர்கள் பங்கு பெறும் பரிசு அங்கமான "திரைப்புதிர்" ஆகிய சுவையான அம்சங்களைக் கொண்ட "திரைமலர்" நிகழ்ச்சி, சனிக்கிழமைதோறும் மாலை 6-31க்கு ஒலியேறுகிறது. தயாரிப்பு எல். ராமன்.

தொடர் நாடகம்

(திங்கட்கிழமை தோறும் இரவு 7.15க்கு ஒலிபரப்பாகிறது)

இதய வாசல் உனக்காக – எம். ஜெயலெட்சுமி எழுதும் புதிய தொடர்நாடகம். 17-10-77இல் முதல் பகுதி- 24-10-77இல் இரண்டாம் பகுதி. அன்பானந்தன், சிவகாமி, மேரிபாத்திமா, மைக்கல்தாஸ், சிவராமகிருஷ்ணன், விஜயன் ஆகியோர் நடிக்கும் இத்தொடரை எல். ராமன் தயாரிக்கிறார்.

கண்ணோட்டம்

சென்ற வியாழக்கிழமை (22.9.77) பத்திரிகைகளில் தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரலில் "சாந்தி நிலையம்" என்று பிரசுரிக்கப்பட்டிருந்தது. ஆனால் அன்று "மிஸ்டர் சம்பத்" ஒளியேறியது. ஏன் இந்தத் திடீர் மாற்றம்? மலேசியத் தொலைக்காட்சியில் 'சாந்தி நிலையம்' படம் திரையிடப் போவதாக இரண்டு மாதங்களாக பத்திரிகைகளில் அறிவிப்பு தான் வருகிறது! ஆனால் 'சாந்தி நிலையம்' ஒளியேறிய பாடில்லை! ரசிகர்களைப் போட்டுக் குழப்பி ஏன்தான் இப்படி ஆசை காட்டி மோசம் பண்ணுகிறார்களோ தெரியவில்லை?

—எஸ். எஸ்தர் சந்தனமேரி
கிரீன்டவன், ஈப்போ

நையாண்டிமேளம்

பழமொழி புதுப்பார்வை

'ஆவன்னா'

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

அகம் தூய்மையாக இருந்தால் தான் முகமும் அழகாக இருக்கும். ஆகவே அகத்தூய்மை இல்லாதவர்கள், ஒப்பனையின் மூலம் முகத்தை நன்றாக வைத்துக்கொள்ள வேண்டும். முகத்தைப் பார்த்தே மயங்குபவர்கள் பலர் இருப்பதனால் இதன் வழி வினைத்ததை முடிப்பது சாத்தியமாகும்.

அடக்கம் ஆயிரம் பொன் தரும்

தன்னலமற்ற பொதுத்தொண்டு செய்பவர்கள் மண்ணுக்குள் அடக்கமான பிறகு, ஊரார் கூடி அவர்கள் குடும்பத்துக்குப் பணமுடிப்புத் தருவார்கள். எனவே அடக்கம் நல்லது.

ஆடிக் கறப்பதை ஆடிக் கற, பாடிக் கறப்பதைப் பாடிக் கற

கறக்க வேண்டியதை ஆடியும் கறக்கலாம், பாடியும் கறக்கலாம். ஆடல், பாடலோடு நடிப்பையும் சேர்த்துக்கொண்டால் இன்னும் எளிதாகக் கறக்கலாம்.

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்

இதைச் சொன்னவர் ஒரு தீர்க்கதரிசி என்பதில் எவர்க்காவது ஐயம் இருக்க முடியுமா, என்ன!

கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தானும்

அரசியல்வாதிகளைப் பற்றிய பழமொழி இது.

காட்டுக்குப் போனாலும் கூட்டுறவு கூடாது

ஓர் இனத்தின் குணநலன்களைப் பழமொழிகள் காட்டும் என்பார்கள்.



காற்றுள்ள போதே தூற்றிக்கொள்

யார் யாரைத் தூற்ற வேண்டும் என்று நினைக்கிறோமோ, அவர்களை வாய்ப்பு உள்ளபோதே தூற்றிவிட வேண்டும்; ஏனெனில் வாய்ப்பு அடிக்கடி கிடைக்காது.

நல்ல மாட்டுக்கு ஒரு சூடு, நல்ல பெண்ணுக்கு ஒரு சொல்

சூடு—சொல், மாடு—பெண்: நல்ல பொருத்தமான உவமைகள்.

பாம்பென்றால் படையும் நடுங்கும்

படைதான் பாம்புக்கு நடுங்கும்; ஐந்தாம்படை எதற்குமே நடுங்காது.

பெண் என்றால் பேயும் இரங்கும்

ஆணுக்கு ஆண்தான் இரக்கப்பட வேண்டும்; அதுபோலத்தான் இதுவும்; இரண்டுமே இயல்பானவை.

முட்ட நனைந்தவனுக்கு ஈரம் இல்லை; முழுதும் கெட்டவனுக்குத் துக்கம் இல்லை

நமக்கும் துக்கம் இல்லை.

முட்டாளுக்குக் கோபம் மூக்கின்மேலே

தம் படைப்பில் எவரேனும் குறைகண்டால், இலக்கியப் படைப்பாளர்கள் சிலர் கோபப்படுவதன் காரணம் புரிகிறது.

வெள்ளம் வருமுன் அணைபோட வேண்டாமா?

வேண்டாம்; வெள்ளம் வந்து அணைத்தையும் அடித்துக்கொண்டு போன பிறகு அறிக்கைகள் விடலாம்; மாநாடு கூட்டலாம்; தீர்மானங்கள் போடலாம்.

முருகுவைக் கேளுங்கள்

எம். கே. பன்னீர், நிக்கல் கார்டனர் தோட்டம், பத்தாங் பெர்சுந்தை

கே: ஆசை. மகிழ்ச்சி இவ்விரண்டில் எது ஆபத்தானது?

ப: ஆசையே துன்பத்திற்கெல்லாம் காரணம் என்கிறார்கள்!

ஏ. எஸ். ரவிப்பெருமாள், குக்கூப் தோட்டம், பொந்தியான்

கே: சிறுகதை ஒன்று அனுப்பி அதனுடன் தபால்முத்திரையும் (பிரசுரிக்கத் தகுதியில்லை என்றால் திரும்ப அனுப்பி வைப்பதற்கு) சேர்த்து அனுப்புவதாக வைத்துக்கொள்ளுங்கள். அந்தக் கதையைப் பிரசுரிக்க ஏற்றுக்கொண்டால் தபால் முத்திரையை என்ன செய்வீர்கள்?

ப: நாங்கள் அதனை உபயோகித்துக்கொள்வோம்.

வண்ணகன்ராணி, கிண்டாவேலித் தோட்டம், பத்துக்காஜா

கே: குடித்தே கெட்ட சமுதாயம் என்று ஒன்றிருந்தால் அது நமது சமுதாயமே. இப்படி இருக்க, நம் மலேசிய வானொலியில் இடம்பெறும் கலப்பட நிகழ்ச்சியில் பீர் போத்தல்களைப் பரிசாக வழங்குகிறார்களே!



ப: இது தகாத காரியம். மலேசிய வானொலி அதிகாரிகள் சமுதாய நலனையும் கருத்தில் கொள்வார்கள் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை!

இல. அய்யாத்துரை, பொண்டோலன் தோட்டம், போண்டோக் தஞ்சோங்

கே: பள்ளி மாணவர்களுக்காக "மாணவர் அரங்கம்" என்ற பெயரில் ஒரு சிறப்புப் பகுதியைத் துவக்கினால் என்ன?

ப: இன்னும் எத்தனையோ அரங்கங்களைத் துவக்கத்தான் எண்ணுகிறோம். ஆனால் போதிய பக்கங்கள் இல்லாத குறைதான்.

எம். சக்திவேல், சுவாபெத்தோங் தோட்டம், போர்ட்டிக்சன்

கே: "புதிய சமுதாயம்" பழைய பிரதிகள் வேண்டுமென்றால் அனுப்பிவைப்பீர்களா? இதற்கு எவ்வளவு பணம் அனுப்பவேண்டும்?

ப: அனுப்பி வைப்போம். 50 காசு வீதம் கணக்கிட்டுப் பணம் அனுப்புங்கள்.

கே: புதிய சமுதாயத்தின் பக்கங்களைக் கூட்டினால் என்ன?

ப: மெர்தேகா சிறப்பிதழ் 68 பக்கங்கள் வெளியிட்டோம். அதற்குப் பிறகு வந்த இரண்டு இதழ்களும் முந்திய இதழ்களைவிட எட்டுப்பக்கங்கள் கூடுதலாக 52 பக்கங்களுடன் வந்திருப்பதைத் தாங்கள் கவனிக்கவில்லையா?

குமாரி டி. எம். சுசித்ரா, அண்ட்லி தோட்டம், பந்தாய் ரெமிஸ்

கே: இல்லம் மாறினால் உள்ளம் மாறுமா?

ப: மாற வேண்டுமென்கிற கட்டாயம் இல்லை.

எம். குணசேகரன் மகேஸ்வரி, பாரிட் புந்தார்

கே: அண்ணே, சில தமிழர்கள் தமிழ் தெரிந்தும் ஆங்கிலத்தில் பேசுகிறார்களே. இவர்களைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: இது ஒரு விதமான தலைக்கிறுக்கு!

பெ. இ. கணேசன், காஜாங் தோட்டம்

கே: மகிழ்ச்சியாக நடைபெறவிருந்த ஒரு பெண்ணின் திருமணம் திடீரென்று தடைப்பட்டுவிட்டது. அப்பெண்ணுக்கு உங்கள் ஆலோசனை என்ன?

ப: இத்தகைய இக்கட்டு எந்தப் பெண்ணுக்கும் வரக்கூடாது. அப்படி வந்துவிட்டால் அதற்காக மனம் தளர்ந்து உலகமே இருண்டுவிட்டதாக மயங்கவும் தேவையில்லை. மற்றொரு திருமணநாளை ஆவலோடு எதிர்பார்த்துத் தன் உள்ளத்தைப் பசுமையாக வைத்துக்கொள்வது அந்தப் பெண்ணின் கடமையாகும்.

குமாரி ஆர். ஜெயலட்சுமி, டேவன் தோட்டம், மெர்லிமோ, மலாக்கா

கே: தான் விரும்பக்கூடிய பல பொருளால் பல விபரீதங்கள் ஏற்படும் என்பது தெரிந்தும், அப்பொருளை அடைந்தே திருவேன் என்று பிடிவாதம் பிடிப்பது நல்லதா?

ப: இந்தப் பிடிவாதம் ஆபத்தானது; அறவே கூடாது.

என். சுந்தரி, ஜின்செங் தோட்டம், பாகன் சிராய்

கே: வாழ்க்கையில் முன்னுக்கு வர நாம் எதைக் கையாள வேண்டும்?

ப: சந்தர்ப்பங்களை நழுவி விடாமல் "டபக்"கென்று பிடித்துக்கொள்ள வேண்டும்.

கே: எங்களைப் போலத் தோட்டத்தில் வாழும் பெண்கள், வெளியில் போய் வேலை செய்வதைச் சிலர் தப்பாக நினைக்கிறார்களே...!

ப: அவர்கள் நினைத்துவிட்டுப் போகட்டும் உங்கள் காரியத்தை நீங்கள் கவனியுங்கள்.

பெ. செல்வம் சக்கரவர்த்தி, செலாமா, பேரா

கே: அண்ணே, ஒரு சிலர் தங்கள் காரியம் நடைபெறுவதற்காக நம்மை நாடுகிறார்கள். தங்கள் காரியம் முடிந்த பிறகு நம்மைத் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லையே?




ப: அவர்கள் காரியவாதிகள். நாமும் அவர்களிடம் இதே 'பிளேட்டை'த் திருப்பிப் போட்டால்தான் அவர்களுக்குப் புரியும்.

கே: கடந்த தமிழறிவுப் போட்டி 5-இல், "போதை தருவது எது?" என்ற கேள்விக்கு, 'மது' என்பதுதான் சரியான பதில் என நான் கருதுகிறேன். உங்கள் கருத்து?

ப: "உள்ளக்களித்தலும் காண மகிழ்தலும் கள்ளுக்கில் காமத்திற்கு உண்டு" எனும் குறள், மதுவைவிட மாது பன்மடங்கு போதை தருவது என்பதை உணர்த்துகிறது. ஆகவே எங்கள் விடை சரி என்பதைத் தாங்களும் ஒப்புக்கொள்வீர்களென்று நம்புகிறோம்.

இரா. இராமராவ், தலைநகர்

கே: தமிழனுக்குத் தலைவிதி யாரால் நிர்ணயிக்கப்படுகிறது.



ப: சாட்சாத் தமிழனால்தான் நிர்ணயிக்கப்படுகிறது.

ரா. பாலச்சந்திரன், கோலத்தெர்லா, கேமரன்மலை

கே: என்னுடைய நண்பர் ஒருவர், தன்னிடம் மற்றவர் பேசும்பொழுது கைநீட்டிப் பேசினால் கோபமடைவார். ஆனால் அவர் மற்றவரிடம் பேசும்பொழுது கைநீட்டிப் பேசுவார். அவரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: அவர் தன் கையை மடக்கிக் கொண்டு பேசப் பழகிக்கொள்ள வேண்டும்.

சத்தியவாணி, புக்கிட்டாரா தோட்டம், சுங்கை பூலோ

கே: அண்ணா, என் தந்தை ஓர் ஆசிரியர். அதேபோல் நானும் வருங்காலத்தில் ஓர் ஆசிரியராக வர விரும்புகிறேன். தங்களுடைய கருத்தென்ன?

ப: தங்களின் ஆர்வம் சிறந்தது; நிறைவேற வாழ்த்துகிறோம்.

செல்வராஜூ குமரன், கிள்ளான்

கே: தூய்மையான வாழ்க்கைக்கு அஸ்திவாரம் எது?

ப: சுய கட்டுப்பாடு.

கே. எம். ஜோன் மோகன், சிகாமட், ஜோகூர்

கே: ஓர் ஆண் ஒரு பெண்ணை ஏமாற்றிவிட்டால்,பெண் பாவம் பொல்லாதது என்கிறார்கள். ஆனால் ஒரு பெண் ஆணை ஏமாற்றிவிடுவது மட்டும் முறையாகுமா?

ப: ஓர் ஆணுக்கு ஒரு பெண் செய்யும் துரோகத்தை "ஐயோ பரிதாபம் ஆண்" என்று வர்ணிக்கலாம். இத்தகைய துரோகங்களினால் பெண்கள் பாதிக்கப்படுகிற அளவுக்கு ஆண்கள் பாதிக்கப்படுவதில்லை. அதனால்தான் பெண் பாவம் பொல்லாதது என்னும் வழக்கு எழுந்திருக்கிறது.

ஆர். லோகநாதன், கம்போங் லாவோட், ஸ்கூடாய்

கே: உறவு வந்தால் ஏன் கூடவே பிரிவும் வருகிறது?

ப: உறவும் பிரிவும் சக்கரங்களைப்போல் மாறி மாறிச் சுழல்பவை.

எம். எஸ். ராமுலம்மா அப்பாராவ், சிம்பாங் அம்பாட், ஊத்தான் மெலிந்தாங்

கே: நமது அரசாங்கம் தற்போது எதை முக்கிய பிரச்சினையாகக் கருதுகிறது?



ப: தேசத்தின் பாதுகாப்பை!

எம். முனுசாமி, குளுவாங்

கே: நான் கூடிய சீக்கிரத்தில் திருமணம் செய்ய எண்ணியுள்ளேன். நான் நினைக்கின்றபடியே எனக்கு மனைவி அமைவாளா?

ப: மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்று அமைதியாக இருந்துவிடாதீர்கள். உங்கள் மனையாளைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை உங்கள் பெற்றோர்களிடம் ஒப்படைத்துவிட்டால் பெரும்பாலும் அவர்களின் தேர்வு சிறப்பாகவே இருக்கும்.

தாரா எழிலழகன், சுங்கைவே, கோலாலம்பூர்

கே: பெண்களைவிட ஆண்கள் சிரிப்பில் வல்லவர்கள் என்பது உண்மையா?



ப: சிரித்துக் கழுத்தறுப்பதில் ஆண்கள் வல்லவர்கள் என்பது உண்மையே.

வே. வி. குமார், பிரவுன்ஸ்டன் தோட்டம், ஜெரம்

கே: நான் ஒரு மாணவன். எனக்குத் தாங்கள் கூறும் அறிவுரை என்ன?

ப: அழியாச் செல்வமான கல்வியை நீங்கள் குறைவறப் பெற்று, சமுதாயத்தின் மணிவிளக்காகத் திகழ வேண்டும் என்பதே என் அவா.

கே: ரேடியோ மலேசியா ரங்காயான் மேராவில் ஞாயிறு தோறும் மாலை 3.00 மணிக்கு ஒலிபரப்பாகும் "நாடகம் பிறக்கிறது" என்ற நிகழ்ச்சிக்கு நாடகங்களை அனுப்புவதாயிருந்தால் எந்த முகவரிக்கு அனுப்ப வேண்டும்?

ப: **Penerbit, Kesah dari Lagu, Radio Malaysia, Rangkaian Merah, Kuala Lumpur.**

ராபர்ட் லாவ், சபாவ் தோட்டம், அசகான்

கே: "புதியசமுதாயம்" இதழுக்குத் திருமணப் படத்தை அனுப்பினால் பிரசுரிக்க ஏதும் கட்டணம் உண்டா...?



ப: திருமணப் படங்களை வெளியிட $25.00 கட்டணம் வாங்குகிறோம்!

மு. வ. கோபாலகிருஷ்ணன், சுங்கைப்பட்டாணி

கே: எந்த ஒரு மனிதனும் தன்னுடைய சந்தர்ப்ப சூழ்நிலைகளால் கட்டாயப்படுத்தப்பட்டாலன்றி பிறரை வணங்கி வாழ விரும்புவதில்லை. அது ஏன்?

ப: "நாமார்க்கும் குடியல்லோம்" என்னும் சுதந்திர உணர்வு மனித இயல்பாக இருப்பதுதான் காரணம்.

கே: இழப்புகள், தோல்விகள், ஏமாற்றங்கள் இவற்றின் பின்விளைவுகள் நன்மையாக அமையாமல் ஏன் தீமையாகவே அமைந்துவிடுகின்றன?

ப: முதலில் தீமையாக அமைந்தாலும் பிற்பாடு நன்மையாகவே அமையும்.

எம். சாமிக்கண்ணு, பாரிட்புந்தார்

கே: எம். ஜி. ஆர்., கருணாநிதி, தமிழ்வாணன் இம் மூவரும் கறுப்புக் கண்ணாடி அணியும் மர்மம் என்ன?



ப: இதிலொன்றும் மர்மமில்லை. பெரும்பாலான தலைவர்கள் கறுப்புக் கண்ணாடிக்குள்தான் ஒளிந்து கொண்டிருக்கிறார்கள்.

எம். சுமதி, கோப்பெங்

கே: மினிக்கதைகளை எழுதியனுப்பினால் வெளியிடுவீர்களா?
ப: அவை "மணி"க்கதைகளாக இருந்தால் வெளியிட அட்டியில்லை.

இராமன், குண்டோங் தோட்டம், தங்காக்

கே: உண்மையைப் போன்ற தர்மம் வேறு எது?
ப: ஈகையும் சிறந்த தர்மங்களில் ஒன்று.

குமாரி ஜெயசந்திரிகா, புக்கிட் பிளாண்டோக், சிரம்பான்

கே: களங்கமில்லாத உள்ளத்திற்கும், நல்லதையே எண்ணிச் செய்பவர்களுக்கும், திமிர் பிடித்தவள், ஆணவக்காரி என்ற பட்டப் பெயரெல்லாம் கிடைக்கிறதே ஏன்?
ப: இந்தப் பொல்லாத உலகத்தில் நல்லவர்களுக்கு இத்தகைய "பரிசுகள்"தான் கிடைக்கும். இந்த உலக இயல்பை அறிந்தவர்கள், மற்றவர்களின் ஏச்சுக்களைப் பொருட்படுத்தமாட்டார்கள்.

பி. எஸ். சங்கர் மணியம், சிப்பாங் எஸ்டேட், தைப்பிங்

கே: ஓர் ஆசிரியருக்கு எது முக்கியம்?
ப: தாங்கள் பள்ளிக்கூட ஆசிரியரைப் பற்றிக் கேட்கிறீர்களா அல்லது பத்திரிகை ஆசிரியரைப் பற்றிக் கேட்கிறீர்களா?

கே: மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மட்டும் ஏன் அதிக மணம்?
ப: இது வெறும் மனப்பிரமைதான். சொந்தத் தோட்டத்து மல்லிகையானாலும் மாற்றான் தோட்டத்து மல்லிகையானாலும் ஒரே மாதிரிதான் மணக்கும்.

ரோபர்ட் பாண்டியன், ஜீவாசே தோட்டம், கோலப்பிலா

கே: ஒருவருடைய வாழ்க்கையில் அவர் நினைப்பதெல்லாம் நடந்து விட்டால், அவருடைய எதிர்காலம் எப்படி அமையும்?
ப: அவர் நிதானத்தோடு இல்லாவிட்டால் நிலைதடுமாறி எதிர்காலம் சீரழியவும் கூடும்.

கே: தகுதிக்கு ஏற்றவாறு நண்பர்களைத் தேடிக்கொள்ளும் நபர்களைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?
ப: புத்திசாலிகள்.

ஆர். கே. செல்வேந்திரன், புக்கிட் சீடிங் தோட்டம், பந்திங்

கே: செய்த தவற்றை நினைத்து வருந்துவதினால் மட்டும் ஒருவனுடைய பாவம் மன்னிக்கப்படுகிறதா?
ப: உண்மையாக வருந்தினால் எந்த பாவமும் கரைந்துவிடும்.

மு. ராஜேஸ்வரி, உலுபாம் தோட்டம், ரவாங்

கே: வெளிநாட்டுக்குக் கடிதம் அனுப்புவது என்றால் எத்தனை காசு ஸ்டாம்பு ஒட்டவேண்டும்?
ப: இது நாட்டுக்கு நாடு வேறுபடும்; தங்களுக்குப் பக்கத்திலுள்ள அஞ்சல் நிலையத்தில் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

கே: மனிதன் எப்பொழுது அதிகமாக உணர்ச்சிவசப்படுகிறான்?
ப: துன்பத்தையோ இன்பத்தையோ தாங்க முடியாத தருணத்தில்.

கே: சிலநேரங்களில் பொய்மைக்கும் அதிகம் வலிமை இருக்கிறதே?
ப: சில நேரங்களில் என்பது தவறு. பல நேரங்களில் பொய்தான் வலிமையாக இருக்கிறது.

அப்பாசாமி ஜமுனா, சுங்கை, பேராக்

கே: சார். நாம் மற்றவர்களுடைய கையெழுத்தைத்தான் பார்க்க முடிகிறது. தலையெழுத்தை ஏன் பார்க்க முடியவில்லை?
ப: தலையெழுத்து எல்லாரும் படிக்கும்படியாக இருந்துவிட்டால் மனித வாழ்க்கை உப்புச்சப்பற்றதாகப் போய்விடும்.

கே: ஒரு பேனா முனையின் சாதனை என்ன?
ப: இன்று நாம் வாழ்கிற இருபதாம் நூற்றாண்டின் சாதனைகள் அனைத்துமே ஒரு வகையில் பேனா முனையின் அபாரத உழைப்பின் விளைவே ஆகும்.

ந. பாலகிருஷ்ணன், சுங்கை சோ தோட்டம், ரவாங்


கே: தனது பிறந்தநாளை நான்கு வருடத்திற்கு ஒருமுறைதான் கொண்டாட முடியும் என வருத்தத்தோடு கூறும் எனது நண்பர், தான் பிறந்த நாளை என்னிடம் கேட்கிறார். நான் உங்களிடம் கேட்கிறேன்!
ப: இது ஒன்றும் பெரிய புதிரல்லவே. அவர் லீப் வருடத்தில் பிப்ரவரி 29-ஆம் தேதி பிறந்தவராக இருக்க வேண்டும்.

எஸ். வள்ளி மணாளன், தோங் கின் தோட்டம், மாசாய்

கே: இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு நிம்மதியான எதிர்காலமே கிடையாதா?
ப: அவர்களுக்கு விடிவெள்ளி விரைவில் தோன்றும் என்பதே என் நம்பிக்கை.

அ. அ. டேவிட், பந்தாய் ரெமிஸ்

கே: திருமணத்துக்கு முன் மணமகனின் மனநிலை எப்படி இருக்கும்?



ப: இந்திர லோகத்தில் காலடி எடுத்து வைப்பது போல் ஒரே பதற்றமாக இருக்கும்.

தப்பினேம் ஐயா!



தப்பினேம் ஐயா!

"புத்தகத்தைப் பாதுகாக்க" குறிப்புகள் எழுதிய அன்பர், நல்ல வேளையாக புத்தகத்தைப் படிக்காதீர்கள் என்று எழுதாமல் விட்டாரே, தப்பித்தோம்!

தங்கா — தமிழ்ப்பாணன்

Berdikari

"வழிகாட்டுகிறார் வள்ளுவர்" கட்டுரையில் ஒரு மலாய் வார்த்தைக்குக் கொடுக்கப்பட்ட விளக்கம் என்னைப் பெருங்குழப்பத்தில் ஆழ்த்திவிட்டது. "கொத்தோங் ரோயோங்" என்னும் வார்த்தைக்குத் "தன்கையே தனக்கு உதவி" என்று விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இக்கருத்துக்குச் சரியான வார்த்தை "பெர்டிக்காரி" என்பதுதான் என்று நான் கருதுகிறேன்.

குனுனி தோட்டம், சிலிம்ரிவர் — எஸ். டி. மனே

சிறப்பாக......

"வலியோரும் எளியோரும்" எனும் குறள் விளக்கக் கட்டுரை வெகு சிறப்பாக இருந்தது. பிற அம்சங்களும் போற்றத்தக்க முறையில் அமைந்திருந்தன.

ஜொகூர் ரிவர் தோட்டம் — பி. சாரங்கபாணி

முடத் தெங்குகள்

டாக்டர் மாரிமுத்து அவர்களின் கட்டுரை வரவேற்புக்குரியது. ஆனால் ஆசிரியர்களுக்கான அறிவுரையில் ஒன்றை அவர் விட்டுவிட்டார். இன்றைய பெரும்பாலான ஆசிரியர்கள் தங்கள் பிள்ளைகளைக் தமிழ்ப் பள்ளிக்கு அனுப்புவதில்லை. வாழ்வளிக்கின்ற தமிழ்ப் பள்ளிகளைப் புறக்கணித்து, முடத்தெங்குகளாய் வாழ்கின்ற இப்படிப் பட்டவர்கள் முதலில் திருந்தவேண்டும். கற்றோர்களே நம் மொழி மீது நம்பிக்கையை இழந்துவிடும்போது, கல்லாத எளியோர்களின் மனத்தில் மொழிப்பற்றை எப்படி வளர்ப்பது? சம்பந்தப்பட்டவர்கள் உணர்வது மிக அவசியம்.

ஊத்தான் மெலிந்தாங், பேராக் — ஜி பி. கிருஷ்ணன்

இனிமை

இரு தொடர்கதைகளும் கரும்பாக இனிக்கின்றன. "வேனல்" சிறுகதை அருமை.

ஜொகூர் லாபிஸ் தோட்டம் — அ. பத்மாவதி

நன்றாக இல்லையே!

"தியேட்டர் அதிபர்களே" விசன கவிதை படிப்பதற்கு நன்றாக இருந்தது. ஆனால் அதில் குழந்தைகளைச் "சனியன்கள்" என்று குறிப்பிட்டது அவ்வளவு நன்றாக இல்லை. குழந்தைகளின் மழலையைக் குழலினும் யாழினும் உயர்வாக வள்ளுவரே கூறியுள்ளார். அத்தகைய மழலைமொழியைக் "கூப்பாடு" என்று குறிப்பிட்டதும் அவ்வளவு நன்றாக இல்லை.

ஸ்கூடாய், ஜொகூர் — மு. சுப்பிரமணியம்,

கவிதைகள்?

முத்தான சிறுகதைகள், சுவையாகச் சென்றுகொண்டிருக்கும் தொடர்கதைகள், தமிழறிவுப் போட்டி இவற்றோடு சிந்தை கவரும் பல பகுதிகளையும் தாங்கிவரும் "புதிய சமுதாய"த்தைப் பாராட்டத்தான் வேண்டும். கவிதைகளை நிறைய வெளியிடுங்கள்.

பூச்சோங், சிலாங்கூர் — ஜி. குணசேகரன்

ஆறுதலுக்காக...

சிறுகதைகளான "போதும்", "பக்குவம்" இரண்டும் இருவிதமான சுவையைத் தந்தாலும், பூ. அருணாசலத்தின் கதை, இரு குழந்தைகள் மட்டுமே உள்ள தம்பதிகளுக்குப் பேரிடியாக இருந்திருக்கும் என்றால் பொய்யாகாது. ஒரு குழந்தையையாவது அவர் உயிருடன் விட்டிருந்தால், ஆறுதலாக இருந்திருக்கும்.

ஜெரம், சிலாங்கூர் — மு. இலட்சுமணன்

முதல் நாட்டம்

"வழி காட்டுகிறார் வள்ளுவர்" அற்புதமான படைப்பு. இதழைத் திறந்தவுடன் என் மனம் இக் கட்டுரையையே நாடுகிறது.

கிண்டா வேலித் தோட்டம் — வண்ணகன்ராணி

படித்தால் என்ன?

ஒரு தேசியமொழி மாத இதழை நான் வெகுகாலமாக வாங்கிப் படித்து வருகிறேன். அதன் விலை 60 காசிலிருந்து 80 காசாக மாறி இப்பொழுது ஒரு வெள்ளியாக இருக்கிறது; ஆனால் பக்கங்கள் மட்டும் கூடவில்லை; அதே அறுபது பக்கங்கள்தான். மாதம் இருமுறை வரும் "புதிய சமுதாயம்" இதழை அதனுடன் ஒப்பிடும்போது ஒரு மாதத்திற்குப் "புதிய சமுதாயத்தின்" பக்கங்கள் 104. விலையோ ஒரு வெள்ளிதான். இதன்படி பார்த்தால் "புதிய சமுதாயம்" மிகவும் குறைந்த விலையில் அதிக பக்கங்களுடன் வெளிவருகிறது என்பது தெளிவாகிறது. குடிக்கவும் படம் பார்க்கவும், நடிகர்களைப் பார்க்கவும் செலவழிக்கும் பணத்தில் இதுபோன்ற இதழ்களை வாங்கிப் படித்தால் என்ன?

தமிழ்ப்பள்ளி மாணவர் நிதி ஆரம்பித்து இவ்வளவு காலம் ஆகியும் நம்மால் பத்து இலட்சம் வெள்ளிகூட சேர்க்கமுடியவில்லை. ஆனால் ஒரு தமிழ்ப்படத்திற்கு அறுபதே நாட்களில் பத்து இலட்சம் வெள்ளியை நம்மவர்கள் கொட்டியிருக்கிறார்கள்.

கப்பளா பத்தாஸ், பினாங்கு — மு. சுப்பிரமணியம்

அடுத்த பிறவியில் இவர்கள்....

(மறுபிறவி என்று ஒன்றிருந்தால் அடுத்த ஜென்மத்தில் நீங்கள் என்னவாகப் பிறக்க விரும்புகிறீர்கள் என்று சினிமா நட்சத்திரங்கள் சிலரைக் கேட்டதற்கு அவர்கள் தந்த சுவையான பதில்களின் தொகுப்பு இது).



பத்மபிரியா: மறுபிறவியா? நிச்சயம் நடிகையாகப் பிறக்கக்கூடாது. புதிய கண்டுபிடிப்புக்களைக் கண்டு பிடித்து மனித சமூகத்திற்கு உதவும் ஒரு பிரபல விஞ்ஞானியாகப் பிறக்கவே விரும்புகிறேன்.



தேங்காய் சீனிவாசன்: ஒரு சில தயாரிப்பாளர்கள் இந்த ஜென்மத்தில் பணம் கொடுக்காமல் என் ரத்தத்தை உறிஞ்சியிருக்கிறார்கள். அவர்களது ரத்தத்தைப் பதிலுக்கு நான் உறிஞ்சிக் குடிக்கவே அடுத்த பிறவியில் கொசுவாகப் பிறக்க ஆசைப்படுகிறேன்.



ரஜனிகாந்த்: டைரக்டர் பாலசந்தர் மாதிரி ஒரு சிறந்த டைரக்டராகப் பிறக்க ஆசைப்படறேன்.



ஜெயசித்ரா: பறவைகளில என்னை மிகவும் கவர்ந்தது மயில். அதன் அழகும் கம்பீரமும் தனியானது. அடுத்த பிறவியில் மயிலாக பிறக்கவே நான் விரும்புகிறேன்.



முர்த்தி: நான் ஒரு நாயாகப் பிறக்கணும்னு ஆசைப்படறேன். ஏனென்ருல் அது ஒரு நன்றியுள்ள பிராணி.



கே. ஆர். விஜயா: அடுத்த ஜென்மத்திலும் நான் கே. ஆர். விஜயாவாக இருக்கவே விரும்புகிறேன்.



ஸ்ரீப்ரியா: மறுபிறவி என்று ஒன்று இருக்குமானல் அதில் ஆணுகப் பிறக்கவே நான் விரும்புகிறேன்.

டிம்பளுக்கு நாலு கொடுத்தார்



பிரபல இந்திப்பட கதாநாயகன் ராஜேஷ்கன்னுவிற்கு லண்டனில் ஒரு பட விசியோக நிறுவனம் இருக்கிறது. சில மாதங்களுக்கு முன்பு அவரின் நட்சத்திர மனைவி டிம்பிள் கபாடியா தனியாக லண்டனுக்குப் போயிருந்த சமயம் அந்தக் கம்பெனியிலிருந்து நிறைய பணம் வாங்கித் தாம்தூமென்று செலவு செய்து கொண்டிருந்தார். இதனை அறிந்த ராஜேஷ்கன்னு உடனே லண்டனுக்குப் பறந்துபோய் மனைவிக்கு நாலு கொடுத்தார். என்ன கொடுத்தார்? கன்னத்தில் நாலு அறை!



"நம்ம படவுலகை விட்டுட்டு நீ அமெரிக்காவுக்குப் போகப் போறீயாமே, உண்மையா?"

முத்துராமன், சுஜாதா—படம் 'பலப்பரீட்சை'

நேற்று நீ சின்னப்பாப்பா

இன்று நீ



இன்றைய இளைய தலைமுறை நடிகைகளில் "இளம் மலர்" ஸ்ரீதேவி குறிப்பிடத்தக்க அளவு திரைவானில் ஒளிவீசி வருகிறார். அவர் முதலில் அறிமுகமான படம் தேவர் தயாரித்த "துணைவன்". அதில் அவருக்குப் பால முருகன் வேடம்! வயதுக்கேற்ற வேடம், பால்வடியும் முகம் யார் அந்தப் பாலமுருகன் என்று ரசிகர்களை ஆவலோடு கேட்கத் தூண்டியது.

அன்று அவர் சின்னப் பாப்பா... இன்று அப்பப்பா...! என்ன வளர்ச்சி!

ஸ்ரீதேவி பெரிய நடிகையாக உருவாவார் என்று யாருமே நினைக்காத நிலையில்தான் "மூன்று முடிச்சு" திரையில் நாயகியாக அறிமுகமானார். இயக்குநர் சிகரம் பாலசந்தரின் திறமையான டைரக்ஷனில் வெளிவந்த அப்படம் இவருக்குக் கதாநாயகி அந்தஸ்தைப் பெற்றுத் தந்தது. "பதினாறு வயதினிலே", கவிக்குயில், காயத்திரி ஆகிய திரைகளின் நாயகியும் இவர்தான்!

"எந்த வேடத்தில் நடித்தாலும் அதில் நாம் திறமை காட்டுவதற்கு வழி இருக்க வேண்டும். இல்லையேல் நடிப்பதும் ஒன்றுதான். வீட்டில் இருப்பதும் ஒன்றுதான்!" என்று கூறும் ஸ்ரீதேவியின் பொழுது போக்கு ஓவியம் வரைவது.

உடலைக் கட்டுச் செட்டாக வைத்துக் கொள்வதற்கு நடிப்புத் தொழிலுக்கு முக்கியமான பரத நாட்டியத்தையும் பயின்றுவரும் ஸ்ரீதேவி "கவர்ச்சி என்ற பெயரில் ஆபாசமான வேடங்களில் ஒருபோதும் நடிக்கமாட்டேன்" என்று சொல்லியிருக்கிறார்.

ஆரம்பத்தில் இளைய தலைமுறை நடிகைகள் பலர் இப்படித்தான் கூறினார்கள். ஆனால் நடந்தது வேறு! இந்தத் "தேவி"யின் வாக்குப் பலிக்குமா பலிக்காதா? பொறுத்திருந்து பார்ப்போமே!

—ராஸ்மன்




"எப்படிங்க என் மேக்கப்?"
"ரொம்ப ஹெவியா இருக்கே!"
திரை: இளைய தலை முறை - இணை: சிவாஜி - வாணிஸ்ரீ



நட்சத்திரப் பொன்மொழி:

வளர்க்க வேண்டியது அறிவு; குறைக்கவேண்டியது உணவு. கட்டுப்படுத்த வேண்டியது நாக்கு.


சொன்னவர்: மனோரமா



"பொறந்தாலும் ஆம்பளையா பொறக்கக்கூடாது - ஐயா பொறந்துவிட்டா பொம்பளையை நெனைக்கக்கூடாது".
மனோரமாவிடமும் சி. கே. சரசுவதியிடமும் மாட்டிக்கொண்டு தவிப்பவர் விஜயகுமார்.
திரை: துணையிருப்பாள் மீனாட்சி

நாடெங்கிலும்
எம். ஆர். ராதாவின்
நாடகங்கள்

தமிழக மக்களின் ஏகோபித்த
பாராட்டுக்களைப்பெற்ற
இந்நாடகங்களைக்காண
கடைசி வாய்ப்பு. விரைந்து வாரீர்.



சுங்கைப்பட்டாணியில்
10-10-77 இரவு 8 மணிக்கு இரத்தக்கண்ணீர்

மலாக்கா, ஜாசினில்
13-10-77 இரவு 8 மணிக்கு இரத்தக்கண்ணீர்

மலாக்காவில்
இரவு 8 மணிக்கு இரத்தக்கண்ணீர்

தெலுக்கான்சனில்
15.10.77 இரவு 8 மணிக்கு இரத்தக்கண்ணீர்

தைப்பிங்கில்
16.10.77 இரவு 8 மணிக்கு இரத்தக்கண்ணீர்

சித்தியவானில்
17.10.77 இரவு 8 மணிக்கு இரத்தக்கண்ணீர்

நடிகவேள் எம். ஆர். ராதா குழுவினர் மலேசிய சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு விரைவில் தமிழ்நாடு திரும்பவிருப்பதால் நாடகங்களை மற்ற ஊர்களில் எடுத்து நடதத விரும்பும் ஏற்பாட்டாளர்கள் உடனடியாக கீழ்க் குறிப்பிட்டுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளுமபடி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

எங்களின் அடுத்த படைப்பு
தென்னக கோபி கிருஷ்ண
ராஜ் குமார்
வழங்கும்
இந்தியாவின் கவர்ச்சி நடனங்கள்

இந்நிகழ்ச்சியை மேடையேற்ற விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

V. குணாளன், 12 Lengkok Cumarasamy,
3 3/4 Mile, Jalan Ipoh, K. L.
Tel: 671042